கிருஷ்ண பிள்ளை ([illegible])

இராமாயண நாடகம்,

T.D.K.C. 3848

R.R.No 105-1.1

5892MKP 5,T
M77

116234

3249

ஸ்ரீராமஜெயம்.

# தமயந்திநாடகம்.

தஞ்சைமாநகரம் - ம - ள - ள - ஸ்ரீ

சொக்கலிங்கதேசிகர்

மாணாக்கராகிய

ஒ. தஞ்சைமாநகரம் - ம - ள - ள - ஸ்ரீ

கிருஷ்ணபிள்ளையவர்களால்

இயற்றியது

105 / 1-77

இஃது

சிதம்பரம்

பாலையானந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

மார்க்கபுரம்

முத்துசெட்டியாரால்

தமது

சுகவிரஞ்சனிமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௯௰ பிப்ரவரி மீ

11628
O,892 MKPS, T
M77

உ

கடவுள் துணை.

# தமயந்தி நாடகம்.

## விநாயகர் துதி.

### காப்பு.

நேரிசை வெண்பா.

சத்தமிகுமாநிடதத் தான்நளனைமாலையிட்ட
நற்றமயந்திச்சரிதை நாடகமா - யுற்றுணாக்கத்
தங்குமுமையோர்பாகன் சங்கரனீன்றகரித்
துங்கமலர்த்தாளே துணை.

விருத்தம்.

திங்களெனும்பதுமமலர்ப்புயத்தோனெட்டுத்
திக்குமன்னர்வணங்கவெகுசெயத்தோன்வீற்றிச்
சிங்கமெனுநிடதநகர்தன்னில்வாழுந்
தீரபதிச்சத்ரபதிச்செங்கோனீதித்
துங்கநளச்சக்ரவர்த்திச்சரிதைதன்னைத்
துதித்திடவேயங்காலந்தும்பைசூடுங்
கங்கையணிசங்கரனீன்றசத்திக்
கணபதிபொற்பாதமலர்காப்பதாமே.

## ஈசுவரர் துதி.

சக்கரத்தாற்புவியனைத்துமொருகுடைக்குளாண்டநளச்சக்கரவர்த்தி
தக்ககதைநாடகமாம்முக்யமிகுஞ்செந்தமிழாற்றயிவேன்கூற
மைக்கடலிற்பிறந்துவருமிக்கவிடமுண்டுமழுமானையேந்தி
கங்கனெனும்புரமெரித்தமுக்கணன்றன்பதமனதினாடினேனே.

## முருகர் துதி.

நிடதநகர்தனக்கதிபன்றுதிவேலாற்கருதலர்தமெஞ்சினோட்டிக்
கடல்சூழ்ந்தபுவிமுழுதுமொருகுடையிலாண்டநளன்கதைதனைப்பாடத்
தொடியிடைத்தெய்வானைவள்ளி தனையிருபாகத்தில்வைத்துத்துலங்குவை
வேற்கொடியுடன்கொண்டயர்மயில்வருமுருகனிருபதத்தைச்சென்னி
சேர்ப்பாம்.

திருமால்துதி.

வாலமதிபோலுருத்தற்றமயந்திக்கினியமணவாளனான
சீலமிகுநிடதநகராண்டநளன்சரிதையினைச்செப்பநூன்றல்
மூலமெனவோலமிடுவேழமினைக்காத்தருளுமுகில்மெய்போன்ற
வேலைடுத்துயின்றதிருமாலிருபாதாம்புயத்தைவேண்டுவேனே.

ஈஸ்வரிதுதி.

நிதிபெருகுமதுரைதனிலிருந்துமதனைகடந்திடதர்கோமான
நதிபெருகுஞ்சரிதையிதன்விதமதனைச்செந்தமிழாற்சாற்றுதற்கு
மதிமுகமுங்கரகமலவரைத்தனமுந்துடியிடையும்வடிவுபோன்ற
துதிபெருகுமலைமகடன்மலரிணையடியேயநுதினமுந்துணையதாமே

சரஸ்வதிதுதி.

நிலமாதுதிருமாதுதனதுடையவசமாகிருத்தநீதி
நலமானபதிமேவுநிடதநளன்சரிதைதனைநவிலப்பாரிற்
புலமானகலைநூலின்பொருளாகநின்றிலக்கிப்புவியிற்கூறுங்
கலைமாதுதிசைமுகனின்பூங்கமலத்தாளிணையைக்கருதுவேனே.

நூலாசிரியர்.

கங்கைகுலந்தனிலுதித்தசொக்கலிங்கதேவென்சொல்நனிகடன்மிற்
பிங்கலமாலனைநளராஜன்மனையாளைவிட்டுப்பிரிந்தபின்பு
கொங்குலவுவனவேடன்றனையெரித்ததமயந்திக்குறைநகர
மங்களமுற்றுளகவியுமவர்சிடன்கிருஷ்ணபிள்ளைவருத்தாரே.

அவையடக்கம்.

பஞ்சிதன்சொற்பநுவலினைப்புலவர்வஞ்சிக்கதிர்மதியார்பதுமைக்கைவா
ய்விஞ்சையர்சொன்னூலையாப்புன்மொழிகொண்டின்பமுற்றுவிளங்கி
யானும்மிஞ்சுபுகழ்நளன்சரிதைதனையறியேன்மூதுரைசொல்விரும்பிவெ
ண்மைமிஞ்சொன்மொழிதனையறிஞர்விலர்சொற்பிழைபூமிதெனவியம்
பிடாரே.

பாயிர - முற்றும்.

தோடையம்-நாட்டைராகம்-சம்பைதாளம்.

புவனமுழுதொருகுடையி - லணிந்துசெங்கோல்தான்செலுத்தும்
புஜபலநளன்சரிதை - யிசைதனைக்கூற
பவனியதுவருமூடி - காருடனணிசிவ
பாலனுமையருள்விக்நேஸ்-பாண்பாதந்துணையே. (செயசெய)
நீதிநெறிதவறும-லாதிநெடுமால்பதமும்
நேயமுடன்றுதிநிடத-நிருபன்புகழுரைக்க
தாதவிழுங்கடப்பமலர்த்-தாரணியும்புயமுருகன்
சரவணபவனகமலத்-தாளிணைதுணையே. (செயசெய)



செந்திருவைநிகரழகு - சுந்தரஞ்சேர்தமயந்தி
தேவிமணவாளன்புகழ் - ஆவலுடன்றுதிக்க
சந்ததமுந்தொண்டர்முன்னே-வந்துவரந்தந்துன்ப
தாமனெழில்பெருமேனி - வாமனடித்துணையே (ஜெயஜெய)

மங்களம்.

தரு-இ-ர்-பந்துவராளி- ஆதிதாளம்.

மங்களம் நளேந்திரனுக்கு மங்களம்-
மதிமுகத்தமயந்திக்கு மங்களம்
பங்கயக்கண்மாயனுக்கும் பார்வதிநேயனுக்கும்
சங்குசக்ரதாரனுக்கு மங்களம்-நித்ய
சர்வதயாபரர்க்கு மங்களம்
திங்களணிவேணியர்க்குஞ் செய்யமழுபாணியர்க்கும்
மங்கையுமைபாகனுக்கு மங்களம்-கொன்றை
மாலையணிவாகனுக்கு மங்களம்
ஓதுமறைவேதனுக்கு முற்றகலைமாதினுக்கும்
சீதளராஜனுக்கு மங்களம்-யாவும்
சிருஷ்டிக்கும் ரக்ஷகனுக்கு மங்களம்
வாரணமுகவனுக்கும் வல்லபைக்கணவனுக்கும்
சூரசம்மாரனுக்கும் ஜெயமங்களம்-பசுந்
தோகைமயில்வீரனுக்கும் சுபமங்களம்

பொது-அகவல்.

பூதலம்புகழும் புராதனராஜன்
நீதிசேர்மன்னன் நிடதநாடுடையோன்
சந்திரகுலத்தான் சக்ராயுதத்தான்
தந்திரபதத்தான் சகலநேர்புயத்தான்
ஆனைமொட்டகமு மசுவமாரதமுஞ்
சேனைகளுடனே மிகுந்ததண்டிகையும்
அவனியோர்க்குடையா னறிவொன்றுடையான்
மனைதவம்படையான் வசிகரமுடையான்
ஐம்பத்தாறுதேச மிருக்குமன்னவர்கள்
திண்மையாய்வந்து தான்புனைந்துசூழ
கவிராயர்பாடக் கட்டியங்கூற
சுவாதந்திரமாய் கலைமுடனிறைந்த
சிங்காசனத்தில் ஸ்ரீநளராஜன்
மங்களக்கிரீட வர்த்தனராகி
ஆச்சிரியமாக வரசுசெங்கோலால்
ராச்சியபார நடத்துமந்நாளில்
வேட்டையில்விருப்பி வேந்தனுங்கண்டு

காட்டிலில்லாத நல்லன்னப்பக்ஷியை
தூதுக்குவிட்டுத் தோகையையிணக்கிச்
சேதிகள்வந்து ஜெயமென்றசொன்னார்
இந்திரர்களெல்லா மினிதூதுவிட்டுச்
சந்தேகமாகத் தானவர்சென்றார்
சுயம்வரமாய்வீமன் சுந்தரப்பெண்ணும்
தமயந்திதனக்குத் தான்கலியாணம்
ராச்சியமன்னரில் நளமகாராஜன்
ஆச்சரியமாக வப்போதேவிவாகம்
கருத்தின்படியே கலியாணஞ்செய்தார்
இருவருமிடநாட்டினுக்கிவர்வந்து
நளபூபாலனலமருமைமைந்தனை
வளமையாய்ப்பெற்று மருவுநாளில்
இந்திரன்சொல்லா லேழரைநாட்டான்
வந்துமேபுஷ்கரன் வடிவாளன்றான்
சொக்கட்டாடித் தோற்றிடச்சிறுமைச்
சிக்கியேயிமையைச் செல்லெனக்காட்டில்
மைந்தரைத்தன்னுட மாமிக்கேயனுப்பி
நிந்தையுமிருந்துகலிசென்றனர்வனத்தில்
மறித்தன்னப்பக்ஷி மன்னவன்புடவையைப்
பறித்திடுநாளும் பாவையுமொருதுகில்
உடுத்தியேதுயின்று ருணைவிழியாமல்
புடவையையிழித்துப் போகவேயரசன்
அரவங்கடிக்க வப்பாலயோத்தி
தருவிதுபாணன் சமுகத்திலக்கு
சுயம்பாகஞ்செய்துத் தலைக்கிடந்தாலும்
பயந்தேமுழித்துப் பார்த்திடமங்கை
புருஷனைத்தேடிப் புலம்பித்திருக்கச்
சரீரத்திற்சர்ப்பந் தான்வந்துசுற்ற
வேடனுங்கண்டு வெட்டியேபாம்பைக்
கூடவேமையல் கோதையமேற்கொண்டான்
பக்கமேநெருங்கப் பதிவிருதாடன்
அக்கினியாலே யவ்வேடனெரிந்து
வேதவியாசர் திருமாசிரம
மாதராவாக வனாடம்விட்டோடி
செட்டிவந்தடுக்கச் செட்டியையானை
முட்டியேகொல்ல மொழிக்குழலாளும்
திருமாலதனைவே சேவித்துவணங்கி
வணிகரைமுழுப்பி வந்தனள்சுவாகு



தாயார்வீட்டிற்றானவள்வந்து
வாயாற்புலம்பி மதிமிகக்கலங்கி
தானொருவனென்றுந் தான்பெயரிட்டு
வேலுஞ்செய்து விருக்குமாகாளில்
தந்தையும்வீமன் றன்புரோகிதரைத்
தேசங்களெங்குந் தேடவரவென்று
வந்தவர்கண்டு மாதுக்கிரண்டாங்
கலியாணசுயமாகு னங்கமாய்நாட்டி
வலியவேயப்போது மன்னவனறிந்தான்
ராஜாவிறுட்டனே நளமகாராஜன்
ஓசையாய்த்தேர்விட் டூர்கலிதுலைய
விதர்ப்பதேசத்தில் மேவியிருக்கத்
தப்புளமொழியாள் தமயந்திகண்டு
வணங்கியேயழைக்க மன்னவனானும்
இணங்கிலெனவே யீசனுமுமையும்
வேதனும்வந்து விரவியேகாக்ஷி
யாதாவாய்த்தவ மளித்தருள்செய்ய
பகர்களன்மாறும் பதியெதுவிட்டு
நகரதுபுகுந்து நல்லபுட்கரனொடு
மறுசூதாடி வாழ்வெலாஞ்செலித்துத்
திறனவமணியொளி சிம்மாசனத்தில்
கலமுடனிருந்த நமிழ்தமூன்றாலே
நாடகமாக ஓய்கமலவாய
முணாத்திடுந்தபிழை புகழுடிவளவும்
கம்மேலெழுத்தாய்க் கவிப்புலவோர்கள்
சொற்பிழைதிருத்திச் சொல்வதுகணமே.

பொது - விருத்தம்.

பொன்னினவமணியிழைத்தமௌலிதோன்றப்
புதிதுறதற்றிலதாமதிபோலிநால்வாய்க்
கன்னமதமொழுகுதிருமுகமுமைந்து
கரமதிலங்குசபாசங்காணவேந்தி
பன்னுமறைமூன்றாலாயமணமாட்டப்
பாசம்பொன்றுடையுமிலங்கப்பதாம்புயத்தில்
வன்னமணிக்கிண்கிணியுங்கலகலென்ன
வாலகணபதிசபையில்வருகின்றாரே.

விநாயகர்வருகிறதரு-இ-ராகம் மத்தியமாவதி-ஆதிதாளம்.

ஆதிவிநாயகர்வந்தார்-ஆகுவிலேறி-ஆதிவிநாயகர்வந்தார்.
காதல்நளன்சரிதை யோதுமதுபோதினை (ஆதி)
சாதலையுடன்காக்கப் போதமெல்லோருப்பார்க்க

வானவர்புலர்தாவ வணங்கிவந்தென்னைத்தாவ
கானமொழிகள்கூவக் கனகசபையைமேவ (ஆதி)
மும்மதத்துடனசோதி மூச்சுடர்தனக்கதி
நன்மைதருநீதி நளன்கதைக்குநற்புதி (ஆதி)
சோதிமகுடமின்னத் துலங்குமணிகள்துன்ன
நீதியாய்நடந்தின்ன நிறைந்தசபைக்குமுன்ன (ஆதி)

பொது விருத்தம்.

தட்டிச்சல்லடக்காரன்முடிக்காரன்
சரிகைமுண்டாசிக்காரன்சால்வைக்காரன்
பட்டநாமத்திலதப்பொட்டுக்காரன்
பச்சைக்கல்முருகுவண்டிக்கடுக்கக்காரன்
இட்டவெள்ளித்தடிக்காரன்கேலிக்காரன்
இன்பநயஞ்சொல்லவெகுகெட்டிக்காரன்
கட்டழகுபெற்றநளராஜன்வாசற்
காக்குமெழிற்கட்டியக்காரனும்வந்தானே

கட்டியக்காரன்வருகிறதரு-இ-ம்-பூரிகலியாணி-ஆதிதாளம்.

கட்டியக்காரனும்வந்தானே-நளேந்திரன்வாசற்
கட்டியக்காரனும்வந்தானே
கட்டியக்காரனும்வந்தான் நாட்டமிக்கவிருந்தான்
அட்டதிக்கெங்குஞ்சுகந்தர விட்டமுப்பெருகத்தந்தான் (௧)
நீடியசிறப்பக்கோலும் நாடியேகொண்டுமென்மேலும்
தாடியும்வாயிற்சால்போலும் கூடியசபைமுன்னாலும் (கட்டி)
சரிகைமுண்டாசிக்கட்டி வெருவக்கண்ணைமிரட்டி
மருவுங்கச்சையுந்தட்டி யிருகவிகித்துக்கெட்டி (கட்டி)
பாரினில்மிகுந்தமோடி வீரநளனைக்கொண்டாடி
ஆரபாரத்துடனாடி பூரிகலியாணிபாடி (கட்டி)

(வ-ம்.) அகோதெப்படியென்றால் ராஜாதிராஜ ராஜமார்த்தாண்டரா ஜவுத்தண்டராஜகெம்பீரராஜ கோலாகலராஜதுரந்தரா நவகண்டங்களு ம் ஒருகுடைக்கீழாளப்பட்ட நடச்சக்கிரவர்த்தி மகாராசாவே அரிபக்த சிரோமணியான மகாராசனேபராக்பராக் எச்சரிக்கை.

பொதுவிருத்தம்

ஒப்பமாயன்பத்தாறு தேசமுமொருகுடைக்கீழ்
திக்கெங்குஞ்சக்கரத்தாற் செலுத்தியமன்னர்க்கொற்ற
தப்புடன்றடியுடன்கொண்டு தலைதனிற்கணைக்குக்கட்டுஞ்
செப்பமாயலங்கரிக்கச் செய்வீரசாம்புவன்வந்தான்

வீரசாம்பன்-வருகிறதரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

வீரசாம்பனிதோவார-வேடிக்கைப்பாரும்
தெரியவாய்விட்டுக்கூவித்-தெருப்புடனெழுந்துதாவி (வீரசாம்)



மாட்டுக்கும்பெருஞ்சூரி-மடியிற்செருகி மீறி
பாரிக்கள்ளுண்டுவாய்நாறிப்-பண்புடனுருமிக்காறி (வீரசாம்)
சொத்தைப்பல்லுங்கண்ணீர்ப்பூளை சொரிந்துவழியுங்கோழை
மெத்தவாயினுற்படித்துச் சுற்றிக்கொண்டேறாயடித்து (வீரசாம்)
தம்பட்டமடித்துக்கொண்டு காமினனவாறொன்று
கும்பிட்டுக்கும்பிட்டுநின்று-கோணவாயைமெண்ணுக்கொண்டு ()

கட்டியன்-வசனம்

அடாவடா வெட்டியாரப்பயலே நம்மிடங்கண்டபதியாகிய நளச்ச க்ரவர்த்திமகாராஜா கொலுவுக்கு வருகிறபடியினலே வெள்ளிவாழை பொன்வாழை மகுடதோரணம்பூரணகும்பம் வைக்கும்படிக்கும்வீதிஅ லங்காரஞ்செய்யும்படியாகவும்தமுக்கடித்து எச்சரித்துவாரும்வீரசாம் பனே.

வீரசாம்பன்சொல்-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

இருக்கிறவர்கள்திட்டம்போடுங்கள்-நல்ல
இட்டமுட்னேசெய்துவையுங்கள்
வெள்ளிவாழைத்தோரணங்கட்டுங்கள்-நன்றாய்
வீதியலங்காரஞ்செய்யுங்கள்
பந்தல்விரிவாகப்போடுங்கள்-மிக்கப்
பருத்தவண்ணஞ்சோலை-கட்டுங்கள்
பூரணகும்பங்கள்வையுங்கள்-மணப்
பூவாலேயலங்காரஞ் செய்யுங்கள்
மங்களசோபனம்பாடுங்கள்-மகா
ராஜனுக்கிவ்வாறுசெய்யுங்கள்

பொது-விருத்தம்.

மதிமுகமுந்திருமுடியில்மகுடமின்ன
மவைமகரகுண்டலமுஞ்செவியிற்றுன்னக்
கதிதருகுர்புயவலோ முத்தாரஞ்செம்பொற்
காந்திதருஞ்சிவாத்மமாலைபூண்டு
விதமுடனேயங்கிதமான்சாதமுவும்
விளங்காலக்கரத்துவிலேவில்லுமேந்திச்
சதுரடன்கட்டியங்கூறமரையோர்வாழ்த்தச்
சக்ரவர்த்திநளராஜன் சபைவந்தானே

நளராஜன்வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

நளமகாராசேந்திரன் வந்தான்-ஜெகம்புகழும்
நளமகாராசேந்திரன் வந்தான்
தளபதிமந்திரிகள் கூடத்
தத்தைமொழிமாத ரீட
வளமிகுநன்னிடதமாநகர்தன்னில்வாழும்
களபமுங்கஸ்தூரிபுயபுளகிதவின்தாரவ (நளமக)

சங்கிரவட்டக்குடை தாங்கவே-யிருபுறமுஞ்
சாமரைசுருட்டி யோங்கவே
வந்துமன்னர்திரை தேங்கவே-வந்தனையுடன
மானிலத்தோர்கலி நீங்கவே
பைந்தமிட்கவிஞர்கள்விருதுபதங்கள்பாட
அந்தமிகுந்தஜய துந்துபியொலிமீட
ஆர்த்திடுந் சேனைவணங்கப்
பார்த்திபரெல்லாம் வணங்க (நளமக)

ஆரணப்புகழ் நீதியே-மறையோர்சொல்லி
ஆசிமகிழ்ந்திட வோதியே
பூரணகும்பங்கள் சோதியே- செழிக்கவிதம்
பூவுலகெங்கும்பிரக் யாதியே
ஆரணங்குட நல்லத்தாரணித் தனங்களும்
வாரணம்பரியுடன்காரண மாகவெங்கும்
மாமறையாளர்க்கு நித்தம்
நேர்முகமாகக் கொடுத்த (நளமக)

கதிர்மணிமகுடஞ் சூட்டியே-தகதகெனக்
கனகபொற்பணிகள் பூட்டியே-சிங்காரகவ
மதனென்னுஞ்சம்பிரமக் கட்டியேஷியிலுடனே
வந்தனநயம்பா ரட்டியே
சுதியுடனேதோடி யிதமுடனேபாடித்
துதிக்குமணமகிழ்ந்து மதிக்குந்தயவுகந்து
சுந்தரப்புயவு தாரப்
பைந்தருவெனுங்கெம் பீர

நளராஜன்சொல்-விருத்தம்.

சென்னியிற்பாகணிந்து திகழ்நற்பணிகள்பூண்டு
நன்னயநமதுவாசல் நயந்தகட்டியனேகேளாய்
சொன்னயமிகுந்தமந்திரி சுமுகனையின்றுநீயும்
மன்னியசமுகந்தன்னில் வருகவேயழைப்பிப்பாயே

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்மிடமதிபூதிமந்திரியை அதிசீக்கிரத்திலழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன்சொல்-விருத்தம்.

சிலமுங்குலவுநீதி தெளிந்தநல்லறிவுமூன்று
காலமுங்கருதியோதுங் கருத்துளவமைச்சனோ
ஞாலமேபுகழுங்கீர்த்தி நவகண்டநளராஜேந்திரன்
கோலமாஞ்சமுகந்தன்னிற் குணமுடன்வரச்சொன்னாரே

வசனம்.

அகோசரணஞ்சரணமையாசுவாமி தேவரீரவர்களை நளச்சக்கிரவர்த்திமகாராசாவானவர் கொலுவுக்குவரச்சொன்னாரையாசுவாமி.



பொது-விருத்தம்.

தேசமெனுமன்பத்தாறுதனைத்தன்கைத்
திகிரியினாலடக்கியென்றுசெங்கைவேலோன்
நேசமெனுமுறைதவறாதவனியாண்டே
நிதியுதவுந்தனபதியாம்விடதர்கோமான்
வீசுபுகழ்பெருகிவளர்போசராஜன்
விஜயமார்த்தாண்டனெனும்வெற்றிவேந்தன்
வாசல்வளர்மதிபூதிமந்திரிமன்னர்
மன்னர்பணிநளன்சமுகம்வருகின்றாரே.

மதிபூதிமந்திரிவருகிற-தரு-இராகம்-தன்யாசி-ஆதிதாளம்.

வந்தனன்மதிபூதி மந்திரி-நளேந்திரன்சபைக்கு
வந்தனன்மதிபூதி மந்திரி
செந்திருமேவிய விதைதவிடதராயர்
தந்திரமிகுமதி மந்திரிசபையதனில் (வந்தனன்)

வெற்றிமகுடஞ்சொர்ண அஸ்தக்கடையமின்ன
சுற்றியாதர்கள்தன்னின் நத்துக்கீதங்கள்பன்ன
சத்திரமிகுந்தன்ன சதரபதியின்முன்ன
தத்துவமுயர்கன்ன சித்தசனிவனென்ன (வந்தனன்)

அங்கிகிசார்மாட்டி தங்கப்பணிகள்பூட்டி
துங்கமலர்கள்சூட்டி தங்குங்கீர்த்தியைகாட்டி
பொங்குந்தந்திரங்காட்டி சங்கமிகவேகூட்டி
செங்கமெனவேமேட்டி வெங்கும்பகையைவாட்டி (வந்தனன்)

ஆசையதனைநீடி வாசமலரைச்சூடி
நேசமுடனேகூடி பேசுமதுரம்பாடி
தேசமந்திரிகோடி பேசவந்தென்னைத்தேடி
வீசிநடந்துமோடி ராஜன்சபையைநாடி (வந்தனன்)

மதிபூதிமந்திரிசொல்-விருத்தம்.

புவனமீரேழுமோங்கப் புரவலர்வணங்கிப்போற்ற
அவனியோர்குடையிலாளு மண்ணலேயரசர்கோவே
நவமணிமாலைமார்ப நரேந்திரமகிபாயென்னை
யுவகையாயழைத்தசெய்தி யுரைசெய்வீர்சரணந்தானே

(வ-ம்) அகோசரணஞ் சரணமையாசுவாமி நளச்சக்ரவர்த்தி மகாராயாவரே தேவரீரவர்கள் அடியேனை யழைப்பித்தகாரிய மின்னதென்று அருள்செய்யவேண்டுமையாசுவாமி.

இராஜன்சொல்-விருத்தம்.

மதிதனிலதிகமான மந்திரிசொல்லக்கேளாய்
அதிபதிமகுடதாரி யரசர்கோன்மற்றுமுள்ளோர்

சதிர்குணபதியின்மேவுஞ் சகலருஞ்சுகங்கள்தானே
புதியதாய்நமதுவார்த்தை புகலுவாய்ப்புகலுவாயே

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் மதியூகிமந்திரியே நம்முடைய ஐம்பத்தாறுதேசத்து ராஜகூட்டங்களும் நிஷதாபுர மாதியந்தரமும் அன்னசத்திரமுதலானதுகளும் தேவாலயம் விஷ்ணுவாலயமும் செவ்வையாகவும் சுபசந்தோஷகாமாகவும் யிருக்கிறார்களா பார்த்துவந்து சொல்லும்பிள்ளாய் மந்திரியே.

மந்திரிசொல்-விருத்தம்.

நவகண்டமதனையாளு நளமகாராஜனேகேள்
சிவன்செயலாலேயிந்தத் தேசத்திலுள்ளோரெல்லாஞ்
சவுக்யமூன்கிருபையாலே தானவிருக்கிறார்கள்
சுபமடியேனுங்கூடத் துணையுந்தன்சரணந்தானே

(வ-ம்) அகோ சரணஞ் சரணமையாசுவாமி நவகண்டபதியாகிய நளச்சக்ரவர்த்தி மகானுபாவரே சுவாமியினுடைய கிருபையினாலும் தங்களுடைய ஆக்கினை சக்கரத்தினாலும் அடியேனும் ஐம்பத்தாறு தேசத்து ராஜகூட்டங்களும் நிஷதாபுர மாதியந்தரமும் தேவாலயம் விஷ்ணுவாலயமுதலானதும் அன்னசத்திரமும்சுபமாய்நடந்துவருகுதையாசுவாமி

இராஜன்-வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் மந்திரியே நம்முடைய பிராணபதமாகிய தமயந்திதேவியை நம்மிட சமுகத்திற்கு வரும்படி திட்டஞ்செய்துவாரும்பிள்ளாய் மந்திரியே.

மந்திரி-வசனம்.

அப்படியே மகாபாக்யமையாசுவாமி.

தமயந்தி சிறப்பு அகவல்.

காரணிகூந்தல் காழ்தருமலரின்
தாரணிபின்னல் சடைப்பில்லைநாகம்
பகல்மதிப்பிறையும் படரொளித்தாள
நகைமுகமதனில் நற்பணிதுலங்க
நவமணிச்சுட்டி நன்னுதலிலங்கத்
தவழ்மதிநுதலிற் றகிவெயிலெரிப்பக்
காதினிலணிந்த கதிர்மணிக்கொப்பு
சோதிமாணிக்கத் தோட்டுவிளங்க
பத்தரைமாற்றுப் பசும்பொன்னிழைத்த
முத்துமூக்குத்தி முழுநிலவென்ன
மங்கலந்திகழு மாணிக்கமுத்தணிந்த
தங்கவட்டிகையின் றன்னிகேமின்ன



அந்தசந்திரா மழுதிபபவழுக்
சொத்துமல்லிகையுங் கொப்பினிற்சூட
சாமிந்திரநீலச் சரப்பளிபதக்க
மருவியமோகன மாலையும்பொன்னின்
வம்பணிமாலையேல் வயங்கெழிலியங்க
அம்புயமலரி னஸ்தமுதாரி
கங்கணச்சூடங் கலைமதிவயிரச்
செங்கையில்வளையுந் திகழ்விரலாழி
புனைந்திடுவங்கிப் பொன்பாசுபந்து
வனைந்ததாயித்தி மணியெழில்காட்டத்
துய்யபொற்சரிகை துகிலணியின்ழ மின்
னுதயலினிடையிற் றகதகவென்ன
மேகலையிரத்னம் விளங்குமொட்டியாணந்
தேகம்பசும்பொற் றிருவழகிலங்கத்
தண்டைச்சிலம்பு சதங்கைகள்கொஞ்ச
மண்டொலிபொங்க மலர்ப்பதமெட்டியும்
மானினைவிழியாள் மலர்க்கரமேந்தத்
தானடையிலுஞ் சாதியன்னம்போல்
பரிமளசுகந்தப் பனமலர்மாலை
மருவுகஸ்தூரி மான்மதமணிந்து
வாடையெங்கெங்கு மலிமணம்வீச
ஆடவர்மயங்க வமரருந்தியங்க
நாமகளிந்திரா நங்கையர்துதிக்குங்
காமனுமிரதியுங் கைதொழுதேற்ற
விஞ்சையர்கீத மிகுந்துகொண்டாட
நஞ்சுசெறுங்கண்ணார் நாட்டியமாட
தாளமத்தளஞ் சல்மண்டலங்கள்
மேளவாத்தியங்கள் மிகவுமேமுழங்க
இருபுறங்கவரி இணையிருந்தோங்க
அருள்வயர்பாங்கி யாலத்தியேந்த
மினனொளிவென்ன மிகுதமயந்தி
தன்னகர்கிடைத் தளனெதிர்வந்தாள்.

பொது-கொச்சகம்.

அம்போருகிந்தநுத லால்வயிறேகொன்கைகரிக்
கொம்போவமுதமொழிக் கொண்டனிகரோகூந்தல்
செம்பூதலாதிபதித் திரனளராஜனுடன்
சம்போகாஞ்சிதஞ்சேர் தமயந்திவந்தனளே

தமயந்திவருகிற-முடுகுவிருத்தம்.

கருமுகிலையனையகுழலணியுமலர்சமகமெனகனகமதிகதிரொளிசெய்
இருகுழையுநவமணியுமுகமதியுமிகமிகெனவிலகுதுடியிடைதுவளவே

முருகுபரிமளகளப மொளிருமிறைவடமசைய முலேயொளிர வருபதுமைபோல், திருவளரமரர்முநிவர் மனமுருகியெதிர்பரவு தையல்தமயந்திவந்தாள்.

தமயந்திவருகிற-தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

அதிரூபசிரோமணிவந்தாள்-தமயந்திதேவி
அதிரூபசிரோமணிவந்தாள்
மதிகதிரொளிரத்ந மாலேத்தகதகென
அதிவிதமகுண பதியெனப்புகழ்மிகத்
தூதிநடனுயர்சபை தனிலுமகிழ்ந்திட (அதிரூப)
செங்கைவளே குலுங்கவே - மெய்யிலணிந்த - நெற்குபணியிலங்கவே
கொங்கையிணேகுலுங்க - வேலச்ரமணிமுக் - குத்தியொளிவிளங்கவே
செங்கைதனிற்பூச்செண்டு சிந்தைமகிழ்வுடன்கொண்டு
மங்கையர்சூழ வணங்கியேதாழவும்
இங்கிதமாமயில் தங்கமெய்போலுயர் (அதிரூப)
காலிற்சதங்கைகொஞ்சவே- கடந்தலேக்கண்டு - கார்முகிலினைமிஞ்சவே
பாலினுமொழிகள்மிஞ்சவே- மன்னருங்கண்டு- மயிலுநடைக்குக்கெஞ்ச
வாலமதிப்பிறைபோலேசினநுதலின் மேலே [வே
மணமுயர்திலதமும் புனைகுழல்விரிமென
இணையொருவருக்கு மிலேயெனமலருமுக (அதிரூப)
உபயசாமரைவீசவே-மாதர்கள்வினமு-வுகந்துவயுங்கள் போலவே
சுபப்பன்னீரொளிகூடசவே-சவ்வாதுபன்னீர்-சுகந்தமாதர்கள் பூசவே
சபையர்ப்புகத்தைநாடிச் சரிகைப்பட்டாடைசூடித்
தலமதுபெருகிய திருநளபதிவளர்
சபையினிலழகிய தமயந்தியெனுமெழில் (அதிரூப)

தமயந்திசொல் - விருத்தம்.

வங்கணத்தோழிமாதே வஞ்சிசர்க்கரையேமான
சிங்காரவல்லிமாதுந் தேன்மலர்க்காசிநற்கிப்
பங்கயமுல்லேவாசுகிப் பாரிசாதங்கள்கொய்து
இங்கிருபேருமாக விகுவோம் வருதவாயே

தமயந்தியும் தோழியும் பந்துவிளேயாடுகிற-தரு
இ-ம்-யமுனுகல்யாணி- ஏகதாளம்.

வாரும்வாருஞ்சகிமார்களே - விளேயாடுவதற்கள்
வாரும்வாருஞ்சகிமார்களே
சீருடனமல்லிகை முல்லேயிருவாட்சி
சேர்ந்திருங்கொன்றை மலரிச்சிவந்தியும்
பாரிலுயர்ந்த மருவுங்கொழுந்தும்
பார்ந்தவனத்திற் படர்ந்துவிளேயாட
சித்திரப்பந்து மிருக்குதுகையிலிற (வாரும்)
தேன்மொழிப்பாருடன் சேர்ந்திருக்கு



கந்திருமிக்கின்ற பசுந்தணமுங்கொண்டு (வாரும்)
நங்கையரோனாமு மிகுந்தமாகவே
கொண்டலுலாவிய தென்னேப்பனேகளும்
கொழிஞ்சிநாரத்தையுங் கொய்யாப்பிலாவுடன்
அண்டர்தூதிக்கின்ற பாதிரிப்புன்னே (வாரும்)
வரசுப்புரசும் வரிசையதாகவே
மாடப்புறக்கொண்ட ளரத்திக்கிளிகள்
மயில்கள்குயில்களும் வாழும்வனந்தனில்
ஓடத்தடாக மிருக்குதுபசுகிகள்
ஓடிவிளேயாடி வேடிக்கைபார்க்கலாம் (வாரும்)

தமயந்திசொல்- வசனம்.

சதுர்த்தசபுவன சமஸ்தமான தேவரும் புகழ்ந்துகொண்டாடத் தக்கதாக வனதுமிரபல பிரதாபசக்ரேஸ்பரா சரணஞ்சரணம் அடியாளே இந்தராஜசபையி லழைப்பித்தகாரியம் இன்னதென்றருள்செய்ய வேணுமையாகுவாமி.

தமயந்திசொல்-தரு-இ-ம்-தோடி-திரிபுடைதாளம்.

என்னேயுமிங்கேயழைத்ததே தையா-என்பிராணநாதா
என்னேயுமிங்கே யழைத்ததேதையா
சொன்னமுடிமன்னர் தொண்டுசெய்தேதொழுந்
தாழ்வரிகரில்லாச்சக் ரவுசுபூபாலா (என்னே)
மூர்த்திவருங்காலமுங்கண்டுமந்திரிகேள்-லோகநீதியுங்கொண்டு
மூடிவணங்கிமொழியுந் சபைதனிலே-சாமி
கந்தகஸ்தூரி கமழும்புயாசல
செந்திருமேவிய நிரவொய்யாரனே (என்னே)
எண்மேனுதேசத்திராஜகோட்டிகளும்வந்தன்பாதம்போற்றி
யிணைஞ்சுபாவித் தொழுஞ்சபைதனிலே-சாமி
புண்ணியனேநளா பூபதியேமன்று
யெண்ணமில்லாமலே யெந்தன்சகியுடன் (என்னே)
வித்வசனர்கண்டுமேவியமாதர்களும்-அபிநயமும்பாத
விந்தைபுரியுமுன் தன்சமூகந்தனில்
இத்தனைநாளு மிலாமலென்றன்-சாமி
சித்தமகிழ்ந்துத் தெரிவையர்களுடன் (என்னே)

இராஜன்-விருத்தம்.

கன்னலேமயிலேமானே கற்பகக்கனியேதேனே
வுனேயிங்கழைத்தசெய்தி யுண்மையாயுரைக்கக்கேளாய்
பன்னகமணிமாடத்தின் பளவுகண்ணுடிதன்னில்
அன்னப்பக்ஷியைக்கண்டுன்மே லாவலாயழைத்தேன்பெண்ணே

வசனம்- அகோவாரும்பெண்ணே தமயந்திநம்முடையசபாமண்டபத்திலிருக்கிறபலக்கண்ணுடியிலே அன்னப்பக்ஷியினிட மிழலானதை

சியவர்தது அதிரூபலேரதுன்பேரில் அபேக்ஷையாக அழைத்தேனடி பெண்ணே,

பொது-விருத்தம்,

தங்கப்பிரகாசமான சந்திரமண்டபத்தில்
விக்கிரமாதித்தன்போ லேகாசனமதிலிருக்க
மங்கையாகத்தமயந்தியு மருவியமஞ்சமீதிற்
சங்கிதனாராஜேந்திர னயனமேசெய்கின்றாரே

தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

சயனமதுசெய்தாரே-நளமகாராஜேந்திரன்-சயனமதுசெய்தாரே
கயல்விழித்தமயந்தி கனகமடிதனிலே (சயன)
கின்றநதிசொரிவிசேஷமாம்-கூலசொரூபவழகுநாண
நிறைநிறை பொருகோடி
மரகதமணிவச்ர-வைடூரியத்துலையமிழைத்த
மலர்ப்பணிப்பலகை சேர்த்து
மதிமிசிந்திரையொளிக்குட் செய்தமண்டபங்கோடி (சயன)
அரவமணியிருந்த-தீபங்களினாலே
யலங்காரஞ்செய்து
பாவியாகவ தீபமணந்தும் குலைக
பத்திபத்தியா கோடி
கருமுகிற் குழல்சேகன்னிகையரிதிச விளங்க
ஆயிரத்தெட்டுமாத்தரத்-தங்கச்சங்கிலியிருந்த (சயன)
வழகுபஞ்சணை
ஆயமலர்ப்பூச் சொரூசாய்த்தழும்பணைமேற் யாட
சுகந்தவாசனை
கயமித்தமயந்திசகியினுடன்சேர்ந்து மூடி (சயன)

பொது-விருத்தம்.

உத்தமிதமயந்திப்பெண் ணுடன்மகிழ்ந்தமூசத்தரசி
மெத்தனதயிலிருந்திவாசெய்து வோக்சயங்களைவுகண்டு
சித்திரமயனாதல்சீமந்தி தேவிகன்முகத்தைப்பார்த்துக்
கொத்தவனராஜேந்திர னடுவானகூறுவானே

இராஜா-கனவுகண்ட-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி

திரிபுடைதாளம்,

கனவுகாண் கண் டேனே-அடிபெண்ணே
கனவுகாண் கண் டேனே
மனமகிழ்ந்தின்பமை யோகத்துடன்கூடி
மஞ்சத்தி லிருந்திரை செய்புர்பொழுதனில் (கனவு)
சர்க்கவென்னவல்செய் புஷ்கரராஜன்வந்தென்னுடனேசூதாடவும்
பார்க்குளுயர்மிடத பதிசெல்வமரசையும்
பகதியுந்தனிற்றோக்கவும் அடிபெண்ணே



கார்குலவும்விதர்ப்ப தேசந்தனிற்செல்லவென்
காதலன்றனை யுனதுதந்தைமுன்
னேவிடுப்படி யேகடந்திட (கனவு)
வனந்தனிலேநாமிருவருமாய்க்கூடிமனந்தளர்ந்தேகிடவும்
இனம்பிரிந்ததுபோலு மனந்தனைப்பிடித்திட
வெனத்துயில் போய்விடவும்
கன்கொள்கதிர்மறைந்த இரவிலோர்மட்டத்தினிற்
கன்னியுனைப்பிரிந் துனையரவொடு
பினனியனலது தன்னில்நடந்திட (கனவு)
கதிக்கும்ரிதுபன்னன்பால் விதிக்கும்வேலைகள்செய்து காலம்நான்போக்[கிடவும்
மதிக்குமுயர்வதன மானேயுனக்குமறு
மணமென்றுகேட்டிடவும்
பதிக்குள்ளுயர்விதர்ப்ப தேசந்தனிலெல்லோரும்
பருதிமணிமுடி கருத்தியணிந்திட
வுறதிகிடதான னகரிலிருந்திட

இராஜன்-வசனம்.

அகோவாரும்பெண்ணே தமயந்தியேதோர்நான் புஷ்கரராஜாவினிடமாகச் சூதாடிநம்மிட அரசும்பதியுமிழந்து போனதும்நாமிருவரும்வனத்துக்குப்போனதும்ஒருவரையொருவர் பிரிந்ததும்உன்னைப்பாம்புவந்து சுற்றிக்கொண்டது நான்ரிதுபன்னராஜாவினிடமாக யேவல்பணிவிடைசெய்துக் கொண்டிருந்ததும், மறுபடிநாமிருவரும் பட்டாபிஷேகஞ் சூட்டிக்கொண்டதும், இப்படிக்கு விபரீதகாலங்களாய் சொற்பனங்கண்டேனடிபெண்ணே,

தமயந்தி-விருத்தம்.

சூரனேநளேந்திரபூபா சொற்பனங்கண்டாலென்ன
நாரணன்கிருபையாலே நமக்கொன்றுமஞ்சுகாதையா
வீரனேகினவல்லாமல் வேறினியில்லையெந்த
ஞூருயிர்ப்பிராணநாதா கவலையுமகற்றிடீரே

வசனம்-அகோ சரணஞ்சரணமையாசுவாமினதுபிராணநாயகனேவிலைபட்டகாயத்துக்குகாயங்கட்டுகிறவர்களுமுண்டோ ஆனதினாலேதேவரீரவர்கள் ஒன்றுக்கும்விசனப்பட வேண்டாமையாசுவாமி.

பொது-விருத்தம்.

துளிர்மதுசுகந்தமாது சொருகுகுந்தளவேற்கண்ணாள்
தளபதிகளினைக்கூடித் தரித்துவயிற்றிற்கர்ப்பம்
வெளிரிடமுகந்தனக்கண் மிகக்கறுத்திடைபெருத்துக்
கிளிமொழிதமயந்திப்பெண் கெர்ப்பமாய்வருகின்றாளே

தமயந்திகெர்ப்பமாய்வருகிற-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

கெர்ப்பத்துடனே வந்தாளே-தமயந்திதேவி
கெர்ப்பத்துடனே வந்தாளே

அற்புதமடமர்த் ரனர்தம்பேர் ரூழவே
பொற்புள்ளமதனரதி பொன்பணி தாழவே
பொங்கமதாய்வெகு மங்கையர் நடமிட
விங்கிதவனமெனத் திங்களி னாந்துள (கெர்ப்ப)
திருகுசங்கிலிகுப்பிச் சொருகுங்குழல்கள்சோர
மருமலரணிந்துபொன் மதிமுகம்வேர்வைசாரப்
புருவங்களைவளைப்பப் புதியதாம்வெளுப்ப
பொங்குசெழுங்கனி யின்சொலதாகவே
துங்கமுடன்பெறு சங்கையில்லாமறு (கெர்ப்ப)
தோகைமயிலைப்போலுந் தேகம்பசுரப்புந்
தோன்றும்விழியின்சுவை வேண்டிமனம்விரும்பும்
வ கனமேர கினியென்ன லோகநாயகியின்றாள்
வஞ்சியின்மிஞ்சியே செஞ்சொல்தருநகுயில்
குஞ்சரமும்பயி லுஞ்சரிநடையென (கெர்ப்ப
புடைத்துப்பணைத்துவிம்மித் தடித்திருமாதுதங்கக்
குடத்திருமுலைநுனி யடர்கறுப்பெனுமணி
வடத்திலைவயிற்றுன்னிப் பிடித்துத்துடித்துக்கன்னி
யங்களகமிகு செங்கதிரொளியென
வந்தருபுதல்வனை யங்கருள்புரிந்திடும் (கெர்ப்ப

பொது-விருத்தம்.

பருத்திருதனத்தாளான பைந்தொடி தமயந்திக்குத்
தரித்ததுவயிற்றிற்கர்ப்பந் தவத்தினலெண மகிழ்ந்து
கருத்தினில்நளன்சீமந்தக் கலியாணஞ்செய்யவெண்ணிப்
பொருத்தமேபார்க்குநல்ல புரோகிதரழைவென்றாரே

பொது-விருத்தம்.

அஞ்சாமலருணகாலமாற்றினிற்றீர்த்தமாடி
நெஞ்சுடன்காயஸ்திரிகள் நேமமாய்முடித்துக்கொண்டு
சஞ்சிதப்பழுப்புச்சோமனுற்பாடிபூணூலிட்டுப்
பஞ்சாங்கஞ்சொல்லும்வேதப்பிராமணர்வருகின்றாரே

பிராமணர்வரு-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

வாசநான்மறையோன்வந்தானே பஞ்சாங்கஞ்சொல்ல
வாசநான்மறையோன்வந்தானே
காசினியோர்புகழ் போஜதுரந்தரன்
ராஜனளேந்திரனுக்கு நேசமங்களஞ்சொல்ல (வசா)
கையினிற்பஞ்சாங்கம்பிடித்து - பிற்மமந்திரக்
கற்பனைவிடாமற்படித்து
செய்கலையன்புதொடுத்து - வாரக்கிரகங்கள்
சித்திக்குஞ்ராசிகளெடுத்து



துய்யகாமந்தானணிந்து சுத்தமாய்ப்பூணூற்புனைந்து
பையப்பையவேநடந்து பத்மபாதாரம்பினைந்து (வாச)
அக்ஷதையாவர்க்குந்தரித்து-ஆசிர்வதித்து
அனந்தசாத்திரமுங்குறித்து
மெச்சியேமகிழ்ந்துபூரித்து துளபமாலை
மெய்யினிலணிந்துபாரித்து
நச்சரவினிற்றுயிலும் நாரணமுகுந்தநந்தா
அச்சுதகோவிந்தாவென்று அனந்ததோத்திரங்கொண்டு (வாசா)
ஓமஎக்கியங்கள்செய்யவே-தர்ப்பைகள்கொண்டு
ஓதுமந்திரங்களுய்யவே
பூமலர்தேவர்கள்பெய்யவே துந்துமியார்ப்பப்
புண்யவசனங்கள்செய்யவே
சோமசூரியகுலமன்னன் தோகைதமயந்தியர்க்கு
மாமணஞ்செய்யநாலோத மகிழ்வுடன்சபையில்வேத (வாச)

(வசம்.)அகோசிரஞ்சீவி ஆசீர்வாதமையாநளச்சக்ரவர்த்திமகானுபாவரே நம்மையழைப்பித்தகாரியம் இன்னதென்று சொல்லவேணும்மகாராஜனே.

இராஜன் வசனம்.

அகோசரணஞ் சரணமையாசுவாமி நம்முடையபட்டபூதேவியாகியதமயந்திக்கு ஐந்துமாதம்கெர்ப்பமாய்வருகிறபடியினாலேசீமந்தமுகூர்த்தஞ்செய்யவேணும் ஆனபடியிலே நாள்முகூர்த்தம் பார்த்துச் சொல்லவேணுமையாசுவாமி.

பிராமணன் விருத்தம்.

நீரனேநளராஜேந்திர ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்ய
வாரமுங்கிரகராசி வளர்திதிநட்சத்திரங்கள்
சீருளதேவியின்று செம்மையாயிருவருக்கும்
பூரணமானயோகம் பொருத்தமாயிருக்குதையா

(வ-ம்) அகோவாருமையா நளமகாராஜாவே நாளதுமாதம் ஏழாந்தேதி சுக்கிரவாரம் அமரபக்ஷம் சப்தமிதிதி அஸ்தநக்ஷத்திரங் கூடியசுபதினத்தில் ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்யலாமையா ராஜனே.

பொது-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

சீமந்தக்கலியாணஞ்செய்தார்அந்தத்தேவர்கள்பூமழைபெய்தார். (செக
வீமன்றனதுசொல்பாரித்தார்
வேந்தர்கள்தன்மனம்பூரித்தார்
மாமந்திரபீடிகை யாமந்தச்சூடிகை
வற்னமணிக்கொடி பன்பணித்தூணேட்டி

தாமந்தசீலமாகூக்கோமளச்
சம்பிரமமாடத்திற் பொன்பயில்கூடத்தில் (சேர்ந்த)

| | |
|---|---|
| சித்திரச்சாலைகள் | சோடித்தார் - மணி |
| முத்திரச்சாலை | முடித்தார் |
| சுற்றிலுமணிமாலைத் | தூக்கினார் - புட்பந் |
| சுகந்தபரிமளத் | தூக்கினார் |
| பத்திபத்தியாக | வாலாத்தியேந்தியே |
| பங்கயமலர்விழி | நங்கையர்நடமாட |
| உத்தரதேசாதி | வர்த்தனர்மகிழவும் |
| ஓமங்கள்வேதியர் | தூபங்கள்செய்யவே (சேர்ந்த) |
| மங்கைக்குவார்குழற் | பின்னினார் - மணி |
| வாளரவச்சுட்டி | பின்னினார் |
| கொங்கைக்குவாரமுத் | திருக்கினார் - மணிக் |
| கோவைவடங்கள் | பெருக்கினார் |
| செங்கைக்குச்சூடக | முன்கைக்குப்பொன்வளை |
| இங்குலிதிற | யிலகமுத்தியே |
| பங்கயபாதத்திற் | தண்டைச்சிலம்பிட்டுப் |
| பச்சைநற்சுட்டிகைப் | பாடகமுமித்தியே (சேர்ந்த) |
| சொர்ணமணிமுடி | சூட்டினார் - தங்கத் |
| தய்யசிஜாங்கி | மாட்டினார் |
| வர்ணப்பதக்கம் | புனைந்தார் - சேர்ந்த |
| வாண்டசல்லாது | திமிர்த்தார் |
| தன்னமைசுடர்வடி | வான்கைபிடாடவே |
| சந்திரவட்டக்குடை | நன்னிழலாடவே |
| மன்னர்க்குமனை | வானோர்கிரன்தமயந்தி |
| மங்கைக்குஞ்சோபன | மங்களம்பாடவே (சேர்ந்த) |

பொது - விருத்தம்.

சேர்ந்தமானபின் தேசமன்னவருஞ்சென்றார்
வீமராஜேந்திரன்றானும் விதர்ப்பதேசத்திற்போனார்
தாமரைமலர்முகத்தாள் [illegible]பலினைக்தமரதம்
சேமமாய்நிறைந்த[illegible]செபு கேவருந்[illegible]வாலே.

தமயந்தி-பிரசவவேதனைபடுகிற- தரு-இராகம்-[illegible]-ஆதிதாளம்.

[illegible]செய்குதே[illegible] அடிபாங்கி - [illegible]செய்வேன்.

| | |
|---|---|
| அன்னமேயென்மயிர்முமஞ்சுதுயெனயமா | வுப்வேன் |
| சிற்றிடைநோகுதே யடிமாதே செப்புவா | யிதே |
| மெத்தநீச்சண்டி வலிக்கு தித்தனைப் | போதே |
| அனையனைக்குது துடைநடுக்குது அன்னமே | பாங்கி |
| இளையளவுஞ்சகிக்கலாயோ வென்மனந் | தாங்கி |



| | |
|---|---|
| அடிவயிற்றை மிகவலிக்குது அம்மம்ம | தாயே |
| அடிக்குதேபிள்ளை யுள்வயிற்றிற் சுருசுரு | பாங் |
| படபடென்றுடல் நடுங்குதென்னடிபாங்கிசகி | மாரே |
| உடலமெல்லாம் நோகுதென்னடி தாதிசகி | மாரே |
| தன்னிலைவுமற்று தெனைமணந்தாளா இல்லை | சம் |
| மன்னவரிடமாய்ச்சொல்லி வந்தாலுப | காரம் |

பொது-விருத்தம்.

சட்டமாய்த்தலைநரைத்துத் தாள்வாயுமூக்குநீண்டு
வொட்டியவயிறுமார்பி லுத்தோல்முலையுமாட
அட்டலட்சுமிக்கொப்பான வணிதமயந்திமுன்னே
செட்டியாய்த்தடியுமூன்றிக் கிழவியுந்தோன்றினாளே

மருத்துவக்கிழவிவருகிற-தரு-இராகம்-அடாணா-ஆதிதாளம்.

| | |
|---|---|
| நரைத்தலைக்கிழ நாயகி | வந்தாள் - மருத்துவம்பார்க்க |
| நரைத்தலைக்கிழ நாயகி | வந்தாள் |

உரைத்தடியையூன்றி-வொட்டகம்போலேகூனி
பிரைப்புந்திகைப்பாய்நின்று-பிருமிக்கொண்டு (நரைத்தலை)

இருக்குமுடனெவர்க்கும் வருத்தமில்லாமல்பேறும்
பிறந்தபிள்ளை
பார்ப்பேன்

| | |
|---|---|
| உருக்தெரியாமல்மூடும் | கருத்தகிரந்தியெல்லாந் |
| | பச்சிலைமூலிகை |
| தீர்ப்பேன் | |
| மருந்துவகைகளெலாந் | தீரத்துடனேபிடுங்கிச் |
| | தரித்தபின்னே |
| சேர்ப்பேன் | |
| வயிற்றில்மரித்திடினுஞ் | தாக்ஷியில்லாமற்பெறக் |
| | சேதமில்லாமல் |
| காப்பேன் | |
| கன்னிமார்களுக்கொரு | வின்னமில்லாமல்வருஞ் |
| சன்னிசயித்யமெல்லா | முன்னறிந்தெரியுமென்று (நரைத்த) |

நெற்றுச்சுரைக்கினையாயொர்ற்றிடுந்தோற்பைமுலை
தலைநடுங்கிக்
யாடத்
தூற்றிருமலுடனே சற்றுங்கூப்பரிந்து
சங்கையில்லாமல்
வோடச்
மெத்தவயதெனவே புத்திரர்பேரன்வினை
கொள்ளைபோல்
யாடக்
ஒத்தகண்களிற்பீளை மெத்தவடிந்துபாணி
கிழமேலுமாய்
யோடக்
லோர்த்துச்சடலமெங்கும்
பார்த்துத்தமயந்தியை
பூத்தனுளுமபஞ்சுக் கோர்த்துமிகவெளுத்து (நரைத்த)

கருத்துவக்கிழவிசொல்-விருத்தம்.

அன்புள்ள தமயந்திப்பெண் ணென்னையேசொல்லக்கேளாய்
முன்பெறுதலைச்சனுக்கு மிகுதியாய்வலிகள்தோன்றும்
பின்பெறும்பிள்ளைக்கெல்லாம் பேதையேவலிதோனுது
தன்செயலாலேவுந்தன் சஞ்சலந்தவிர்த்திடாயே

வசனம்- அகோவாருமம்மாதாயே தமயந்திதேவிமுன்னம்பிறகபசாலத்திலே அதிகவேதனையாயிருக்கும் ஆனதினால்தாங்கள் சஞ்சலப்படாமல்சுவாமியை நினைத்துக்கொண்டிருமம்மாதாயே.

சேபத்தியம்.

தயங்குதேயென்மனந் தாருமோவம்மணி
சடலமோவேதனை தாங்கவெளிதோ
மயங்குதேபுத்தியு மலர்விழிகளிருளுதே
மைந்தனும்நெஞ்சினி லேறுகம்மா
பயங்களுண்டாகுதே பாவிநானென்செய்வேன்
பதருதேயுடலுநொந் துருகுதம்மா
நயங்களாய்ச்சொல்வதும் நாட்டினிலெவர்களும்
நடுங்கவேசெய்கால விடங்களம்மா
தைரியமென்பதுசொல் தாயுமில்லையே
குயின்மொழித்தாதிகள் குழந்தையெனது
வயிர்விடத்தின்னமும் வருவதில்லையே
செயல்துணைவருந்தாயுமான செல்வமே

உ-வது-பிரசவேதனை-புலம்பல்-தரு-இ-ம்-புன்னாகவாராளி.

ஏகதாளம்.

ஐயையோநானென்னசெய்வே னடிவயிறளைக்குது
ஆற்றமுடியுதில்லையே
செய்யாதுஞ்செய்யுதெந்தன் சித்தமுங்கலங்குவதுந் சகிமாரே
தெய்வகற்பனைத்தானோடி
உற்பனமாகியகெர்ப்ப மிப்படிவருத்துமென்று அம்மமாரே
வுளவுநானறிகிலேனே
பொற்புளமடந்தையர்கள் புத்திரப்பிறசோபமன்றிப் சகிமாரே
பூவுலகிலாருமுண்டோ
காலனென்பதாகுமிதைப் பாலகனென்றேமொழிந்தாற் சகிமாரே
காரணமீதென்னசொல்வீர்
மேலெல்லாம்வலிக்குதையோ விஷம்போலேறுதேயென்கும் சகிமாரே
வேதனைகடினமாகுதே
தேகமுநடுங்குவதுஞ் சித்தமுங்கலங்குவதுந் சகிமாரே
தீரமருந்தறிவீரோ
கோகிலமாமொழியேயென குலதெய்வந்தனைவேண்டிக் சகிமாரே
கொண்டுஇருநீறணிவீர்
சகிமாரே



பொது விருத்தம்.

அதிகமாய்ப்பிரலாபித்தே யருமைதன்கர்ப்பமுத்திக்
கதிரவனொளிவைப்போலக் கற்பித்தான்பிரமதேவன்
சதிர்பெறுந்தமயந்திப்பெண் சஞ்சலமிகவுந்தீர
மதிகுலம்விளங்கவேதான் மைந்தனும்பிறந்திட்டானே

தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பாலகன்பிறந்தானே சுபதினத்தில்-பாலகன்பிறந்தானே
கோலகளன்மகிழக் குவலயமேபுகழச்
சீலன்குலம்விளங்கச் செயபேரிகைமுழங்க (பாலகன்)
தத்தைமொழியாள்கண்ணைக் குத்துமுலைப்பாலுண்ணச்
சித்தமகிழ்ந்துகூவி மெத்ததமயந்திதேவி (பாலகன்)
விராதானப்நளராஜன் மிகுதியாய்த்தானங்கொடுக்க
அரசனுந்தழிகவே யிரவலர்பெருகவே (பாலகன்)
விதைதந்திகுலத்தில் சிந்தைமகிழ்ந்துதித்த
கந்தனெனவேசொல்லும் சந்திரனைவேநல்ல (பாலகன்)

விருத்தம்.

மைந்தனும்பிறந்தானென்று மன்னவனளாவேந்திரன்
முந்துமியார்ப்பவெங்குஞ் சோடசதானமீந்தார்
மைந்தற்குந்தமயந்திக்கு மஞ்சனீராடச்செய்துப்
புந்தியுமகிழ்ந்துமாது புகழ்ந்துதாலாட்டினாளே

தமயந்திதாலாட்டுதல்-தரு-இ-ம்-கொண்டா-ஆதிதாளம்.

ஆரா ராராரோ ஆரா ராரா ராராரோ
ஆரா ராராரோ ஆரா ராரா ராராரோ

தங்கமுடியணிந்து-எந்நாளும்-தழைக்கும்புவியனைத்தும்
செங்கோல்செலுத்திவரும்-நடேந்திரன-செல்வமேகண்வளரீர் (ஆ)
இந்திரர்வானவரும்-புகழுநல்ல-விளமயில்போலவனாரும்
சந்திரகுலந்தழைக்க-வந்துதித்த-தங்கமேகண்வளரீர் (ஆ)
தெள்ளமுதேயினிக்கும்-மதுரம்-தெகட்டாதமுக்கனியே
வள்ளல்நளேந்திரனார்-மகிழ்ந்திடும்-மைந்தனேகண்வளரீர் (ஆ)
மண்டலந்தோர்மதிக்கும்-நவரத்ந-மரகதமேதேனே
கொண்டல்மணிக்குயிலே-மயிலே-குழந்தையேகண்வளரீர் (ஆ)
ஆலைக்கரும்பமுதே-சங்கீத-அரும்பொருளேயெனது
மாலைமணிவிளக்கே மயிலேயென்ன-மைந்தனேகண்வளரீர் (ஆ)
ஏக்கம்பிடியாமல்-குழைந்தையென்-றில்லையென்றெண்ணாமல்
பாக்கியமானதுபோல்-வந்துதித்த-பாலனேகண்வளரீர் (ஆ)
மெத்தவருந்தவோநான்-சலித்து-மெலிந்துயிர்வாடாமல்
அத்தனருளதனால் வந்துதித்த-வையனேகண்வளரீர் (ஆ)
பாரிலுள்ளோர்புகழ-ராஜாக்கள்-பணிந்திடக்கீர்த்திபெற்ற
வீரசேனன்றன்-பேரனெனவந்த-மெய்யனேகண்வளரீர் (ஆ)

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் நளச்சக்ரவர்த்தி மகாராசாவுக்குப்புத்திரசந்தான முண்டானபிறகு சகலதேசத்து ராஜக்களும் மகிழ்வதாக நாமதேயமிட்டு வித்தியர்ப்பியாச முதலானதுகளுஞ் செய்விக்கச்செய்து மனமகிழ்ச்சியா யிருக்கிறகாலையிலே புஷ்மாநகராளப்பட்ட புஷ்கரராசாதன் கொலுவுக்கு வருகிறவிதம் எப்படியென்றால்.

பொது-விருத்தம்.

இக்குலின்மாரனென்ன விருபுறங்கவரிவீச
மைக்குழலிரதியெற்ற மாதர்கள்நடனஞ்செய்யச்
சொற்கவிராயர்பாடச் சூழ்ந்துமந்திரிகள்போற்றப்
புஷ்கராராஜதீரன் புனிதனபோற்கொலுவந்தாரே

புஷ்கராராஜன்-கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-அடாதாளம்.

இந்திரனுமிவனென்னவே எல்லோருமகிழவெகு
தந்திரன்புஷ்கராராஜன் சபைதனில்வந்தனனே
சுந்தரஞ்சேர்முகமிலங்க விந்தைரத்நமுடி துலங்கத்
துங்கரணசிங்கமோகா மெங்கும்புகழ்வையேபோக
வச்சிரமணிப்பதக்கமின்ன வளைகள்வெயில்பரக்கக்-குழை
மகரமணிக்குண்டலங்க ளதிலமெங்குஞ்சிறக்க
கச்சைப்படைக்கலமுங் கையில்வடிவாளுமசை-வுயர்
கான்மயில்வீரனைப்போல் திரோகவொளிமிறக்க
நற்சாவமணியிழைத்த பொற்சரிகைத்துயிலணிந்து
நளினமின்னார்நடனமாட நாவலர்களிசையாட (இந்திர)
ஆனைரதகெஜதுரகஞ் சேனைபுடைசூழத்தினம்
அமைச்சர்மதிமந்திரிமா ரடியிணை யினிற்றுழத்
தானதிசைப்பிகுந்த சந்திரகுலத்திலகனென்னுந்
தத்துபரிமீதுலவுஞ் சித்திரவில்விசயமிகும்
செந்திருவாழ்மடமாது சிறந்துவிளையாடவிந்தத்
தேசமெங்குமிவன்புகழைத் தினந்தினங்கொண்டாட
மூந்தவருஞ்சபைபலத்தால் முயாச்சியெங்குங்கூடவெகு
மூர்க்கத்துடனெதிர்த்தமன்னர் முறிந்துப்பயந்தோட
சுந்திரநளராஜனுடன் பந்தயச்சூதாடிவென்று
தொல்லுலகமுழுதாளும்வல்லவனரோந்திரபதி (இந்திர)

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் புஷ்கரமகாராஜாவானவர் கொலுவுக்குவந்த சமாச்சாரந்தெரிந்து சூரியபகவா னுடையபிள்ளையான சநியீசுவரபகவான் புஷ்கராராஜாவினிடமாக வருகிறவிதம் எப்படியென்றால்.



பொது- விருத்தம்.

புனிதன்மாலயனீசர்க்கும் புகழ்தங்கைக்கதிரோனுக்கும்
சனிதிசையிந்திரனுக்குஞ் சகலசீவாத்மாவுக்கும்
இனிரிஷிசெற்பத்துக்கு மேழனாநாட்டாரன
சனிபகவானும்வந்து சபைதனிற்றோன்றினனே

சநிபகவான்வருகிற-தரு-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

குவலயம்நடுங்கிடச் சநிபகவானிதோ கோபமாய்த்தான்வந்தார்
தவமுனிவர்களொடு ரிஷிகளிந்திரன்முதல்
தானவர்வானவர் மானமொடுங்கிட (குவல)
நீலமந்திரக் கோலும்-பருத்தவுடல்
சூலவுந்தியும் காலும்
சூலமுந்தண்டு கோலும்-நெத்தியிலிட்ட
நாமமுங்கர நாலும்
ஞாலமுந்தியங்கிட நான்முகன்மயங்கிட
வேலனுமிரண்டிட வியலனுமருண்டிட (குவல)
ஈசனுங்கைலை விட்டே-சுடலையில்
வாசமுந்துயில விட்டேன்
பூசுரன்றலையைப் புட்டேன்-மலைப்பாம்பாக
வாசவன்றனையும் விட்டேன்
பாசமோடியமனைப் பாரில்விழுகவென்று
கோசிகனைப்புவியில் குன்றச்செய்குவனென்று (குவல)
மனக்கவலையுங் நிர்ப்பேன்-துதிப்பவர்
வாழ்வுபெற்றிருக்கவைத்தே கார்ப்பேன்
நினைக்கவுமறி யாதபுல்லர்களை
நீசர்க்கடுமையாக்கி பிரியாத
அனைத்துலகுங்... யாளவைப்பேனேவென்று
வனத்தில்விடுவனென்று-வாசகம்பொய்யோவென்று (குவல)

புஷ்கராராஜன்சொல்-விருத்தம்.

கார்நிறமாகயந்த கலிபகவானேபோற்றி
வாரிசூழ்புவியிற்றேவர் மனிதரைப்பெருட்டாவெண்ணிப்
பூரணமாஞ்சிதேவி புறப்பட்டகனதயைப்போலச்
சீருடன்வந்ததென்ன திருவுளப்பத்துவிரோ

அகோ சரணஞ் சரணமையா சுவாமி சநியீசுரபகவானே அடியேனை ஒருபொட்டாயெண்ணி வந்தகாரியந் திருவுளம் பற்றவேணுமையா சுவாமி.

சநிபகவான்சொல்-விருத்தம்.

வானவர்புகழுண்டாகி வளரும்புஷ்கரனேகேளாய்
ஆனதுவொன்றுமல்ல வற்பகாரியமேயாகும்

நான்மெத்தவாசையாலே நற்றமயந்தியாளை
மானிடனளனுஞ்செய்த வஞ்சகத்தைக்கேட்டாயோ.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

நளச்சக்கிரவர்த்திசெய்த - அந்த - மோசத்தைநீகேட்டிலையோ

விதமானபூலோகத்தில் - அந்த - விதர்ப்பதேசத்திலே யொருபெண்
தமயந்தியென்றவள்பேர் - பூரணச்சந்திரவதனத்தைக் கண்டவர்கள்
இமையோர்மயங்குவார் - அந்த - இந்திரன்கூடவேயிச்சைகொண்டான்
எந்தன்விசாரமெல்லாம்-அவள்-அவ்வணமானகட்டுப்பெண் ணிருந்தேன்
அந்தப்பெண்ணைவிவாகம் நளன்-மண-தாகைசெய்ய லாமோகேள்
இருவோரும்வேறாகப்-பிரித்-தென்னவிதனைப் படுத்திவைப்பேன்
தருவாகநீதான்போய்-நளன்-றனனுடனே சூதாட வேண்டுமென்பாய்
பார்ப்பாயறாசஷணத்தில்-அவன்-பதியுமாசனக்காக்கி வைப்பேன்

சனிபகவான்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் புஷ்கராஜனே நான் அந்தத் தமயந்தியை
க்கலியாணஞ்செய்யவேண்டுமென்று மிகவுஞ் சந்தோஷமாயிருந்தேன்
நளராஜாவானவன் தமயந்தியைக் கலியாணஞ்செய்தபடியினாலே நீயிக்
க்ஷணமே அந்த நளனிடத்திற்போய்ச் சூதாடினால் அவனைத்தோற்க்க
வைத்து உன்னைக்கெலிக்கவைத்து அவன்பதியும் அரசும் உனக்கேபட்டா
பிஷேகம்பண்ணிவைக்கிறேன் நீர்போய்வாரும்பிள்ளாய்புஷ்கரராஜனே

புஷ்கரராஜன்- விருத்தம்.

ஈசனையிரக்கவைத்த வென்கலிப்பகவனேகேள்
ராசர்க்குராசனான நளமகாராஜனுக்குத்
தாசனாகப்பங்கட்டித் தன்னையயாயிருப்பன்யானும்
பாசமவைதேவர்க்காகப் பயந்துநான்போறனையா.

(வ-ம்.) அகோ சரணஞ்சரணமையா சுவாமி திருமூர்த்திகளையும் க
டுங்கச்செய்துவைத்த சனியீசுரபகவானே அந்தநளமகாராஜனுக்கு நான
கப்பங்கட்டுகிறபடியால் எனக்குப்பயமாயிருக்குது தங்களிட பரிபூரண
கடாக்ஷம் அடியேன்பேரி லிருக்குமட்டும் அடியேனுக்கொருகுறைவும்
வாராது நானபோய்வருகிறேன் என்னைவைத்து ரட்சிக்கவேண்டுமையா
சுவாமி.

பொது- விருத்தம்.

தந்திரமாகச்சொல்லிச் சனிபகவானுஞ்சென்றான்
சுந்தரவேந்தன் முன்னே சூதாடப்போகாவிட்டால்
இந்தவேழைநாட்டானு மெதிர்பகையாகுமென்று
அந்தமாய்பிடதரேச மன்புடன்வருகின்றானே

புஷ்கரராஜா-நளராஜனிடத்தில் - சூதாடவருதல்-தரு.

இராகம்-பந்துவராளி - ஆதிதாளம்.

நளபதிசமுகந்தேடி-வந்தான் புஷ்கரராஜன்



அழகானசமுகந்தேடி-யமைச்சருடனே கூடி (நளபதி)
கன்னியர்நடனமாடக்-கவிராஜர்கீதம்பாட
மன்னவர்வணங்கிப்போற்ற-மகுடவர்த்தனர்கள்சூழ (நளபதி)

சூதால்நளனை வென்று-தோற்க்கச்செயலாமென்று
வாதாடும்புஷ்கரராஜன்-மனமகிழ்ந்தேயுல்லாச (நளபதி)

பரதிமகன்சனிசொல்லப்-பண்புடன்றுணிந்துசெல்ல
விருதெனவிஷபக்கொடி-வெற்றியுடன்கொண்டுகெடி (நளபதி)

புஷ்கரராஜன்-விருத்தம்.

திருவடிசரணமையா செயநளராஜகோவே
அருமையாய்ப்பந்தயங்க ளநேகங்களாகவைத்து
இருவருஞ்சொக்கட்டானை யெதிரியாய்விளையாடத்தான
வருகவேவேணுமையா மனதுசந்தோஷமாக

வசனம்.

அகோசரணஞ் சரணமையாசுவாமி நளச்சக்கிரவர்த்தி மகாராஜ
னே சொக்கட்டாமாட வேண்டுமென்று மனதால்வந்தேன்தேவரீரும் அ
டியேனும் பந்தயங்களுக்குப் பதிலாக உம்முடைய சீமைபூமியையும் எ
ன்னிட சீமைபூமியையும் பிடாகவைத்தாடுவோம் எழுந்தருளவேணுமை
யா சுவாமி.

நளராஜன்- விருத்தம்.

சந்தோஷம்புட்கரா நீ சமானமாய்த்தானுட்காரு
முந்தநின்மனப்படிக்கே யுச்சிதமாகவெல்லாம்
பந்தயபரணமொக்கம் பரிவாரமிருவருக்கும்
விந்தையாவைத்துக்கொண்டு விளையாடவருகுவீரே

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் புஷ்கரராஜனே சொக்கட்டாமாடவே
ணுமென்று மனதாகவந்தீரோ உம்முடைமனதின்படியே பந்தயங்களாகம்
மிடசீமைபூமிக்கும் உம்முடசீமைபூமிக்கும் பந்தயமாகவைத்து சொக்க
ட்டாமாடுவோம் வாருமையாராஜனே.

சபை-விருத்தம்.

கைமாறஞ்சேர்த்திலாத கட்டியவிட்டுக்குள்ளே
சொய்மலரன்றுகாய்த்த கூறுநற்காய்பரப்பிப்
பொய்யதானமாகப் புரிந்திடுஞ்சொக்கட்டானை
மெய்யென்றுநளராஜேந்திரன் விரும்பியேயாடினானே

நளராஜன்சொல்-தரு-இ-ம்-காம்போதி-ஏகதாளம்

போடுகிறேன்பாரும்-புஷ்கரனேநான்-போடுகிறேன்பாரும்
போடுகிறேன்முன்னாட்டம் பிள்ளையார்தமக்கிது
ஆடுங்குஞ்சுமாபச்சை யந்தவிடுதோய்ந்தது (போடுகிறேன்)

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் புஷ்கரராஜனே முதல்முதலாகனைக்

கு மூணைத்தானுறு விழுந்தது இதுவும் தெய்வச்செயலல்லாமல் வேறல்லநான் துலைந்துக்கொண்டேன் நீர்போடும்பிள்ளாய் ராஜனே.

புஷ்கரன்சொல்-தரு.

நான்போடுகிறேன்பாரும்-நளமகிபா-நானபோடுகிறேன்பாரும்
நான்போடுகிறேனிதோ நல்லாவிநாயர்க்குத்
தான்போடுகிறேன்வீடு தானே துலைந்துநிந்தா (நான)

(வ-ம்) அகோவாருமையா நளமகாராஜாவே நமக்குமுதல் முதலாகப் பந்தயம் பனிரெண்டு எட்டு இருக்கால் விழுந்ததுநான துலைந்துக்கொண்டேன் நீர்போடும்பிள்ளாய் ராஜனே.

நளராஜன் சொல்தரு.

எட்டுடன்பனிரெண்டு மேவிழவேணும்
என்காய்சோடு கட்டவேணும்
பட்டுடனேகறுப்பும் பழமேபழுக்கவேணும்
பாரிலாறுண்ணேழு பகடையும்விழுந்தது (எட்டுடன்)

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் புஷ்கரராஜனே நமக்குப்பந்தயம் இரண்டுபகடை ஆறுண்ணேழுவிழுந்தது இதுவும் அரியின் செயலல்லாமல்வேறல்ல நீர்போடும்பிள்ளாய் ராஜனே.

புஷ்கரன்சொல்-தரு.

இருக்காலும்பகடையிதோ-சாந்தனுக்கிப்போ
ஒருக்கால்விழுகுமதோ
பெருத்தாயிரண்டுமெட்டுமே-குங்குமப்பச்சை
பிராணமற்சோடுகட்டுமே
சுருக்காகப்பனிரெண்டு சொல்லுமுன்போடுகிறேன்
பிரிக்காமல்நெருக்கியே போர்த்துவிளையாடுகிறேன் (இருக்கா)

(வ-ம்) அகோவாருமையா நளமகாராசாவே இருக்கால்பனிரெண்டு எட்டுஇரண்டுபத்து விழுந்ததுநான சோடுகட்டிப்போந்து உயிலோடினேன் நீர்போடும்பிள்ளாய்ராஜனே.

நளராஜன்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் புஷ்கரராஜனே நமக்குவிழுகிறபந்தயமெல்லாம் மூணைத்தொண்ணூறு காலத்தோணாந்து ஆறுண்ணேழு விழுகிறதேயல்லாமல் பந்தயம்விழவேயில்லை இதுவும் சிவன்செயலேயொழியவேறல்ல நீர்தானேபோடும்பிள்ளாய் ராஜனே.

புஷ்கரன்சொல்-தரு.

பனிரெண்டும்பனிரெண்டுமே-விழுந்திந்தா
தனியாகத்துடிகொண்டுமே
கனியெடுத்தேன்விளையாட இனியுஞ்சம்மதங்கூறும்
மனிதர்வலுவோதெய்வவலுவெனக்கிருக்கையில்
தனிதிசைபலமாகத்தானுண்டவர்செயலில் (பனிரெ)



(வ-ம்) அகோவாருமையா நளராஜாவே, நமக்கு விபரீதபந்தயம் விழுந்ததினாலே நான்சோடுகட்டிப்போந்து பழம்பழுத்து விட்டபடியால் உம்முடைய ஆட்டந்தோர்த்து விட்டதையாராஜனே.

பொது- விருத்தம்.

மந்திபமானதை மன்னவனுடும்போது
சித்தம்பேதலித்தும்ந்திரி தீராதகவலையாகி
மெய்த்தவம்புரிந்தமாது மின்னிடைதமயந்திப்பெண்
பத்தினிசமுகந்தேடிப் பதறியேவருகின்றானே

(வ-ம்) இந்தப்பிரகாரம் நளராஜாவானவர் புஷ்கரராசாவுடனே சூதாடித் தோர்க்கின்ற சமயத்தில் மந்திரிகண்டு பிதனமடைந்து தமயந்திதேவியின் அண்டையில்வந்து சொல்லுகிறவித மெப்படியென்றால்.

மந்திரிசொல்- விருத்தம்.

பைங்கிளிமொழியேயம்மா பாவிபுஷ்கரனைக்கண்டு
சங்கையில்லாமல்ராஜன் சமதையாயிருக்கவைத்தார்
வங்கணமாகச்சூதை மகிழ்ந்துபந்தயங்களைவைத்து
இங்கிருவோருமாட விடர்வருஞ்சொன்னேனம்மா

(வ-ம்) அகோவாருமம்மாதாயே நம்பிடராசாவானவர் புஷ்கரராசாவைச் சரிசமானமாய உட்காரவைத்துக்கொண்டு பந்தயங்கள்வைத்து சொக்கட்டாடுகிறபடியால் ஏதோ அனர்த்தகாலமாகத் தோன்றுதம்மாதாயே.

தமயந்திசொல்- விருத்தம்.

மந்திரிராஜாவுக்கு வந்ததோவிபரீதங்கள்
இந்தமொழியைக்கேட்டு விருசெவிகுளிர்ந்ததையோ
அந்தமாஞ்சபையிற்சென்று வாசருக்குகந்தவார்த்தை
தந்திரமாகச்சொல்லித் தடுத்துநீவருகுவாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் மந்திரியே நம்முடைய ராஜாவினிடமாகப்போய் உபாயதந்திரமாகச்சொல்லி சூதாடவொட்டாமல் திருத்திவைத்து மறுசமாச்சாரம் வந்துசொல்லும் பிள்ளாய்மந்திரியே.

மந்திரிசொல்- விருத்தம்.

பார்தனிலனேகமன்னர் பந்தயம்வைத்துக்கூடி
சூரியகுலத்துராஜர் சூதினால்மோசம்போனார்
தாரணிமன்னர்க்கன்று தாயியர்க்கடுத்தவித்தை
வீரனேயிந்தசூதை விளையாடவொண்ணாதையா

வசனம். அகோ சரணஞ்சரணமையாசுவாமி நளச்சக்கிரவர்த்திமகாராஜாவே இந்தப் பூலோகத்திலே சூரியகுலத்து ராசாக்களில்வெகுபே

ர் சூதாடிசகலமு மிழந்தார்கள் இந்தச்சூதாடுகிறதொழிலில் தேவதாசிருந் தோபயோகமான தல்லாமல் ராஜாக்கள் சூதாடக்கூடாதபாதுவாமி.

நளராஜனுக்கும் மந்திரிக்கும் தர்க்கதரு.

இராகம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

எதடாமந்திரி இவ்வார்த்தைகளெல்லாமுடன்சொன்னாய்
எதடாமந்திரி இவ்வுலகத்தினில்
சூதினாடிய தொல்லைகளில்லையோ (எதடா)

வசனம்- அகோவாரும் பின்னாய் மந்திரியே நாங்கள் சூதாட வேண்டாமென்று சொல்லவந்தாயே அதினாலேவருகிற காரணத்தைச் சொல் லும் மந்திரியே.

மந்திரிசொல்-தரு.

நியத்தனைப்பாவிச்சூதை நேர்த்துயைய
முனைவிக்கிரமனூதினால்பொருந்தவைப்பிருந்திருந்தனன்.

(வ-ம்) அகோசரணசரணையாகுவாமி முன்னாளிலே தேவேந் திரனவன் இந்திரனியுடனே சூதாடினமைவும் பழியுமிழந்துபோ னாரையாகுவாமி.

இராஜன்சொல்-தரு.

இழந்தானென்று எனக்குமுன்னின்று
வளைத்தன்னே நீயுரைத்தால்-முன
தவர்தவர்செய்போன் அழிந்திடுமென்று
தயங்கிமயங்கிப்பயங்காட்டாதலைஸ்
உள்ளதனிலொன்றுங் குறையாமலிப்போது
உனமொழிகொண்டோதான் பொன்னாசான்வது (எதடா)

(வ-ம்) அகோவாரும்பின்னாய் மந்திரியே நாங்கள் சூதாடவேண்டா மென்று கொஞ்சமாகிலும் அடக்கம் ஒடுக்கம் பயமில்லாமல் என்னெ திரில்வந்து சூதைநிறுத்துமென்று சொல்லவந்தாயே நாமெண்ணிக் கொண்ட காரியத்தைப்பொருளிழந்துபோமென்று மயங்கிப்பயந்து சொல்லா கல் உள்ளத்திலொன்றுங் குறையாது உன்சொல்லைக்கேட்டோமானா ல் சாஞ்சிறுத்தி அப்பால்போம்பின்னாய்மந்திரியே.

மந்திரிசொல்-தரு.

ஆனாலென்று அடிமைமுன்னின்று நீர்
நன்மொழிகூறுகிறீர் - அந்த
வேளையறிந்து அரசர்க்கரசன்
விளம்புவதென்று தாரும்பாயலேபுவி
தாழ்மையில்லாமலே வாய்மைபொறுக்கன்ம
சாஸ்திரத்தின்படி தோற்றியேசொல்கிறேன் (தொத்து)

வசனம் - சரணசரணையாகுவாமி ராஜாக்களுக்குத் தோற்றுமல



துன்பம்வருங்காலத்திலே மந்திரியானவன் தடுத்துச்சொல்வேணுமெ ன்று தருமசாஸ்திரத்தின்படியே சொன்னேனையாகுவாமி.

இராஜன்சொல்- தரு.

சொன்னதினாலென்ன அன்னீதயோ இந்தச்
சூதைநிறுத்துமென்றாய்
பண்டுமறைகளை யென்னைஇரோதீ
படிக்கிறதனை வொடுக்கமில்லாமலே
கன்னியரக்கன் வலைதவிலகப்படும்
காமுகர்போலென்னை லாமோவருந்துறாய் (எதடா)

(வ-ம்) அகோவாரும் பின்னாய் மதியூகிமந்திரியே இச்சூதினாலே மோசமாருமென்றுமைந்து நீதிமார்க்கங்களைச் சொல்லவந்தாயே காமமெ ன்ஸ்திரீமயக்கத்தினால் அகப்பட்டகாமுகர்போலென்னைவருத்தப்படுகி றாய் இனிமேல் எனமுன்னிலை நிற்காதேவாளாலேவெட்டியழித்துப்போடு வேன் அப்பாலேபோம் பின்னாய்மந்திரியே.

மந்திரிசொல்-தரு.

வருத்தமில்லாமல் இருந்தமுடனிந்த
வையகமாண்டிருந்தோம் - நீர்
பொருந்தமுடியு மகங்களும்
பொருந்தப்பியுமிருந்துமில்லாமலே
வெறுத்தயமியுங்கருத்துடனைவகளை
விட்டவர்சகிதொட்டதுகாணிது (நிறுத்)

(வ-ம்,) அகோசரணசரணையாகுவாமி இந்தஜர்தாயுசேசமு ம் ஆண்டுவினை சக்கரத்திருலாண்டு தாக்ஷிணியமில்லாமல் செங்கோல்செலுத்தி வந்தும் இப்போதுசனிசான மாய்கையினாலே எங்களைவருத்தப்படுப் படியாய் விடுகிறதாய்த் தோணுதையா சுவாமி.

மந்திரிசொல்-விருத்தம்.

செங்கிரிவர்தபோன்ற தேன்மொழியினையோனும்
உந்தனல்லுமைப்பீடிக்கு வோடியேசேர்ந்தனர்க்கு
விந்தையாவுரைசேர் விளம்பவுங்கேட்டிடாமல்
வந்தன்மாமுனையேதாழ்ந்து விங்கூசால்வந்தேனம்மா

மந்திரிதமயந்தியிடம்வந்து புலம்பல்-தரு

இ-ம்-காம்போதி-திரிபுடைதாளம்.

தாயேதமயந்தி குராபரிணிபென்ன சொல்வேன், எனச்
சக்கிரவர்த்திசெய்தக்ரமத்தைக் கென்னவுய்வேன்
மாயச்சூதாடவேண்டாமத்தியெ மென்றேன் - அந்த
மன்னவனெந்தனைக்கோபிக்கவனைந்தி நின்றேன்
தாசன்மொழிதள்ளமோசம்வருமென்றுசொன்னேன் - மன்னன்
தானமேதனைவாளாலையுருவிநெற் கொல்ல
காமினியாண்டிடும் நகர்க்குமோதாசென்றோ வாறும்

சற்றி நிரம்பித்தையலை த்தைரும் காட்டினான் றேன்
கண்டுவணங்கினான் தெண்டனிட்டேயிங்குவந்தேன் - தேர்வ
கற்பினையால்வருந்தாப்பலமென்றனை. - செய்தேன
பொல்லாத புஷ்கரன் தன்னுடனேயிகர் - ருது - அவர்
பிரியாசுவேடிக்கொண்டாலேயோ - வாது
எல்லாமாகிய தன்னை கூர்மிம் - டாரோ - இமை
சகலமும் புஷ்கரனுனேவெளிப்புக்கொண் - டாரே

(வ-ம்) அகோவாருங்கமா தாகேள் நளனுடைய மனோபாவனைவர் மனைவி
யிடம் சாஸ்திரமெல்லாஞ் சொல்லியும் அவர்கேளாமல் அந்தப்புஷ்கர
னுடனேசூதாடி சம்பிடமெல்லாம் பினாகோ தேசம்பரானு இசமெ
லாந் தோற்றுவிட்டாரே ராசவேசங்களை மாமையாவிருந்தும மா
தாவே

பொது-விருத்தம்.

மந்திரிசொல்லக்கேட்ட மாதவமயந்திப்பெண்
சுந்தரவதனஞ்சேர்ந்த துடித்துமேமனமலர்ந்து
மிந்தையுங்கலைந்தும்போது சேடியாம்பரிக
பந்தம்பிராணகாதவென்று மேபுலம்பலானே

தமயந்திபுலம்பல் - தரு.

இராகம்-பைரவி-ஆதிதாளம்

ஐயோவிதற்கென்னசெய்வேன்-எனாகுதியே
ஆருடன்சொல்லிவுய்வேன்
வையகத்தரசர்கள் கைதொழுதயர்போக
வைதரிவுகக்களைச்சேவாழ்வுமாகும்போசே - (ஐயோ)
பாரனுங்வேதனிடம் புஷ்கரன்பாவி
கோரஞ்செய்தானே படம்
நாரானருதைநடத் தோராமல்ராசனிட
நீரப்பலைமுடித்தான் வாராச்சிபிடித்தான் - (ஐயோ)
சிங்காரமுடிசூட்டி யோசச்சியபாரஞ்
செய்தெங்கும்புகழ் காட்டியே
பொங்கமுடனேவளர்ந்து பொல்லாச்சூதினால்நாங்கு
பங்கப்படுத்தவே தன் படைத்தானேலோகநாதன் - (ஐயோ)
காடுநகருமிழந்தோம் பஞ்சைகள்போலே
நாமும்மனதுதளர்ந்தோம்
பாடுபட்டுஞ்சொந்தப் பாலருடனேயிந்தக்
காடேகும்படியந்தக்கலிராஜனசெய்கவிதை - (ஐயோ)

பொது-விருத்தம்,

சிந்தைபுலம்பிக்கொண்டித் தேன்மொழியுலம்பியேதான்
தந்தைதன்னூருக்கேகத் தனயனையனுப்பவேண்டி
அந்தமாந்தரைப்பிற்சொல்லவழைத்ததல் துணைவைக்கேட்டு
இந்திரசேனனுமெழுந்துசேவருகின்றானே



விருத்தம்.

சென்னிதனில்மகுடமின்னப்பணிகள்பூண்டு
திகழ்குழைமயில்ரத்திநகுண்டலங்களிட்டு
கனமல்மதன்மனக்கின்னையாயிவனென்றெண்ண
கவரிகுடைவாத்தியமெக்காளமூதக்
கன்னயமாய்க்கையிலேவில்லம்புகொண்டு
காரியார்கள்நடைபிடக்கனிகள்சூழ்ந்து
மன்னர்மன்னர்துதிக்குநளனைசம்பனையநாடி
மைந்தனிந்திரசேனனேதோவருகின்றானே

இந்திரசேனன் வருகிற-தரு.

இராகம்-கமாசு-ஆதிதாளம்.

வந்தனனிந்திரசேனன்-துயிலாகவே
வந்தனனிந்திரசேனன்

| | |
|---|---|
| செந்திருமலர்முகச் | சந்திரோதயந்தயங்கத் |
| தெய்வமாதயார்கண்டு | சிந்தைமகிழமாய் (வந்தன) |
| சென்னிதனில்மகுட | முன்னிதமாயிலங்கத் |
| திகழுறுதலிந்திரு | காமப்புயிலங்கக் |
| கன்னக்குழைமயில்ரத்நக் | கடுக்கன்தகதகென்னக் |
| கழுத்தில்பொகமாலைக் | கண்டசரங்கள்துன்ன (வந்தன) |
| சரிகையிடைபிசுத்த | சாதுருவங்கிதமான |
| தரித்திடையிலிறுச்சல | பூஷணமுமணிந்து |
| பிருசாணத்திற்றண்டைக் | கொலுசுவெண்டயமிட்டு |
| மிகந்தனிலேமாத | விநயாசசவாரிமிட்டு (வந்தன) |
| வெற்றிக்குடையிலங்க | வெண்சாமரங்குலங்க |
| சுற்றியுமாதராடச் | சூழ்ந்துகட்டியம்பாட |
| மத்தனமேனதாளம் | வையமெங்குமதிர |
| சுத்தமிருமாலாத்தி | தோகையரேந்திவர (வந்தன) |

இந்திரசேனன்-விருத்தம்.

ஆலமாமெயன்னைமுந்த மைந்தனாயேசரணைகேளும்
பூவினில்விசனம்கொண்டு பொன்முகம்வேறுபட்டுக்
கேவலமாகவுள்ளம் இலேசமுதடைகுவானேன்
ஜீவாட்சியேயம்மா திருவடிசரணந்தானே

(வ-ம்) அகோமனுஞ் சாமம்மாதயே தாங்களித்தனை துயரத்துட
னே அடியேனையழைப்பித்தகாரியம் இன்னதென்றுதிருவுளம்பற்ற வே
ணுமம்மாதாவே.

தமயந்தி-விருத்தம்.

கருதியேவுனதுதந்தை காவினியாகுமெல்லாம்
பொருதியருதினாலே புஷ்கரனெருப்புக்கொண்டான்

உருகுதே நெஞ்சந்தாயே யுங்களைப் பிரிந்து நானும்
வரும்விதியறியேனின்னும் மைந்தனே யென்ன செய்வேன்

தமயந்தி-தரு-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

மைந்தனே நானென்ன செய்குவேன் பட்டமுங்கட்டி
வைத்துநான் கண்டாலே வுய்குவேன்
இந்தக்காரிதமாக வுந்தனைப் பிரிந்துபோக (மைந்தனே)
விதிகூடியோகுமோ வையா இவையும் - தந்தையுடனே
விதியினாலே சேனையும்
பொக்கிஷமாளிகையும் யாவுந் தோற்றுவிடுத்துப்
புஷ்கரன் செய்த வஞ்சனையும்
மக்கள்தனை விடயோடு மருவுமுயர் குழந்தை
தக்கவுனைப் பாட்டனூர் விடுத்தனையே நீ செல்லுமுடனே (மைந்தனே)
தாயுடன் தந்தையைப் பிரிந்து-போகிறேனென்று
தயங்கிடவேண்டாம் மறந்து
காயமே அழுந்தாமல் பரிந்து-பொன்னூட்டிக்
காவலியாக வளர்ந்து
நேசமாய்மொழி தள்ளாதே நெஞ்சிலிரக்கமில்லாதே
வாயினாலெனும் விள்ளாதே வந்தனை மிகக்குன்றாதே (மைந்த)
மன்னவருன்றன் தாதையே-இந்தக்கூடாட்டி
வந்ததுமென்றலை விதியே
இனிமேல் வருமோ கதியே-அப்பாமகனே
யேதுஞ்சொன்னால் பதியே
பொல்லாத கலியிலே போயவர் தீர மனந்தேறித்
தலைவிதியினால் மாறிச் சங்கராபரணங்கூவி (மைந்தனே)

இந்திரசேனன்-விருத்தம்.

அன்புடனென்னைப் பெற்ற அன்னையே சொல்லக்கேளாய்
துன்பமே வந்தால் பெற்ற சுதனையும் பிரிவதுண்டோ
தென்புடன் பாட்டனூர்க்குச் செல்லெனச் சொன்னீர் நீங்கள்
முன்புசெய்வினையோ அம்மா மொழிந்ததும் மறந்திடவே

இந்திரசேனனுக்கும்-தமயந்திக்கும்-தர்க்க-தரு.

இராகம்-மத்தியமாவதி-ஏகதாளம்

தாயே யென்னைப் பிரிந்து போகத்
தகுமோ சொல்லம்மா
நியாயமிதுவோ தேசுள்ள பைங்கிளியடிப்
போவென வோட்டினைக் கூடிப் பிரிந்திருப்பதென்னடி (தாயே)

தமயந்தி-தரு.

பாலகனே மணியே வுன்கண் மனதைப் பதறாமணியே
ஆலயமதை யுகந்த அன்னைசொல்லக் கேளிதைக்
காலமதிலே யென்னுடைய காரணமேபோய்ச்சொல்லும் (பாலா)



இந்திரசேனன்-தரு.

காரணமேதினாலுடனே கருத்தாகவோது
தாரணி இழந்ததோ தமையென்ன மறந்ததோ
ஆரணமொழிந்ததோ வரசென்ன வொழிந்ததோ (தாயே)
அரசனைக் கண்டான் புஷ்கரன் சூதாலவனிதைக் கொண்டான்
பரதேசியாகவே பதியைவிட்டிடவே
தருவனமெய்திடச் சண்டாளன் செய்திடப் (பாலா)
அவன்றனைக் கொய்வோம் கலிகள் துன்பமதுபாபஞ் செய்வோம்
கவலைப்படுவதுண்டோ காரியமேதுகொண்டோ
புவனமுழுதுங்கூறும் பூவையே விடைதாரும் (தாயே)

இந்திரசேனன்-விருத்தம்.

எந்தனைப்பெற்றாய்நீயே யெங்குலைக்கரசேதாயே
விந்தனைப் பிரிந்து நாங்கள் ஒருபோதுமிருக்கமாட்டோம்
விந்தையாவனவாசங்கள் மேவுவோமுங்கள் பின்னால்
மைந்தனாக் கூடக்கூட்டி வனந்தனிலேகுவீரே

(வ-ம்) அகோ சரணஞ் சரணமம்மா தாயே எங்களை யெவ்வளவோ தவமிருந்து பெற்றெடுத்து எங்களை விட்டு நீங்கள் வனவாசம்போய் வருகிறேனென்றால் நாங்களுங்கூட வருவமம்மா தாயே.

தமயந்தி-விருத்தம்.

சிறுபிள்ளைபுத்தியாகச் செப்பினாயிந்திரசேனா
உறுதியாவுங்களை நலகோருகுடையின்கீழே
அருமையே யரசுபெற்று ராக்கினிசக்கரத்தார்
பெருமையே அதிகமென்று புத்திரனுக்குரைசெய்தாளே.

தர்க்கம்-தரு-இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

செந்தாமரைவதனத் தாதை திருமனைக்கே செல்வாய்
சென்றிருந்தால் நாங்கள் வந்து சேர்வோஞ் சேருபிள்ளாய்

இந்திரன்-சேனன்-தரு.

பிள்ளைபெண்டீர் நாடுந்தந்தால் பின்னொருவர்க்கீய்ந்து
வுள்ளதெல்லாந்தோர்த்தீர் நாங்கள் பிள்ளையென்னசெய்வோம்

தமயந்திசொல்-தரு.

என்னசெய்வீரப்பா வுங்கட்டிடோ ராய்ச்சுகமிருந்தால்
பொன்னேநவமணியே நாங்கள் போறோம் வனவாசம்

இந்திரசேனன்-தரு.

போறீர் வனவாசந்தாயே வுங்கள்பின்னால் வந்தாலென்ன
காரணத்தை நினைந்து எம்மைக் கடந்துசெல்லத் துணிந்தீர்

தமயந்தி-தரு

சொன்னேனிளங்குழந்தையென்று தோஷமில்லை சுதனே
அன்னைக்குப்பிரசாதங்காட்டி லகப்படுமோ லப்பா

இந்திரசேனன்-தரு
அகப்படுமோவென்றுசொன்ன வம்மாவுன்னைப்பார்க்க
அன்னக்கறிசாதமெங்கட் கபூருபமோவம்மா

தமயந்தி-தரு.
அபூருபசித்திரமோசன னன்னைசொல்லும் வார்த்தை
தவசாமலேபாட்டானிடந் தான்போயிருப்பீரே

இந்திரசேனன்-தரு.
போய்வருவந்தாயேவுன் புத்திமொழிதட்டாமல்
ஆயன்செயலுள்ளபடி யாகுமெந்தனம்மா

தமயந்தி-தர்க்கம்-தரு
இராகம்-பந்துவராளி-ஏகதாளம்.
உந்தனையிழந்திருக்கவு மனதுண்டோகண்மணியே - நீங்கள்
சிந்தவாடியிருக்காமலே செல்லும் நீசுதனே

இந்திரசேனன்-தரு
செல்லுமென்றுசொல்லி வந்தசேதியொவ்வாதே
சொல்வதுசரியில்லாவிது தோதகவிந்தை

தமயந்தி-தரு.
விந்தையாவிதர்ப்பபுரி மேவிநீயிருந்தால்
எந்தவிதமானாலுமே வந்துசேருவோம்

இந்திரசேனன்-தரு.
அகோவாரும்பெண்ணே தமயந்தி இந்தக்காடிபுலி மிருகஜாதிக ளிருக்கப்பட்ட கானகத்தில் நீ ஒண்டியாயழுதுபுலம்பித் திரிவானே ன் என்னுடையகுடிசைக்குப்போனால் என்பெண்சாதியை உனக்கு ஏவல்பணிவிடை செய்யச்சொல்லுகிறேன் நீயுங்காலும்மன்மதனும ாகியும்போயிருக்கலாம் நீ என்னகேட்டபோதிலும் கொண்டுவந்துத ருகிறேன் என்வார்த்தையைத்தட்டாதே நீ தட்டினாலும் நான் விட ப்போகிறதில்லையடிபெண்ணே,

தமயந்திசொல்-கலித்துறை,

மூடாவுனக்கென்ன கேடாசண்டாளா முழுமூடா
வேடாவறிவில்லையோ வெந்தனாசையைவிட்டுவிடு
தாடாளாபோற்று நளராஜன்சக்கரந் தலைப்பிளக்கும்
போடாபிழைபொறுத்தேன் செய்தகன்மையும்போய்விட்டதே.

வசனம்,

அடாவடாதுரோகி உனக்குக் கெடுகாலம் கிட்ட நேரிட்ட ாதே மூடர்களுக்கெல்லா மெறிந்துபோட்டமுட்டாளே என்னை இப் படிக்கெல்லாம வீணாணபேச்சுகளைப்பேசினாய் இதுபகவானுக்கடுக்கு மோ நீ செய்தகன்மையினாலே இதுவரையிலும் பொறுத்தேன் இந்த ச்செய்தி என்பிராணநாயகராகிய நளமகாராஜாயில்லாதபடியால் இப் படிக்குவீணாணபேச்சுகளெல்லாம் பேசினாய் அவர்இவடம்இல்லாமற் போனாலும அவர்சக்கரமாவது வந்துஉன்தலையையறுத்துப்போடும்இ னிமேலாவதுஎப்பேச்சும்பேசாமல் தப்பிப்பிழைத்துவந்தவழியைப் பார்த்து ஓடிப்போடாசண்டாளவேடா,

வேடன்சொல்-பின்முடுகுவெண்பா,

பொங்குமதிகாயவனப் பூங்குயிலுங்கூவவெண்மேற்
சங்கையில்லாமாரனம்பு தைத்தருக-மங்கையரே

ஆவிகேயமேபொல்லாது கட்டிசொல்லயங்கலாது
பாவையேயிவங்கவேலேபார்,

தமயந்திவேடனுக்கும்-கசு-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-ராகம்-ஆதிதாளம்,

இணக்கமாவென்றுசொல்லி யிளகிப்பப்பேசாதே
கண்ணாக்கேப்போலநீயும் துள்ளிப்புளிக்காதே
எகவார்த்தையிறு கேட்கப்பேசாதே
ஆசைதானந்து அம்மாயக்குருணம்பெண்ணே
பெண்ணேயெனயுகம்மாகி மிகத்துகறுபடபாவி
கண்ணாரின்முன்னே நில்லாதே சாகலையைபோனதோகரி
கோபஞ்செய்தா துமுன்னேக்கூடிவோவாமலே
சேயங்கிரீமேவேகேன்பாய்ச் சொல்லொருமொழிகீயம்பாய்
அன்றெனபிராணனாவ மதிகதாண்சிதைகள்ளுலே
தெனையுயிட்டியாளாதே தெரிவையெனசாபதகாமே
தெரிவையரேசியென்பால் பித்தகான்விடுமாடல்
உருகுதுர்தனேச்சேர வுண்மனதாவகதுசோர
மனதுவைதிடப்பெண்ணுல மாண்டான்தரியனறன்ளுல்
இனமுமென்றுமுடன்னாது செய்தால்வருமபாறது,

வேடன்-விருத்தம்,

கலங்கவொன்றுரைத்தாயிந்த கானகமலேகண்தேசம்
தலங்கன்னிவேடரென்னைச் சமத்தவென்றியாருங்காவோர்கள்
பிலங்கொளுமிருகமெல்லாம பிடித்தொருகொடியிற்கொல்லேவன்
அலங்கிர்தமயிலேயுங்கழுவையுராலுனைக்கிழேனே

வசனம்,

அகோவாரும்பெண்ணே தமயந்தி இந்தக்காட்டில் வாசம்பண்ணப்பட்ட வேடர்களெல்லாம் என்பேர்சொன்னால் கடுங்கி ஓடிப் போவார்கள் ஆருக்குமடங்காதயிருகாகங்களெல்லாம் ஒருநாழிகைப் பொழுதில்பிடித்துக்கொல்வேன் அப்பேர்ப்பட்ட நான் உன்னைக்கண்டபோதே என்னை மன்மதபாணம் வந்துதாக்குது நானெப்படிசகிக்கப்போகிறேன் உன்காலையாவது கும்பிடுகிறேன் நீசொன்னவேலைகளெல்லாஞ்செய்கிறேன் என்பேரில்கோபஞ்செய்யாமல் சேர்ந்தனேனால் நானென்தேசகாலமுமறப்பதில்லை அடிபெண்ணேதமயந்தி,

வேடனுக்கும் தமயந்திக்கும்-எ-வது-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-பூபாளம்-ஏகதாளம் (மே-மவம்

பொறுக்கவொண்ணுதென்றபோவென்றுசொல்லவந்தாய் அன்னமே
வெறுக்கலாமோவிதுவேலையல்லவோபெண்ணே அன்னமே
வேலையல்லடாபாவிமிருகம்போலெண்ணியேவேடனே-என்னை
யாளாகினத்துவந்தாலடிக்குமோவுனக்கிது வேடனே



அடிக்காதோவுனைக்கொல்ல அரவத்தைத்துவளித்தேனே அன்னமே
காமமிடுக்காதவிரக்கூடியிருக்காறபயமெனவடி அன்னமே
இருகதிட்டவென்மனமிறைகளன்றனையிட்டுவேட்டனே அடா
பொருந்துமோவுனக்கிது புத்திபோகாதடாவேடனே
புத்திசொல்லவந்தனையடி பூவைமேலினிகேளும்அன்னமேஉன்னைப்
பத்திமிழுந்துபானயங்களுஞ்செய்வேனடி அன்னமே
பெங்களுஞ்செய்திடச்சனிபகவானுமபொறுப்பனோவேடனே உந்தன்
துக்கிப்பளக்குமெய்முலனுகாமவொழுப்போவேடவே

வேடன் விருத்தம்

ஓடிநீபோடாவென்றே யுரைத்தமாமயிலேயாளும்
தேடியபொருளுங்கேளும் சித்திரைப்பதுமைபெண்ணே
நாடிமனஞ்சுகமுஞ்சை நழியவளித்திடும்கோதி
கூடியனைக்கண்டபோர் கும்பிட்டேன்கும்பிட்டேனே

வேடன்தனிச்சொல்-கண்ணிகள்-இ-ம் பூபாளம்-ஆதிதாளம்

பாதம்பணிந்தேன்பணிவிடைசெய்கிறேனடி பெண்ணே உந்தன்
பக்கமிருந்தெந்தனைரட்சித்தருளடியென் கண்ணே
சிதமலர்வதனமேதழுவமைகொளளும் பெண்ணே அடி
சின்னதாமினுக்கெந்தனைவந்துசேரடியென்கண்ணே
கர்மன்கணையாலெந்த ஞானிதுடிக்குதடி பெண்ணே என்னைக்
கட்டியணைத்துமுத்தமிட்டருள்வாயடி கண்ணே
சோமனுந்தனலாகத் தேகந்தனிலெறிகுதே பெண்ணே மெத்தச்
சோபமாகுதேயென்மேல்கோபமேகடிகாமாகண்ணே
மாவிமாங்குயில்கூடிக் கூவிச்சந்செய்குதே பெண்ணேஇப்போ
பாராமலெனதாசை தீராதவில்லையேன் கண்ணே
ஆவியாதகவிட்டாம்பூவைநாசகியேனே பெண்ணே தேகம்
அழியாமற்புவியெங்கும் பழியாமற்காரடி கண்ணே

தமயந்தி விருத்தம்.

பழிசெயுங்கொடியவேடா பாதகாவுனக்குநல்ல
வழிபெறவோநீயிந்த வார்த்தைகள்சொன்னாயென்னை
எளிதெனவெண்ணவேண்டா மிருகாந்தாவிப்போ
அழிந்திடுமாசைவிட்டு அகலவேயகன்றிடாயே

வசனம்.

அடாவாடா பாவிவேடா நீயிப்போர்க்கொத்த அகாத்யமானவார்த்தைகளைச் சொன்னாயேயுனக்குநவாமி தூணைசெயவார் நீயுங்கல்லகதிவிற்போய்ச்சேராமாட்டாய் இனிமேல்மனதுதாளயாட்டாது இப்பவாவது எங்கேயாகிலும்யோடிப்போடாவேடா,

வேடன் கலித்துறை.

நானேகரும்படி நீயேநின்ற்சம்காயகியே
தேனேயுன்வாயிதழ் தந்தென்னைமெல்லவுஞ் சேர்ந்தனேனால்

தானேபுணர்ந்திட மனதினைகொண்டென்னைத்தள்ளுவையோ
மானேவிடேனுன்னை நீபோறதெங்குசொல் மாமயிலே.

வேடனுக்கும்-தமயந்திக்கும்-அவது

தர்க்கம்-கண்ணிகள்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பூசைசெய்கிறேனுன்னை ஒருபுத்திசொல்லடியென் கண்ணே
காசகாலமடாவேடா நீ காகத்துக்காளாவாய்போடா
பாதம்பிடிக்குறேனடிமானே என்மேல்பக்ஷம்வைத்தாளடி தேனே
வாதுசொல்லாதடாவேடாகேடு வருமுன்சொன்னேனடாபோடா
மறக்கனடிபக்ஷமானேஎந்தன் மாளைமயல்தீரடி தேனே
பிறர்தாரமிச்சித்தாலே முன்னால்போனதறியாயடாநீயே
கும்பிடுகிறேனடிபெண்ணே மனக்கோட்டுக்கொள்ளாதடி கண்ணே
வம்புப்பயலேஅடாவேடாமெத்தவாய்மிஞ்சாதேயடாபோடா
சிக்கமாட்டேனடிபெண்ணே கைச்சரசமுஞ்செய்வேனடி யுன்னை
நகைத்துப்புரமெரித்தார்வேடாஉன்னை நாசஞ்செய்வாரடாபோடா
எட்டிஎட்டிபிடிப்பேனடிபெண்ணேகனிகனிமேற்கேளடிகண்ணே
கிட்டவராதடாவேடாபாவி காண்கிட்டிலுனக்குவசனுவி
மருந்துபாரேனடிபெண்ணேஉன்னைவலுச்செய்வேனடி கண்ணே
நெருங்கிவாராதேகிட்டமோகிஉன்னைநெருப்பாயெரிப்பனடாதுரோகி

பொதுகலித்துறை.

முக்கண்சிவனுலனங்கனெரிய முப்புரமெரியப்
பக்கலதுமானிலங்கையெரித்த பழமையைப்போல்
மைக்குழலாள்தம யந்திகனனிடம்வைத்தகற்பு
அக்கினியாலுமவ் வேடனெரிந்தனநிசயமே.

தமயந்தி விருத்தம்.

கோபத்தாலெரிந்தவேடன் கோதைபாலடைந்துவந்த
ஆபத்தைத்தீர்த்தானென்றே யடிக்கடிதுபாயாகி
ஈபத்தங்கெட்டசாதியில்லவேடன்முன்பு
சாபத்தாலெரித்தானென்று தமயந்திபுலம்புவாளே

வேடனெரிந்தபின் தமயந்திபுலம்பல்-கண்ணிகள்

இ-ம்-கவரோஜ்-ஆதிதாளம்.

மனிதரில்லாப்பாவியுலகுகனிலுயிரை
வைத்திருக்கலாமோவிக்கமட்டும்
தனிவழியேவந்த மங்கையர்களையன்
தன்னைவிட்டுக்காட்டில்வாலானேன்
கொண்டதொருமணக் கணவனில்லையென்று
கொடிபாவிவேடன்கொட்டிக்கொண்டான்
ஆலங்கள்சத்ரக் சாலைகள்தன்னைநான்
அழித்துகஞ்சைச்சோற்றிற்கலந்தேனோநான்
காவி லுலேப்சுளைவ யுதைத்தேனோவன்பகல்



கன்றைக்கட்டிப்பாலைக்கறந்தேனோநான்
நம்பினோரைக்கூட்டி வந்தயாதுமெல்ல
கட்டாத்திணிற்கையைவிட்டேனோநான்
வம்புசெய்துப்பிறருடைமைதனைக்கையில்
வாங்கியேதாணில்லையென்றேனோநான்
வாழ்மனையிற்சிறைய வைத்துசாதுமண்ணில்
வழக்குநிந்தைகள்சொல்லி வாழ்ந்தேனோநான்
தாழ்விலலாமற்செய்த பாவமெங்ஙனகொண்ட
சக்ரவர்த்திதன்னைப்பிரிந்தேனோயோ
சூழ்பவத்தைத்தீர்க்குங் கயிலைவாசாதொண்டர்
சுந்தரர்க்காகத்தூது சென்றவீசா
மங்கையாளென்கல கலக்கந்தீரவெந்தன்
மன்னவனைக்காணநின்றருள்தா
கங்கைதிங்கள்கொன்றை தும்பைசூடும்லோக
காரணனேகாக்ககடனுமக்கே.

தமயந்திகாலத்தைவெறுத்தல்-விருத்தம்.

திருவளரும்விதர்ப்பராஜனும்விம
சேனருள்புதல்வியெனுஞ்செழிக்குங்காலம்
தருவளருங்கற்பகநாட்டன்னமென்பால்
சக்ரவர்த்திகளன்புகழைச்சாற்றுங்காலம்
கருவளருமெனதுதந்தைநரேந்திரர்க்குக்
கன்னியென்னைமணஞ்சூட்டிக்களிக்குங்காலம்
இருவளருங்கலிராஜனிடுக்கஞ்செய்ய
எல்லையிடவேயாங்கள்வனமெய்தகாலம்
எய்திடவேபுட்கரனுமுல்லையாள
இராஜனுடன்வனந்தனில்வந்திருந்தகாலம்
செய்திடவேநித்திரையிலென்னைவிட்டுச்
சென்றமன்னன்றனைத்தேடித்தியங்குங்காலம்
கைதிடவேசுற்றுமெனைப்பாம்புதன்னை
கறுக்கிவனவேடனென்னைநாடுங்காலம்
உய்திடவேபொருந்தாமலெரிந்தேயெந்தன்
உத்தமனைத்தேடியழுதுருகுங்காலம்.

பொது-வசனம்,

இந்தப்பிரகாரம் தமயந்தியானவள்நித்திரைசெய்யும்பொழுதுபுருஷன்பிரிந்துபோக நித்திரைதெளிந்துபுருஷனைக் காணமல் அனேகங்காடுமலைவனம்வனாந்தரங்களெல்லாம தேடிவருகையில் மலைப்பாம்பானது வந்து தமயந்தியைச்சுற்றிக்கொண்டு அவதிப்படுத்த அப்போது சுவாமிகிருபையினாலே காட்டில்வாசஞ்செய்யப்பட்ட வேடனானவன்வந்து அந்தப்பாம்பை யிரண்டுதுண்டாக்கிவிட்டு தமயந்தி

கேவிலைப் சேர்வேனென்றுவாசாடித்தர்க்கிக்க அப்போது அவ ளிடபதிவிரதாசக்தியினால் அவ்வேடனைபஸ்மீகரமாயெரித்துவிட்- அப்போது சமயகிவாரணன் அவன்செய்த அபராதமெல்லாமன்னி க்கும் அவளிடை னெக்குப்போனதைப்பற்றிப்புலம்பிக்கொண்டுபோ கிறவிதம் எப்படியென்றால்,

பொதுவிருத்தம்.

வனவேடனெரித்தபின்பு வனிதையுமனதுநொந்து
தனிவழிநடக்கும்போது நளனுடைக்காணவேயாமெல
முனிவராசிரமதைக்கண்டு மொய்குழலங்குசேர்ந்து
கனிவொடுமுனிவரைக்கேட்கக் கேள்வியுரைக்கின்றாளே

முனிவர் விருத்தம்.

செவிதைக்குசலியான தேன்மொழிமாதேயம்மா
காயிலேகனிபறிக்கக் கானகத்தனிலலைவாரும்
எமமாமுனிவர்பக்தி லெங்கிருக்கின்றுவந்தாய்
நீயாருன்பேர்தானென்ன தெரியவேயுரைத்துவாயே

வசனம்.

அகோவாருமம்மா நீயார் எங்களூர் எந்ததேசம் இங்கேயிவ்விய பார்கள்வாசஞ்செய்யப்பட்ட ஆசிரமத்தில் நீ ஒன்றியாயமுதலுமப் த்திரிக்கு நீ இவிடம்வந்தகாரியஞ்சொல்லவேணுமம்மா.

தமயந்தி முனிவர்களுக்குச்சொல் அகவல்.

திருவடிசரணம் ஜெயமுனிவேந்தீர்
அருளையென்றுயவர் யின்புடன்கேளீர்
தருவளர்சோலை தாருவைசிர்க்கும்
பெருவளமிகுந்த பெருமசேர்விதர்ப்ப
நகர்விமராஜன் கற்றவைக்குமத்தி
தகமைசேர்மாது தமயந்தியென்பேர்
ஜெகமெலாம்பரவும் ஜோவீரசூரன்
பகைவர்கண்டஞ்சும் பராக்கிரமமுடையான்
நிடதாதிபதியாயீதிமிகப்புடையான்
கடமிகுஞ்சக்கராயுதப்படையான்
கொடைமிளிர்கன்னன் குறைவசம்பன்னன்
நடமிடுபாமோ மேகநதராஜன்
பரியவாராஜன் பார்முழுதாண்டு
காரிதன்பகையால் கானகமிழந்து
ஆரணியத்தி லரசனுடனேகி
போரணிமன்னன் பிரிந்தனர்துயிலில்
பேதையேன்றனைத் தியங்கியேவனத்தில்
அடியானையுமி வருவனைத்தழுதியி
அடியேனாக யானைவருமறிக்க
வேடனுமெரிந்த வெட்டியவனை



38

கூடவேயென்மேற் கொண்டனன்மையல்
கிடியேயென்பால் நெருங்கியேவேட-
மூடனையெரித்து முடிவிடியாணங்கு
வந்தனன்சாமி மார்பரவியேன்
பின்துணையில்லைப் பிரம்மகுலத்தாய்
சாந்தராகக் கொழுந்திமகனைக்
சந்ததங்காக்கத தானகடனகடனே

முனிவர்கள் சொல் விருத்தம்.

காளினோகனிப்பணிந்த தையலேயாசிர்வாதம்
ராமுனைகாட்டிடான்வந்து இருந்தநட்பாதபோச்சு
வாழ்விலை அலைந்ததிப்போ வுங்களைச்சநிரட்சிப்பார்
வாழுநீயவிருந்துகலாரு மாககர்க்கேகுவாயே.

(வ-ம) அகோ வாருமம்மா தமயந்தி ஆசிர்வாதம் நீ கம்பிடமா யிருக்கிறதுசரியல்ல இவ்விடமிருந்து எங்களுடன் கஷ்டப்பட்டுக் கொண்டு கல்லஅன்னவஸ்திர முதலானதுமில்லாமல் காய் கனி கிழங் குகளைப் புசித்துருக்கமாட்டாய் இதோ எதிரேயிருக்குது சுவாகுபட் டணம அதில் உன்சிறியதாயாரான கோசலாதேவியிருக்கிறாள் அ வளிடம் சுகமாய்ப் போயிருக்கலாம் உங்களுக்குச் சகியகயான இன னமும் முனைவருஷத்துக்குப் பூரணவதகாரஞ் செலுத்தப்போகி றார் பிறகு உங்களுக்கு சௌகியமுண்டாயிருப்பீர்கள் போய்வாரு மம்மாதாயே.

தமயந்தி சொல் விருத்தம்.

தவமுனிவிடைபைப்பெற்றுத் தமயந்திதையல்தானும்
புவியிலாவொன்னைப்போலப் பெண்பிறந்தார்களேயோ
பவமெனசெய்திட்டேனோ பத்தாவும்பிரியமுன்செய்
தவமோயிவ்விதக்காலேதன் நளனுக்கனுவிதித்தவாறே

தமயந்தி-முதல்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஏகதாளம்.

அரிமாதவாமுருகா நந்த அச்சுதாவாசுதேவா
கருணாசல கிருபைவைத்துக் காட்டில் வந்தெனைக்காவா
ஒருதுணையுமில்லையே யெங்கு நாயிருக்கோமுனையல்லவோ
சிறுமைமிகச் சகியகவான்செய்த தொல்லையோ
அயனமைத்த விதியோ வதனுலேயிந்தக்கெதியோ
நயமாச்செய்யும் கருமகலிச் சேதனேவந்தச்சதியோ
பாமுமென்னை மிருந்த தேயிதக்க பாம்மனமுமறந்ததே
தாயர்போய்நாங்கவொளிஞ்சவே துணைசெய்குவாய்ச்சகிகெஞ்சவே
பூமிபொருள்புருஷன் பிள்ளை பூஷணமுமிழந்தேகன்
சாமிகொண்ட நாதன்செய்த சதியால்மனந்தளர்ந்தேன்

ம

வெய்யல்மிகலாகுதே யென்தன் மேனியெல்லாம்நோகுதே
கைகால்விட்டுப்போகுதே மனங் கலங்கிமிகவாடுதே
காட்டைவிட்டுநானே இந்தக் காட்டில்வந்தேன்மானே
பாட்டைதப்பிபோனேனேயோ பரதேசிபோலானேன்
பஞ்சவன்னக்கிளியே என்போல் பாவியுண்டோமொழியே
என்செய்குவேன்மொழியே எங்கள் நகர்தனைக்குருவழியே.

தமயந்தி-உ-வது-புலம்பல்-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

நாராயணாகோவிந்த கேசவா-அரி
நாராயணாகோவிந்த கேசவா

நாராயணாகோவிந்த நம்பினேனுன்னையிந்த
ஆரணியந்தன்னிலெந்த வாபத்தும்நீக்குமுகுந்த (நாராய)
ஆராவமுதேயிஷ்டனுமாதவாவுமக்கபயங்கோகுலபதியாதவா
நிராவினையகற்றுக நிர்கருந்தயாபரனே
வேறுநுகதுணையுண்டோ வேனோரட்சியுமென்னை. (நாராய)
காடுககளைவிட்டு வந்தோமேநாங்கள்
ராப்பகல்யுகமாக நொந்தோமே
காடுவிடாய்த்திரிந்து கணவன்றனைப்பிரிந்து
வாடும்பேதைமுன்வந்தேன் வருத்தந்தவிர்ப்பரிந்தே(நாராய
வாலவையிதில்மணம் புரிந்தாரேபெற்றப்
பாலனேயும்விட்டுப் பிரிந்தாரே
காலன்போற்சனிவந்த காரணந்தானேமுந்த
கோலமெல்லாமந்த கோபாலாருளாகதன் (நாராய)
மாகதவழி வாட்போன்ற வனிதையுமனதுநொந்து
சனிவழிநடக்கும்போது ஜனார்த்தனன்கிருபையாலே
அரிபதமனதிலெண்ணி யாரணியத்தைநாடி
வருங்கைவிசெட்டி மார்கள் வழியினில்வந்தாரே.

பொதிமாட்டுநாரசெட்டிகள்-வருகிற தரு-இ-ம்-
சௌராஷ்டிகம்-அடதாளம்

செட்டிமார்கள்வந்தார் - வர்த்தகஞ்செய்யும்
செட்டிமார்கள்வந்தார்
செட்டிமார்கள்வந்தார் தெட்டிப்பணம்பறிக்கும்
கொட்டிக்கொள்வோர்களை ஓட்டிப்பொருளைவாங்கும்—செட்
காவையுடையோர்க்கு வேணபொருள்கொடுப்பார்
நம்பிக்கையில்லார்க்கு செம்புக்காசுங்கொடார்
ஆணிப்பொன்சேர்வையு மழகுகட்டளைப்பையும்
வேணபொன்னமுத்திய மொழுகுருவ்வையுங்கொண்டு—செட்
நாமடிப்புறுவும நவரத்தினப்பணிகளுஞ்
சிருடன்பணங்காசு சிலவாபரணங்களும்



ஆருங்கொள்ளவேவிற்கும் ஆசைமெருகிற்கும்
காரியந்தனிற்கெட்டு வீரியத்துடன்கோமுட்டி (செட்)

செட்டிகள்சொல்-விருத்தம்.

அம்மாநீயெந்தவூர்தா னழுகாதேபயப்படாதே
சும்மாச்சொல்லவகதவாறு துணைசெய்வர்சுவாமிதங்கள்
எம்மோடுபிறந்தங்கை யெனவெண்ணிக்கேட்டோம்நாங்கள்
உம்மோடுபிறந்தோரொன்றேயுன்மையாறுரைசெய்வீரே

வசனம்- அகோவாருங்களம்மாதாயே, நீங்களெந்தவூர் எந்ததேசம்இந்தவனத்திலேஒண்டியாக அழுதுபுலம்பிக்கொண்டு வரவேண்டியகாரணமென்ன எங்களோடுகூடப் பிறந்தோர்க்குச் சமானமாகவெண்ணிபயப்படாமற்சொல்லுமம்மாதாயே

தமயந்திசொல்-விருத்தம்.

சொல்லுமென்றுரைத்தீரண்ணா தொல்லுலகாளும்ராஜன்
வல்லவனளேந்திரன்கொண்ட மயில்தமயந்தியென்பேர்
பொல்லாதசனியனாலே புருஷன்பிள்ளையும்பிரிந்து
எல்லாத்துன்பத்திற்காளா யிருந்திங்கேயான்வந்தேனே

வசனம்- அகோவாருங்களண்ணே செட்டிமார்களே நான்விதர்ப்பதேசமாளப்பட்ட வீமராஜன்புத்திரியாக்கும், என்பேர்தமயந்தியென்றுசொல்வார்கள்நிஷதபுரியாளப்பட்ட நளச்சக்கிரவர்த்திமகாராஜனுக்குநான்பாரியானபின்பு சநிபகவான் மாயையினாலேராஜனும் நானும்வனத்துக்குவந்து ஒருவரை ஒருவர்விட்டுப்பிரிந்துதேடிவரும்போதுஎன்னைக்கொல்லவந்தசர்ப்பத்தை ஒருவேடன்சம்மாரஞ்செய்து என்னைச்சேரவேணுமென்றுவராதடிஅக்கினியாயெரிந்துபோனான் இப்பால்நான்வரும்போது சுவாமியினிடகிருபையினாலே தங்களைக்கண்டேனண்ணா-தங்கள்பிறவியைப்போலெண்ணி துணையாகவழைத்துக்கொண்டுபோய் சுவாகுபட்டணம் சேர்த்துவிடுங்கோளண்ணா செட்டிமார்களே,

செட்டிகள்சொல்-வசனம்.

அகோவாருமம்மாதாயே ஜெகதீஸ்வரி அந்த சநிபகவான்செய்தமாயைகளை அரியரப்பிரம்மாதிகளாலு மறியக்கூடாது நாங்களும் சுவாகுபட்டணத்துக்கு சிலவியாபாரங்கொண்டுபோகிறோம் எங்கள்பின்னேவந்தால் அழைத்துக்கொண்டுபோய்விடுகிறோமம்மாதாயே.

பொது-தரு-இ-ம்-சௌராஷ்டிகம்-ஏகதாளம்.

செட்டிமாருடனேகூடித் தேன்மொழிநடந்தனளே.

பட்டணம்பறிகொடுத்து பத்தாவையுங்கைவிடுத்து
துட்டவேடனையெரித்து சுவாமியைநெஞ்சிற்குறித்து (செட்டி)
கொடியிடையுந்தத்தளிக்க கோதைபாதங்கொப்புளிக்க
மடமயில்தமயந்திமாதுவரும்விதியையெண்ணியிப்போது (செட்டி)

யானைசிம்பசார்த்தூலங்கள் யாளிபுலியரவங்கள்
கானகமிருகங்களோசை கண்டுபத்தினிதமயந்தி (செட்டி)

பொதுவிருத்தம்.

பத்தினிதமயந்திப்பெண்பத்தாவும்வாராதாலம்
சித்தமுந்தியங்கிக்காட்டில் செட்டிகள்துணையாய்ச்செல்ல
அத்தடங்கனிலேரால விருகமுங்களுமங்கவ்டங்
குத்தமிதாகந்தீர வுண்டுநீருதங்களும்மை

இதுவுமது.

உண்டுநீருநன்கும்போது வுன்னியேகலிராஜேந்திரன்
அன்றுளபகையையெவ்வாறி யானையைப்போலுருபங்
கொண்டுகெர்ச்சித்துவிமன் கோறைக்குத்தலோடராய்வந்த
திண்டிறலவணிகர்தம்மைச் சேதிக்கவந்ததன்றே

யானைவருகிற-பொது-தரு-இ-ம்-கன்யாசி-ஆதிதாளம்.

யானைவந்துதேசுகளே-யானைவந்ததே
தானதலிர்ப்கடல்தாபாசங்கங்கள்
வானத்துள்ளோருமற்றெவருநிலைகலங்க (யானை)
பதியுமாகமிழந்துபோகப்
பாவையும்பாலரும்வேறு தூருக்
கெதியற்றவனைத்தனிலேபக
கிளிமொழிதமயந்திக்குமுன்பாக (யானை)
ஆதியிற்செய்தகதையைமனதிலெண்ணி
யாசதுபுட்காரனானதற்கே பண்ணி
வேதிவேசெய்யகளதுமனம் குண்ணி
விட்டமின்றானேமிகவருத்தந்தண்ணி (யானை)

பொது-விருத்தம்

ஆனைபோல்வந்தசநிபகவான்றானு
மருவைதமயந்தியைக்கண்டார்ப்பரித்துக்
கானகத்திலநித்திரைசெயும்வணிகர்தம்மைக்
காலினும்தேய்த்துயிரைவாங்கும்போது
மான்விழியாணடுங்கியஞ்சிப்பயந்துசிந்தை
வாடிவொண்டியாகவனுந்திரத்திலோடித்
தினதயாபரந்தமுகுந்தாவென்ன
செய்குவேனெனப்புலம்பிச்செப்புவாளே.

தமயந்தி செட்டிகளிறந்ததைக்கண்டு புலம்பல்

தரு-இ-ம்-கமாஸ்-ஆதிதாளம்.

இந்தவிதிக்கென்னசெய்குவேன்-ஏழைபங்காளா
இந்தவிதிக்கென்னசெய்குவேன்.
இந்தவிதிக்கென்னசெய்வேன் எப்படிநானினியுய்வேன்
முந்தசெய்பவமிதாமோ முழுதுஞ்சோதிக்கலாமோ (இந்தவிதி



பச்சவடம்பறிகொடுத்தே-பாவாகதேவா
பத்தாவையுங்காட்டில்விடுத்தே
அச்சமுடனேஓட்டமெடுத்தேன் துணையாய்வந்த
பாரியைப்பறிகொடுத்தேன்
மச்சக்கூர்மவராஹமா லட்சுமிக்காமியெனம்மா
ரக்ஷிப்பாய்சிதாபிராமா நீநினைந்தாலெபரிதாமா. (இந்தவிதி)

இந்திரனால்வந்தகுறையோ-சநிபகவான்
இழைக்கத்தாலெய்தசிறையோ
தங்கையென்தாய்த்தவக்குறையோ அல்லதுராஜ
சக்கிரவர்த்திசெய்தகுறையோ
சந்திரகுலத்திற்பிறந்து தண்டகாவனந்திரிந்து
வந்தவழியிற்பரிந்து சொந்தமாவதோராதிந்து. (இந்தவிதி)

முன்னறியேன்பின்னுமறியேன்-சநியால்வந்த
மோசமென்பதையுந்தெரியேன்
அன்னிதமரையொன்றுங்குறியேன்-உயிர்வைத்திருந்து
அவனிமேல்வினைமேற்றறியேன்
பன்னகசயனுபார்ப்பீர் பதிவிபென்றுயரந்தீர்ப்பீர்
தன்னையடுத்தோரையேர்ப்பீர் தவவணிகருய்யப்பார்ப்பீர(இந்தவிதி)

தமயந்திசொல்-பத்தியம்.

ஐயவேலுசாடி தோர்த்ததற்கழுவனோ-பதியாசருக்கழுவனோ
பாலனைவிடுத்தே விருப்பதற்கழுவனோ-பறித்ததுயிலுக்கழுவனோ
தையலெனைவிட்டேகும் நாயகற்கழுவனோசர்ப்பந்தனக்கழுவனோ
தப்பிதன்னைத்தீண்டும்,வேடனுக்கழுவனோ-தனவணிகருக்கழுவனோ
வையகந்தனில்வந்த விந்தனைக்கழுவனோ - வளர்ந்ததைதாய்க்கழுவனோ, வஞ்சகஞ்செய்தசநி வாதனைக்கழுவனோ - வனமவந்ததற்கழுவனோ, ஐயோநான்பெண்ணாய்ப் பிறந்ததற்கழுவனோ- யாரார்குறைக்கழுவனோ, ஆதிசெல்வத்துடனரசாட்சியருள்செய்வாய்-அயயவாதக்காடவுளே.

பொது-விருத்தம்.

திருமிகர்தமயந்திபெண் செட்டிமாரிறந்தபின்பு
அரியதமனதிலெண்ணி யடித்தழுதலறப்போது
மருமலர்த்துளவமார்பனீ வணிகரையெழுப்பவப்போ
துரிதமாய்வணிகர்பின்னால் சுவாகுபட்டணம்வந்தாளே.

(வ-ம்) இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் ரிஷியினுடைய ஆசிரமத்தைவிட்டுப்பொதிமாட்டுக்கார செட்டிகளைத்துணையாக அழைத்துக் கொண்டுவரும்போது இவ்விடத்தில் நல்ல ஜலமும் குளிர்ந்தகாற்றுமாயிருந்ததினாலே தமயந்தியானவள் தாகந்தீர்ந்து நித்திரைசெய்ய அப்போது சநிபகவான் ஆனைரூபமெடுத்துவந்து நித்திரைசெய்கிற செட்டிமார்களைக்கொன்று போட அப்போதுதமயந்தி துணையாகவந்த செட்டிகளிறந்துபோனதைக் குறித்து மிகவுங்கலங்கி ஸ்ரீமகாவிஷ்ணுவை

ஸோத்திரஞ்செய்ய அப்போது ஆகாயத்தில் அசரீரியாக்கொண்டுபிற க்க அகனுல்இறக்குபோலசெட்டிகளை உய்வ்வடாகத்தமயந்தியை யழைத்துக்கொண்டு சுவாகுபட்டணம்போகிறதையெப்படியென்றால்.

(தரு) அன்னமபோல்நடந்து — தய்யாடி
அகங்குழைந்து — முகம்வாடி
பொன்னுடலம் — வேர்வையோடி
புந்தயிறபசியும் — நீடி (செட்டி)

செட்டிகள்சொல்-வசனம்.

அகோவாரும்மகாராசே ராஜபரமேஸ்வரி உங்களை இதுவரையி லும் காப்பாத்தியழைத்துக்கொண்டு சுவாகுபட்டணமட்டு சேர்த் தோம நீங்கள சஞ்சலப்படாமல் எவ்விடமும்போகாமல் சுகமாய் இந்தப்பட்டணத்திலதானே வாசஞ்செய்யுமம்மா நாங்களகொண்டு வந்த சரக்குகளையெங்கேயாவது கொண்டுபோய் விற்கப்போகிறோம் நீங்கள்போய் வாருங்களம்மாதாயே.

பொது-விருத்தம்,

சந்திரபிம்பமொத்த தமயந்தியாதாளும்
வந்தனள்சுவாகுராஜன் மாநகர்வீதிதன்னில்
அந்தமாநகரிலுள்ளோர் சருவையுமொருங்கண்டு
சிந்தையுமதங்குநின்று திகைத்துமேசெப்புவாரே,

தமயந்தியைப்பார்த்து-ஊர்ஜனங்கள் - விசனப்படுதல்-கண்ணிகள்.

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

ஆரடியம்மா யிவள் ஆரடியம்மாபோகிற
தாரடியம்மா சருக்காய் பாரடியம்மா
தாரணியி னிக்கனிகத காரனங்கைப்போலவாருந்
தான்கண்டதில்லேயம்மா-தங்கையரே
காரணன்மனைவியோதான் வாரணவிந்திராணியோதான்
நான்முகனுயகியோதா னகிலுமம்மா இவள்
சங்கரன்படைத்தசிவ சத்தியோயித்யகல்யாணி
தமயந்திதேவிதானோ தங்கையரே
அங்கவேள்ரதியோ ரம்பையூர்வசியோ
ஆகாசவாணிதானோ ஆச்சரியமேசொலலும்
மண்டலத்திலிந்தப் பூவையிருக்கப்பிறமன்
பெண்களையேன்படைத்தான் புகலுமம்மா
ஆமிவளுருவம்போல நாமெங்குங்கண்டதில்லை
அரசன்தேவிக்குரைப்போமஆச்சியமேசொல்லும்.

பொது விருத்தம்,

இந்திரவுலகமாத ரிறங்கியேபோற்பிறங்க
வந்தனஞ்செய்தாய்பை மாதர்களாசிகூறச்



சுந்திரவஸ்திரபூஷ ணங்களணிந்துக்கொண்டு
சந்திரமுகத்தாள்கோகிலாதேவிசபையில்வந்தாளே.

கோகிலாதேவிவருகிற - தரு-இ-ம்- பைரவி-ஆதிதாளம்

கோகனகத்தைநிகர்கோலதயபொறும்ராஜகோகிலாதேவிவந்தாள்
மாகனகப்பணிகள-வயிரமுத்துமணிகள்
தேகந்தனிலேபூண்டு சேடியர்கைலாகுகொண்டு (கோகனக)
தாமரைமலர்பதத்தை தண்டைசிலம்புகொஞ்சச்
சரிகையியப்பதனந்தகதகவெனமிஞ்ச
மாமதிரதியிவள் வடிவுசாயலுக்கஞ்ச
வாலைகாயகிபோலே வந்தாள்சபைகள்கெஞ்ச (கோகனக)
யாம்பின்மகிப்பினை பளபளெனமதித்துப்
பச்சைத்தகைகயிழைத்துச் சுட்டிமுருக்கிமுத்து
மான்விழிநாசிக்காபரணமூக்குத்திநத்து
வரிவிழிநுகவிளில் மைதிலகமும்தரித்து (கோகனக)
வன்னச்சரிகை துயில் மருங்கிலிறுக்குகட்டி
மார்புயபாருசி வயிரமிழைத்தமொட்டு
மின்னுமேகலைபணி விளங்கவொட்டியாணமிட்டு
பின்னற்சடையணிகள் பிரளத்தொங்கவேவிட்டு(கோகனக)

தாதிகள்சொல்வசனம்

அகோசரணஞ்சரணமம்மாதாயே ராஜபரமேஸ்வரி நம்மிட ஆ சாரமுகவழியாய் ஆரோவொருஸ்திரீசந்தேபோகிறாள் அவளைப்பார்த்தா ல் லட்சுமியோசரஸ்வதியோ இந்திராணியோ அல்லதுரதிதேவியோ இவர்களையெல்லாம் ஒருபக்கஞ்சொல்லலாமா இந்தஸ்திரியை நான் களிதுவரைக்கும் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை கண்டதுமில்லை நாங்களென்னசொல்லப்போகிறோமம்மாதாயே.

கோகிலாதேவிவிருத்தம்

சாதிபேசகியேயந்தத் தையலைநீங்கள்சென்று
போகவொட்டாமல்தடுத்து புகலுவீர்பூதலத்தில்
எதொருவருங்காணாத வெழின்மிகுவடிவுள்ள
மாதினைநமதுபக்கல் வருகவேயழைப்பிப்பாயே.

(வ-ம்) அகோவொருபெண்ணை சகிமார்களே அந்தப்பெண்ணைப் போலே நாங்கள்கண்டதுமில்லை கேட்டதுமில்லையென்று சொல்லு கிறீர்களே அந்தஸ்திரியை நம்மிடமழைக்கைக்கழைத்துக்கொண்டுவாரும் பெண்மணிமார்களே

சகிவிருத்தம்

தாயேயுயிர்சோதிகில்லா தாரணியாளுமெங்கள்
ஆயிராஜாத்தியுன்காரியவாய்மொழியைக்கேட்கப்
போயழைத்திடவுக்காரம் புரிந்தனளாகையாலே
சேயமாய்வந்துநன்று செப்பிதுக்கிறிப்சொல்லுவாயே

(வ-ம்) அகோவாரும்மாதாவே எங்கள்ராஜாத்தியானவள் உங்களையழைத்துக்கொண்டுவரும்படி உத்தரவாகியிருக்குது நீங்கள் வந்துகண்டுவார்த்தைபேசிப்போங்களம்மாதாவே

தமயந்தி-விருத்தம்.

காளிலம்புகழுங்காயே கமலேஸ்வரம்மாவென்னை
வளைத்தீர்கள்காணே இரப்பவர்களிலுமேழை
கானகந்தோறுஞ்சுற்றிக் கடிகசர்கண்ணில்லந்தேன்
தானழைத்திட்டசெய்தி தமையுடன்சாற்றவீரே

(வ-ம்) அகோசரணஞ்சரணம்மாதாவேராஜபரமேஸ்பரி இச்சப்பட்டணத்தில் பிழைக்கவந்தவளை அழைத்தகாரணம் திருவுளம்பற்றவேணுமம்மாதாவே •

கோகிலாதேவிக்கும்-தமயந்திக்கும்-தர்க்கம்-தரு

இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்,

ஆர்நீயம்மா-சொல்லென்றுக்கு-மந்சதேசம்மா
பாரிலுனைப்படைத்த பாவிபிர்மதேவன்
ஊரடுஞ்சனைக்காரனேகெட்டாலோ (ஆர்நீ)

சரணமென்தாயே-சொல்வேன்கேளும்-சமூகத்தில்நீயே
அருளைக்ரணைவொளி யானைகிகரமுள்விழி
நிரம்பமென்மேல்வைப்பீர் செப்புவேன்காப்பீர் (சர)

என்கேநீயம்தாய்-உன்பேரென்ன-என்மனம்சொந்தாய்
உங்களுருமெது வுண்மையாகவோது
மங்கையரேதுது வையாமலிப்போது (ஆர்)

வாய்பதிகாமு-விதிவசம்-வந்தனன்காடு
காணேபட்டபாடு காய்தகலிலுங்கேடு
கானகதான்விடு காவிநிலுஞ்சேடு (ஆர்)

அன்னமேதேனே-எழில்மிகு-மடமுருபமானே
உன்னிடபேரென்ன வுரைக்கிடுவாய்கண்ணே
லென்னுமொழிக்குயிலே யெங்கள்பெண்மயிலே (ஆர்நீ)

க்காவதியே-என்பேர்சயலந்திரியிதியே
எந்தன்கணவனேன் செங்கருவராஜன்
சொந்தமாயெனைவிட்டார்சோகமுன்னைக்கொட்டார் (சர)

சாணந்திரியகதே-நீயன்நான் தனிமேபோகாதே
சயனம்போலுமானே சகிட்டேயுனைத்தாவே
பயமில்லைமகிரும் மாங்கென்றெலலோரும் (ஆர்நீ)

கோகிலாதேவிவசனம்.

அகோவாரும்பெண்ணே சயனந்திரிநீயம்மிய அரண்மனையிலேயிருந்துகொண்டு பிள்ளைகளுக்குக் கல்விவீ எண்ணெய்பிட்டுஸ்நானஞ்செய்வித்து புஷ்பருபனீர் பரிமளாதிகளை யணியச்செய்துக்கொண்டு சுகசௌக்யமாக இருமம்மா தாயே



பொது-விருத்தம்

கோகிலாதேவியம்மன் குணமுடனுரைக்கக்கேட்டு
சாய்கமாய்த்தாதியேபோல் சயனந்திரிசெய்துக்கொண்டு
பூக்கழைக்கட்டும்போதும் பொட்டுமைகூட்டும்போதும்
ஏந்திழைபழமைதன்னை யெண்ணமொந்துருகுவாளே.

தமயந்திபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

வேணபணிவிடைகள் வெள்ளாட்டிமார்கள்செய்ய
வீற்றிருந்தேனையோ தெய்வமே
சானல்தொடவுமெச்சில் தாவெடுக்கவும்விதி
தான்வந்துசேர்ந்ததையோ தெய்வமே
மாந்தரினையனைய காந்தட்காம்வலிக்க.
பூக்கழைப்பூவுகட்ட தெய்வமே
சேர்ந்துதொடுத்திடவும் பாக்கிவேலைசெய்யவும
நிலத்திற்பெண்பிறந்தேனே தெய்வமே
மங்களராஜர்குல மாதர்க்கஞ்சனந்திட்ட
வைகதாயோஎனைப்பாவி தெய்வமே
இந்திரசேனையும் எந்தனையுமறந்து
எங்கேயிருக்கிறாரோ தெய்வமே
வங்கேன்றாயசந்தித்து சொந்தமுட்னைகோர்த்து
வாழ்வதெக்காலமையோ தெய்வமே

பொதுவிருத்தம்.

தாதிபோலேவல்செய்துத் தமயந்திமாதுதானும்
மாதரிலாசியான மங்கையும்புலம்பிவாடி
வேதனைமிகுந்துயுள்ள மெலிந்துதன்னுயிர்ப்பிராயலர்
காதன்செய்தியையெண்ணி காளும்விம்மியிருந்தாளன்றே.

(வ-ம்) இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் சுவாகுபட்டணம்வந்து தன் சிறியதாயாரான கோகிலாதேவியினிடமாகத் தான்சயனந்திரியென்னும் பேரிட்டுக்கொண்டு தாதிகள்செய்கிறவேலைகளைச்செய்துகொண்டு மகாவிசனத்தோடிருக்கிறதினாலே விதர்ப்பதேசமாளப்பட்ட வீமராஜன்தன மருமகனும் களச்சக்கிரவர்த்திமகாராஜாவும் தமயந்தியும் சூதாடலான் மனையினாலே இராச்சியம்விட்டு வனவாசம்போனவர்கள் வாக்கானாரென்று விசாரிக்கும்படிக்குமாகச் சபைக்கு வருகிறவிதம் எப்படியென்றால்.

பொது-விருத்தம்.

வயிரநவமணிமகுட்முடியிலங்க
வையங்கவிருகுழையிலாத்தக்குண்டலங்கள்
வெயிலைப்போலொளிவீசமார்பிற்கண்டி
மின்னவல்திராயாணங்கள்மெய்யிற்பூண்டு

கயிருரம்பைபராகவாணர்போற்ற
நற்கவரிசாமரைகள்கருட்டிவீச
ஜெயஜெயவென்றேகட்டியங்கள்கூறத்
திகழ்சபையில்விமராஜேந்திரன்வந்தான்

விமராஜன்-தன்கொலுவுக்குவருதல்-தரு-இ-ம் - சுருட்டி-ஏகதாளம்.

விரலட்சமிகாசன்-விமராஜன்வந்தானே.

சூரியகுல துல்கனைகளங்கன்
துரந்தரராஜபுரந்தரனென்ன. (விரலட்)

மாணிக்கவமணிகள் பதித்தமகுடமின்னலே-சிரசில்
வயிரப்பச்சைநீல மிழைத்தகவேகள் துன்னவே-கழுத்தில்
ஆணிப்பொன்சரப் பணிகளிலங்க
அபரஞ்சிச்சந்திரவாரங்குலுங்க
வாணவர்மகுடமார்கள்வலங்க
மாநிலமன்னர் திரைபணந்திலங்க (விரலட்)

அதிரதர்மகாரதர் சமரதத்கரதர்சூழ
அங்கவர்வங்கனர் கொங்கணர் டங்கணரடியினிற்றாழ
குருதர்குச்சரர் குடகர்போற்றக்
கொங்கணர்வந்தியர் கைகுவித்தேற்றப்
பதியினில்விதர்ப் பயபுரிவிமன்
பன்புகயாளகுணவிகயாசன் (விரலட்)

வித்தைவிநோதங்கள் துத்திமத்தாளங்கள்
மேளம்முழங்கிவர
தத்திமித்திததிமித் தத்தையர்கற்றிச்
சலாம்வரிசைகள் தர
உத்தமவேதியராசிகூற வுறவினர்சந்தோஷமீற
சித்தசனெனமொழியும்றதாரசெகபதியதிபதிழ்யராநிர (விர)

விமராஜன்சொல்-விருத்தம்.

சந்ததமதுரைசல் சார்ந்தகட்டியனேகேளாய்
வந்தவாறறிந்துசொல்லும் மாருதந்தனக்கொப்பான
தந்திரத்தினிலும்வெற்றி தனின்மிகுஞ்சாரணனை
இந்தநாழிகைக்குளெந்த னிடம்வரவழைத்திடாயே

(வ-ம்) அகோவாருமபிள்ளாய் கட்டியக்காரா நம்மிட சாரணபுரோகிதனை அதிசீக்கிரத்திலழைத்துவாரும்பிள்ளாய்கட்டியக்காரா.

கட்டியக்காரன் சொல்-வசனம்.

அப்படியேமகாபாக்யமையா ராஜகெம்பீரா பாரக் பாரக்,

பொது விருத்தம்.

தயமதில்விதர்ப்பதேசத் தனையாரசாரணர்விமுன்
நலமொழிகேட்டுத்தாதர் நளன்றமயந்திதன்னை



உலகெலாந்தேடிப்பார்க்க வுறுதியாய்வேகமாகப்
புலம்விசாரிக்கவேதான் புரோகிதர்வருகின்றாரே

சாரணன்வருதல்-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

சாரணன்வந்தார்-கூடியிதோ-சாரணன்வந்தார்
சாரணன்வந்தார் தாரணியெங்குஞ்சுற்றத்
திரளளன்றமயந்தி தமைக்காண (சாரணன்)

பாதரக்ஷைபுனைந்து.யிடையில் பட்டுவஸ்திரமணிந்து
பேதுவாங்கத்துணிந்து கையிற் பிரம்புத்தடியும்புனைந்து,
சாதகமாய்ச்சண்டமாருதம்போலே தாவித்தாவினின் றுலாவி
கர்தவழிகணத்திற்சென்றெருக்காலே (மென்மேலே
கர்த்தன்விமராஜன் சபைமேலே
சரிகைச்சோமன்சுட்டி மார்பில் தங்கப்பூணூல்மாட்டி
அரியதந்தனைகாட்டி உள்ளம் அதிபராக்ரமமேட்டி
திரிலோகமுமொரு நொடியினிற்செல்லுவோம்
தெரியாதிருப்பவர் புலங்கண்டுசொல்லுவோம்
பரிவாயிருவரும் கலந்துறவாடிப்
பலருமறியதன் யாசியைப்பாடி (சாரணன்)

காட்டினிற்சென்றாலும் எந்த நகரினிற்சென்றாலும்
காட்டினிற்போனாலும் என்னகாரணமானாலும்
தாட்டீகமாகஒரு வோட்டமதாகப்
பேட்டிக்காணவிமராஜன்முன்பாக (சாரணன்)

சாரணன்-வசனம்

அகோசிரஞ்சீவி ஆசீர்வாதமங்களம் சுகிபவஸ்துதீர்க்காயஸது விமராஜனே எங்களை வரவழைத்தகாரியம் சொல்லவேணுமையா விமமகாராஜனே.

விமராஜன் விருத்தம்.

புகலறிந்துரைக்கும்கீர்த்தி புகழ்பெற்றசாரணனே
நகரசிழந்தபேதை நம்மிடம்வரவிங்காணோம
செகமெலாந்தேடியெந்தத் திசையினில்களனுமெந்தன்
புதல்வியுமிருக்கின்றாரோ போய்பார்த்துவருகுவீரே

(வ-ம்) அகோவாருமையா சாரணபுரோகிதரே என் மகளாகிய தமயந்திதேவியும் என்மருகனாகிய நளச்சக்ரவர்த்திமகாராஜனும்சநி பகவான் மாயையினால் ராச்சியம்விட்டு வனவாசம்போனவர்கள் இதுவரையிலும் வரக்காணோம் அவர்களெந்தவிடத்தி லிருக்கிறார்களோ தெரியவில்லையே நீங்கள்தேடிப்பார்த்துவந்து சொல்லுங்களையாசாரணரே.

சாரணன்-தமயந்தி-கணவனைத்தேடுதல்-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

தேடிப்பார்த்துவருவோம்நாமுநதேடிப்பார்த்துவருவோம்
கூடித்தேடியிந்தக் குவலயந்தனிலுள்ள
நாடெங்கும்புகழ்நள ராஜன்தமயந்தியைத் (தேடி)

குப்பைபயரேவாரும் கொக்கனைதேசஞ்சுகந்திப்பாரும்
தப்பாமல்கனலுக்தமயந்தி தன்னைப்புங்கவைட்டோரவாரும்
இப்புவிதனிலெங்கு மிருக்கிறயிடத்தேடும்
எப்படியாகிலு மிருவரும்வெளிப்படுமே (தேடி)

ஆக்கசெலம்பாடி மலைவனக்கன்னிலெங்குக்குதேடி
தக்கபடியம்பெறவாக் தமயந்திதனைக்கைவைத்தோன்போகலாம்
அங்கிருந்தாலனைத்து யாருமனங்களித்துச்
சங்கைகயில்லாமலவிமல் சமூகஞ்சொலவைநில்லுமுன் (தேடி)

வீமராசன்சொல்விருத்தம்

தாரணிதனையிழந்த தமயந்திகளெநிரான்றன்னைத்
தாரதேசங்கள்கற்றிச் சுலகுமாரகரைக்கண்டு
பார்புகழ்வீமராசன் பத்தினிசமூகந்தன்னில
ஆரியனருணவ்வாலி யாண்மனைக்குளவந்தாரே

(வசனம்) இதப்பிரகாரம் வீமராசனானவர் தன்மகளையும் மருமகனையும் ராச்சியமுதலானது மிழந்து வனவாசம் போனவர்களைக் கண்டுபிடிமென்றிற விசனமடைந்து சகலவேதவேதியாகரமுப்பிடித்து சவ்ஸ்தாரங்களைப்பார்த்து புரோகிதர்களுக்கு வேண்டிய வெகுமதிசெய்து இந்த ஐம்பத்தாறுதேசங்களும் மலை வனம் வனந்தரங்களெல்லாம் தேடிப்பார்த்துவாருங்களென்று சொன்னாகியபுரோகிதர்களையனுப்ப அவர்களொன்றுகதேடிக்காணாமலவர்களுமப்படியே வரும்போது ஆகப்பகிபதியாகிய சவாகுராசன்அரண்மனையில் பிராமணருக்கு பூரிகொடுக்க அப்போது விதர்ப்பபட்டைக்கிலிருந்துவந்தசரவனபுரோகிதரும் இதுதெரிந்து அரண்மனைக்குள்ளேபோக அப்போதுகோகிலாதேவியானவள் சயனந்திரியென்கிற தாதியைப்பார்த்துச் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்,

கோகிலாதேவிசொல்-விருத்தம்.

தாதியேயென தருமாங்கி சயனந்திரிமாதேயிந்த
வேதியர்தமக்கிப்போது விருப்பொங்கபம்பரங்கள்
போதவும்படைத்தநீசாள் பொய்ப்பிடவையுப்பவேண்டி
ஆதலாலுனையழைத்தே னப்படிசெய்குவாயே

(வ-ம்) அகோவாரும்பெண்ணே சயனந்திரிமாதே நம்முடைய அரண்மனைவாசல்லேலே வந்திருக்கிற பிராமணருக்கெல்லாம் அவுடனைதாம்பூலங்கொடுத்து பஞ்சபட்சபரமான்ன முமபடைக்க உத்திரவுகொடுத்து இன்னைம்அவர்களுக்குவேண்டிய சாமக்கிரயமெல்லாம் கொடுத்தனுப்பும் பெண்ணே சயனந்திரிமாதே,

சயனந்திரிசொல்-வசனம்,

அகோவாருங்களையாசுவாமி புரோகிதருக்களே இதோவுங்க



ளுக்குத்தேவையானதுகளெல்லாம் தருகிறோம் வாங்கிக்கொள்ளுங்களையா சுவாமி

சயனந்திரியாகிய-தமயந்திக்குப் புரோகிதர்சொல்-விருத்தம்

செந்திருவனையமாதே செயவீமராசனீன்ற
சுந்தரத்தமயந்திப்பெண் கோதையேயம்மாநீங்கள்
எந்தனுமைகளுமெங்கே வொண்டியாயிங்குவந்து
இந்தவாறுனதென்ன யெந்தனுக்குரைசெய்வாயே

(வ-ம்) அகோவாருமம்மாதாயே ராசபரமேஸ்வரி நீ விதர்ப்பபுரிவீமராசன்வயிற்றிற்பிறந்து நளச்சக்கிரவர்த்திக்குப்பாரியாயிருந்து இப்படிக்குத்தாதியேவல்செய்ய உன்தலையில் பிறமதேவனெழுதினனோ என்னகாரணம் உன்னதிஷ்டமிப்படியாச்சுதோ உன்பிராணநாயகரெங்கேபோனார் எங்களுக்குச்சொல்லவேணுமம்மாதாயே

தமயந்திசொல்-பத்தியம்.

எங்கனைத்தெரிந்துகேட்கு மொழில்மறையோரேகேளீர்
தந்தைதாய்ச்செய்தநிதோ தலைவிதியாலோநம்மன்
அந்தகனெழுதம்வாறு மனுக்குறையாதுகண்டீர்
இந்தளிதல்காய்த்தேக மெடுத்ததற்கென்செய்வேனே

தமயந்தி-புலம்பல்-தரு-இ-ம்-கும்பகாம்போதி-ஏகதாளம்

தெய்வமறையோரேயென்ன செய்குவன்பிருவுளமே
சென்மமெடுத்தென்னபலனே-பெண்ணென்றுமன்னரில்
சென்மமெடுத்தென்னபலனே
மன்னவரிற்பிறந்திருந்தும் வாழ்ந்துசுகித்திருந்தும்
வனவாசஞ்செய்யலாச்சுதே-மன்னனைவிட்டு
வனவாசஞ்செய்யலாச்சுதே
மன்னனைப்பிரிந்தபாவி வருகயில்கண்டபாம்பை
வனவேடன்கொன்றெரிந்தானே-என்மையல்கொண்டு
வனவேடன்கொன்றெரிந்தானே
வேடனெரிந்தபின்னால் விதியைநினைந்துகொண்டு
மெய்ம்மறந்திங்குவந்தேனே-விதியையெண்ணி
மெய்ம்மறந்திங்குவந்தேனே
வந்துவேஷமாறிகாதம் மாதாகோகிலாதேவி
மகாராசிதன்சமூகமே-வயிர்வளர்க்க
மகாராசிதன்சமூகமே
வயிர்வளர்த்திடவேண்டி மாலைகட்டித்தான்கொடுத்து
மயிர்வாரிச்சடைபின்னவும்-மைபொட்டுமிட்டு
மயிர்வாரிச்சடைபின்னவும்,
சடைபின்னிச்சேலைகட்டித் தாதிபோலேவல்செய்து

சயனக்கிரியென்றும்பேரிட்டுச்-சகியனுலே
சயனக்கிரியென்றும்பேரிட்டு
பேரிட்டேன்தாயிடத்திற் பிறத்தியார்போலேநானும்
பிழைத்திருக்கிறேனையனே-காலங்கழித்துப்
பிழைத்திருக்கிறேனையனே

சாரணன்சொல்-விருத்தம்
சந்திரவதனத்தாயே தமயந்தியம்மாவுந்தன்
தந்தையினிடம்போய்ச்சொல்லித்தபலர்துணையைக்கூட்டி
இந்திரபோகமாக விப்போதேவிதர்ப்பதேசம்
வந்துமேசேர்ச்செய்வேன் மனமகிழ்ந்திருந்திடாயே

(வ-ம்) அகோ சிரஞ்சீவி ஆசீர்வாதிம்மாதாயே ராஜபரமேஸ்வரி உங்களிடகஷ்டகாலங்களெல்லாம் நீர்ந்துபோகுது இனிமேல்சஞ்சலப்படாமலிரும் இக்ஷணமே விமாசனிடத்திற் போய்த்தெரிவித்துடங்களை அவடம்அழைப்பிக்கும்படிசெய்கிறோம் நீ இனிமேல் விசனப்படாமல்சுகமாயிருமம்மாதாயே ராஜபரமேஸ்வரி

சாரணன்-விமாராஜனுக்குச்சொல்-விருத்தம்
மாமுடிமன்னர்சூழ்ந்த வளைக்குமார்த்தாண்டாகேளீர்
பூமியிலநேகதேசம் போய்ப்பார்த்தோம்களைக்காறோம்
க்ஷேமமாயுனதுபுத்ரி சீவிதாய்விட்டிடக்கண்டு
வாயிங்குவந்துரைத்தோ மையனேயறிகுவீரே

(வ-ம்) அகோ சிரஞ்சீவி ஆசீர்பாதமையாவிமாராஜனே இந்த அவசிகடைஐம்பத்தாறு தேசம்காடுமலைவனம்வனாந்திரங்களெல்லாந்தேடிக்காணமல் சுவாகுபட்டணம்கோகிலாதேவியம்மாளிடமாக தமயந்தியம்மாள் தாதிவேலைசெய்துக் கொண்டிருக்கக்கண்டு வருதோம்ராஜயாராசனே

விமாசன்-புலம்பல்-தரு-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்
என்னசெய்குவேனையோ-இந்தவிதிக்கு
என்னசெய்குவேனையோ
என்னசெய்குவேனெந்தன் கன்னிகைதமயந்தி
மன்னவனையென்ன மாகவிருக்கிறாரோ (என்ன)
வினைத்திடல்துயர்பெருகுதே-மனம்பதறி
நினையுமறந்து போகுதே
சனிக்ரகத்தால்வந்த சர்ப்பனைதானேமுந்த
வனத்திற்குப்போனாரோ மைந்தனைப்பிரிந்தாரோ (என்ன)
தேசம்புகழ்கெம் பீரன்-செகமுழுதும்
செங்கோல்செலுத்தும் தீரன்
ஈசன்செயலோமறு வேஷமாகியேயங்கம்
நீசமடைந்தின்னொரு ராஜர்க்கேவல்செய்வாரோ (என்ன)
தஞ்சமென்றோனைவை தேனே-மகாகொடிய
பஞ்சமாபாதகஞ்செய் தேனோ



மஞ்சன்மனைவியையும் வனத்தில்விட்டவர்போக
வஞ்சகமென்னனின்றோர்தேடி மயங்கிடவைத்தாரேயோடி (என்ன)

விமாராஜன்சொல்-விருத்தம்.
சொன்னசொற்படிக்குக்கோனைகயேபாங்கிமாரே
என்மகள்சுவாகுபட்டண மிருப்பதாலவடமேகி
இன்னவாறெனவேகோகிலாதேவிக்கெல்லாஞ்சொல்லிப்
பொன்சிவிகையிலேவைத்துப் புத்ரியையழைத்துவாரீர்

(வ-ம்) அகோவாரும்பெண்மணே சகிமார்களே நீங்கள்சுவாகுபட்டணம் போய்என்சொழுந்தியாளானகோகிலாதேவியினிடத்தில் தமயந்தியம்மாள் வந்திருக்கிறதைத்தெரிவித்து சகலசம்பிரமத்துடனே அழைத்துவாரும்பெண்மணே சகிமார்களே,

தமயந்தியினிடம்-சகிமார்கள்வருகிற-தரு,
இராகம்-பிலாரி-ஏகதாளம்,
தமயந்திதேவியிடம் சகிமார்கள்வந்தனரே
அமுசம்போலேநடந்து ஆரணியங்கடந்து (தமயந்தி)
விதர்ப்பபுரியைவிட்டுவெய்யிலிலவதிபட்டு
பதைப்பாசுவாகுபட்டணம் பாதைகூடியக்ஷணம் (தமயந்தி)
கோகிலாதேவியிடம் கும்பிட்டுமைபாகர
பாக்காவிமாராஜேந்திரன பாக்கியர்சவிதியாகத் (தமயந்தி)

சகிகள்விருத்தம்.
இந்திராணுக்கிடாய்வாழு மிராஜபத்தினியேகேளீர்
சந்திரகுலத்தில்வந்த தமயந்திதேவியுந்தன்
சொந்தமாமகள்தானம்மா சொல்மொழியறிந்துபார்த்து
தந்தையாம்விமாராஜன் றான்கூட்டிவரச்சொன்னாரே,

(வ-ம்) ஆகோ சரணஞ்சரணமம்மா தாயே ராஜபரமேஸ்பரி எங்கள்விமாராஜாவானவர் தங்களிடமாகதமயந்திதேவிவந்து ஏவல்செய்துக்கொண்டிருக்கிறதுதெரிந்து உங்களுக்குத் தெரியப்படுத்தி அழைத்துவரச்சொன்னாரம்மாதாயே,

கோகிலாதேவி-விருத்தம்.
தாதியர்சொல்லக்கோகிலாதேவிமெய்மறந்து
காலதலைமுகத்தைகண்ணுய்க் கவனித்துப்பார்க்கும்போது
தாதியாவல்செய்யத் தாயேவுன்றலையிலவேதன்
ஏதுக்கென்றெழுதினாளோ வென்றவள்புலம்புவாளே

கோகிலாதேவி-புலம்பல்-கண்ணிகள்.
இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்,
என்னசெய்வேனேதுசெய்வே னிவ்விதிக்கென்னசெய்வேன்
இந்தவிதிவந்துதோ மகளே
கன்னியர்க்கரசியான மன்னவன்விமாராஜேந்திரன்
கருதியதவத்தால்வந்த கன்னிமணியே

இந்திரதேவர்களெல்லாம்லக்கனஞ்செய்தேவனைக்கும்
ஏகச்சக்கரேஸ்பரியாம எந்தன்மகளே
சந்திரகுலகனைகதிரவ் தனக்குல்லேப்பரியாகத்
தக்ககாரணமிதுவோ எந்தன்மகளே
பட்டணஞ்சௌபாக்கியமும் பவிசுபண்டாரமுடன்
பாலனுடபத்தாவுமெங்கே பாவிமகளே
விட்டுநீவெளவெழுவாரிக்க வேஷமெனக்கிடம்வந்து
விதமொன்று மரியேனே பிறந்தவளே
ஆயிரகதாநிபரமுன்னே பூசத்தாளிமெத்தைமே
லமத்தியுபசரிப்பார் ஐயோமகளே
பூவிதழுன்காலிற்பட்டால பொதுக்காமடகொப்புளிக்கும்
பொன்னடிகளகொப்புளிக்கப் புறப்பட்டாயே
பொற்சரிகைச்சேலையுடன் பொன்பட்டுடைப்பணிகள்
புனைந்துவாழ்ந்திருந்தாயே பூங்கொடியே
தாப்பலமாய்க்கேவலமாய்த் துயிலுமிலையாமல்லோ
கோணிதுமென்றலகாயே கோதையயிலே
பாவியென்கண்ணாலேபார்த்தும் பாக்கியமல்கொண்டேனே
பற்றுதேவயிறதுகான் பெற்றமகளே, வோ

கோகிலாதேவி-விருத்தம்,

அன்னமேதேனேயெங்க ளருந்தவக்கொழுந்தேயம்மா
என்னகாரணத்தினாலே விம்மலதுமாகவந்தாய்
உன்மனக்கவலைதன்னை யொன்றுமெல்லுமையிப்போ
மாம்மனக்கேதறுதற்கே விளம்புவாய்பாவையே

(வ-ம்).அகோவாருமம்மா என்னிருகண்மணியானமகளே சர்வலோகேஸ்பரியாகவாழ்ந்து மகாபாவியாகிய என்னிடத்தில் தாதியென்று பேரிட்டுக்கொண்டு இந்த வேஷமாகவந்தாயே என்னருமைமகளே நீயாதொன்றுக்கும் சஞ்சலப்படாமல் நடந்தகாரணத்தை சவிஸ்தாரமாகச் சொல்லடியம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

தாரணியாளவேவாழ்ந்து சயேன்செய்சதியாற்றும்ந்து
ஆரணியத்தில்வந்து அரசனுமெனைத்தூக்கத்தில
பூரணமாகவிட்டுப் போயினாரதனாலிந்தக்
காரணந்தனக்காளாகிக் கவ்வீகாவலவந்தேனம்மா

(வ-ம்) அகோ சரணஞ் சரணமம்மா தாயே என்னை இந்தவேஷமாவிருக்கும் என்னகாரணமென்றுகேட்கலாகிறீர்களே நாயும இராஜனும் பிள்ளைகளும் சுகத்துடன்வாழுங்காலத்தில் சனிபகவானிடமாயையினாலே ராச்சியமிழந்து வனவாசம்போன விடத்தில் இராஜன் என்னை நித்திரையில் விட்டுப் பிரிந்துபோனார் அவனைத் தேடிக்காணமல அநேகதுன்பப்பட்டு தப்பனிருத்தியப் போகச் சவ்கை



யாக தாதியென்று பேரிட்டுக் கொண்டு உங்கள் சமூகத்துக்கு வந்தேன் நான் தமயந்திதானம்மா தாயே.

கோகிலாதேவிசொல்-விருத்தம்.

தாயேயென்னம்மாகேளாய்ச் சதியனுலைதிப்பட்டு
நாயகன்றனைப்பிரிந்து நம்மிடம்வந்துசேர்ந்தாய்
சோபமாய்வந்ததாலே நீகலங்காமலுந்தன்
தேயத்திற்றந்தைபக்கஞ் சென்றுவாழ்ந்திருந்திடாயே.

(வ-ம்) அகோவாருமம்மா எனது புத்திரியாகிய தமயந்தி நீங்கள் சனிபகவான் மாயையினாலே ராச்சியமிழந்து புருஷனையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து எங்கோரும் துக்கப்படுகிறாயுடன் தந்தையாகிய வீமராசனிடம்போயுடன்பிள்ளைகளைப்பார்த்தாலதுசுகமாயிருமம்மா தாயே.

பொது-விருத்தம்.

மகள்தனைவீமராசன் மாளிகைக்கனுப்பவெண்ணிச்
சகலவாபரணவஸ்திரந் தண்டிகைசகிமார்சூழப்
புகழ்பெறுவிதர்ப்பதேசம் போய்வாருமென்றனுப்ப
அகமகிழ்விலாமற்றந்தை யவரிடம்வருகின்றாளே.

தமயந்திதன் தகப்பனிடம் வருகிற-தரு-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

தந்தைவீமசேனன்றன் பதந்தாடியே தமயந்திதேவிவந்தாள்
சகிமார்சூழத் தமயந்திதேவிவந்தாள்
அந்தமாந்தாதியர் அநேகர்புடைசூழச்
சிந்தைதயங்கிமுகந் திருகினையதவிவேறி. (தந்தை)

சிரியதாய்கோகிலா தேவியுத்தரவுகொண்டு
சிறப்பாகராஜவீதி தெருக்கள்பலவுங்கண்டு
அரியமிலைவைக ளாவணியத்தைநாடி.
அழகுதமயந்திப்பெண் ணருமையார்தனைக்கூடி. (தந்தை)

மயில்கள்புருவினங்கள் வாயிசரிலெவ்வளவுகள்.
பாயிலுங்குயிலினங்கள் பகர்வென்றுபூஷினங்கள்
சுயமாயமந்தப்பட கரிகள்முயல்கசேனை
கயல்விழியாதார. க கவரிசாமரைபோட. (தந்தை)

மன்னனோனையெண்ணி மங்கைமனந்துக்குண்ணி
அன்னமாகாமத்தண்ணி ராகவல்கொள்ளாமற்கன்னி
முன்னஞ்செய்தவினை முடிந்ததிப்படியென்று
என்னமாகத்தந்தை யிடத்திற்போய்ச்சேர்வதென்று (தந்தை)

வீமராஜன்தமயந்தியைப்பார்த்து சொல்விருத்தம்.

சீவாதந்தகமேயென்றன் சிரோமணியேயானபெற்ற
பாவைகோள்ளன்முன்செய்த பாவமாக்கியயோவுந்தன்
மட

நாயகன் றனைப்பிரிந்து நம்மிடம்வந்துசேர்ந்தாய்
கேவலமாகவந்து கிலேசம்விட்டுரைசெய்வாயே.

(வ-ம்) அகோவாருமம்மா எனது புத்திரியாகிய செல்வமே நாங்கள் செய்தபாவமோ அல்லது நீங்கள்செய்த பூர்வபலமோ ராச்சியத்தையும் பிள்ளைகளையும் விட்டுப்பிரிந்து வனவாசம்போனீர்களே, உன்னுடைய பிராணநாயகனெங்கேபோனார் ஒண்டியாய் அநாதிபோலவந்து ஏவல்செய்துக் கொண்டிருப்பானேன் உன் தலையெழுத்தோ விப்படிக்குப் பிரம்மதேவன் எழுதினானோ அல்லது (நீ) யார்செய்த பூர்வபலத்தினால் என்னிடம் வந்துசேர்ந்தாய் இனிமேல் நீ சஞ்சலப்படவேண்டாம் நீ வனவாசம்போனநாள் முதற் கொண்டு நடந்ததைச் சவிஸ்தாரமாகச் சொல்லுமம்மா தாயே.

தமயந்தி-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தந்தையேவீமராஜா தயாபராசொல்லக்கேளும்
எந்தனைநீயன்பெற்றுயிந்தகண் ணாகூழிக்கோதான்
சொந்தநாயகனுமென்னைச் சோதிக்கவிட்டுப்போனார்
அந்தரப்பக்ஷிபோல வலைந்துநான் வந்தேனையா.

தமயந்தி-தன்தகப்பனிடத்தில்-முறையிடல்-கண்ணிகள்.

இ-ம்-முகாரி-சம்பைதாளம்.

ஆதிமுதலின் றளவில் ஐயனேநடந்ததை
குதிநோப்பதிபிழந்தேன் றுணைவருடன்காட்டில்வந்து
காதலனனப்பக்ஷிதன்னைக் காவலன்பிடிக்கப்பின்னே
சோதனைசெய்யவேயன்னக் துகிலைப்பறித்தேகவின்னம்
அரசனும்நானும்வந்து அடவிதனிலேயுகந்து
ஒருதுகிலையிருவோரு முடுத்திசித்தரிசெய்தோம்பாரும்
பொருவனத்திலென்னைவிட்டென் பிராணநாதன்பிரிப்பட்டு
அருவையென்னையொண்டியாக வரசனும்பிரிந்துபோக
மயங்கித்தியங்கிவரும் வழியில்மறித்தாடியொரு
புடைசுமென்னைக்கொல்லவந்த போதுவனவேடனெந்தன்
[illegible] திருந்தா னங்கையெந்தனுவெரிந்தான்
மற்பொறியைக்கண்டேன் வணிகர்துணைகைக்கொண்டேன்
கேகயமெய்ப்ப செட்டிகள்னைத் தினந்தானைசெல்லப்பின்னே
பாதைகூடிச்சுவாகுநாடு பாவியகேன்பட்டபாடு
சிறியதாயுடனேமெய்யாய்ச் செப்பியிருவந்தேனையா.

வீமராஜன்சொல்-விருத்தம்.

பாரினிலெங்களைப்போற் பாலனைப்பெற்றோரிந்தக்
காரணங்கண்டாருண்டோ கர்த்தனேகமலவாழ்வே
ஆரணன் முன்னந்செய்த விதமோபகவானுக்குங்
காரிக்குங்களிப்பாய்ச்செய்த கண்காக்ஷிக்காளானேனே.



வீமராஜன்-தமயந்தியைப்பார்த்து-புலம்பல்-தரு

இ-ம்-சாவேரி-திரிபுடை-தாளம்.

என்செய்வேனம்மா-என்கண்ணேநான்
என்செய்வேனம்மா

உன்சுகம்பார்க்கவுமென் றுயர்தீர்க்கவும்
உள்ளந்தனிலெண்ணி யுருகுதுடலங்குண்ணி (என்செய்)
பொன்னேகண்மணியேயிலையில்லாப் பூஷணப்பணியே
அன்னமயேதேனேயழகேயழகுபார்மானே
முன்னேசெய்தவினை மூண்டதுவோவினை
என்வயிற்றிலேவந்த பெண்படைத்தநான்சுகன் (என்செய்)
நானுமென்னைக்கொண்டான் உன்னைவிட்டுக்காட்டிற்சென்றான்
இனிமொழியாதே மனதிடிதிரிசமைையாதே
அழுகாதேபுலம்பாதே யம்மாபயப்படாதே
விழுகாதேதயங்காதே விழியின்பயங்கொடாதே (என்செய்)

பந்தனைவிட்டே-என்னம்மா-பிப்பாடுகள்பட்டே
மந்தனைப்பிரிந்தே-பிறப்பட்டு-வந்தாயேபரிந்தே
அந்தகயேயெந்தன் - அன்னமேசொர்ணமே
நெஞ்சங்கலங்காதே நின்றுபுலம்பாதே (என்செய்)

தமயந்திசொல்-விருத்தம்.

அன்னைலேயென்னைப்பெற்ற வையனேயருமையாகப்
பொன்னென்னைவளர்த்தீர்க்காள் பிரிந்தவென்கணவன்றன்னை
கண்ணிலேகாணுறமெத்த காலங்களாச்சுதென்ன
பன்னுவேனம்மாவிட்டப்பத்தாவைவரக்காணேனே.

(வ-ம்) அகோசரணந்த கருணாகரயா சுவாமி என்தந்தையாகிய வீமராஜனே நாங்கள் ராச்சியபாரம் விட்டு வனவாசம் வந்தவிடத்தில், என்னை விட்டுப்பிரிந்துபோன எனதுபிராணநாயகன் இதுவரையிலும் வரக்காணோம் இதுபோல் சும்மாயிருந்தால் அடியேனுயிர் நிலைநில்லாது ஆகையால் நம்மிடைசாரணபுரோகிதர்களை இந்த ஐம்பத்தாறு தேசங்களிலும் காடுமலை வனாந்திரம் ரிஷியிகளாசிரமம் இதுமுதலானதுக் தேடிப்பார்த்து வரச்சொல்லுங்களையா சுவாமி.

வீமராஜன்-விருத்தம்.

சண்டமாருதத்தையொத்த சாரணரோகீரித்த
மண்டலந்தனிலேயுள்ள மாதகாதனிலெங்கும்
கண்டிடிலந்தநளராஜன் காணக்கூடாதவேஷங்
கொண்டிருப்பார்தானீங்கள் குறிபதிந்துரைசெய்வீரோ.

வசனம்-அகோவாருங்களையா சாரணப்புரோகிதரானே இந்த அவனி ஐம்பத்தாறு தேசங்களும் காடுமலை வனம் வனாந்திரங்கள் ரிஷிகளாள் ஆசிரமம் இதுகளிலே நீங்கள் தேடினால் அப்போது அவர் முன்னிருந்த மாதிரியாயிருக்கமாட்டார் வேஷம் தாருமாறியேயிருப்பார் ஆகிலும் நீங்

கள் அப்பேர்ப்பட்ட விடங்களிலே வெள்ள தந்திர வுபாயமாக விசாரித்து அவருடன் கலந்துபேசி அந்தக் குறிகுணங்களையும் அறிந்துவரச் சொல்லுங்களையா சாரணப்புரோகிதர்களே.

சாரணர் நளராஜனைத்தேடி வருகுதல்-தரு

இ-ர-மோகனம்-ஆதிதாளம்.

தேடிப்பார்த்து வருவோம் வாரீர்-பாரதனைத்
தேடிப்பார்த்துவருவோம
தேடிப்பார்த்துவருவோம் ஜெயசிட்டதமயந்தியைக்
கூடிநடவுங்களுந்தரச்சர தேசம்வந்தோம் (தேடிப்)

வசனம்-ஐய்யசுப்பையரே ஐய்யசுப்பையரே இவிடத்தில் நளமகாராஜா யிருக்கிறார் யாருக்காகும் பாரும் ஐய இவடத்தில் காணேனே காணுங்கள் மேனும் இல்லாவிட்டால் அனந்தாசாஸ்திருவும்காணும்.

(தரு) வங்கதேசஞ்செல்வோம் வாருமையாடங்க
மாளவதேசத்தே கீபாரும
கொங்கணதேசத்திலும்தேடிக்-குறையில்லா
கொற்றவனைக்காணவில்லை காடு
மங்களஞ்சோகமிக்க யாதகர்புன்னிலேயடி
எங்கிலுநளனைக்காணேன் தேசமெங்கும் தேடி (தேடிப்)

வசனம்-ஐய் அப்பணிப்பட்டரே ஐய்யகிருஷ்ணப்பட்டரே எங்கேகாணும் இந்தத் தேசங்களெல்லாம் போயுந்தேடிக் காடுமலை யெல்லாம் சுற்றிப்பார்க்கில்லாம பார்த்தோமே காண் என்னகாணும் செய்கிறது வியாகுலமுகத்தில் எப்படிகாணும் விழிக்கிறது நாம் போவோம் வாருங்கள் ஆகுமப்படியல்லகாணும் அல்ல இன்னும் பலதேசங்களெல்லாம் தேடிப்பார்த்துக் கண்டுவந்தோமானால் ஐய் போகலாமே கண்டோம் சாமா இதுவனைத்தும் வெருமதிகொடுப்பாரகாணும் ஆம் ஆம் அல்லகாணும் என்கு வருகிறதற்கு பணமில்லைகாணும் ஆனால் நீ போய் காருங்கள் காணும் ஒத்திப்பொட்டுமகனே.

நடவுந்துவாரகைக்குச்செல்வோம்-அயோத்திமிற்போய்
நன்றுய்விசாரணை செய்வோம்.
அடவாய்நளனைத்தேடியலைவோம்-அரசனுடைக்கு
ஆர்வத்தினுடிபாரதைத்தப்பார்ப்போம
பட்டாப்பேயுமாத்தால் பார்த்துக்கொண்டுவோம் நளன்
இடமுவிட்டுவேவு நூரியிருப்பாரதுவேசிக்கும். (தேடிப்)

வசனம்-ஐய் வெங்கடராமகுருக்களே ஐய் கிருஷ்ணகுருக்களே இது அயோத்தியாபுரி பட்டணங்காணும் இவ்விடத்தில் அதிகம்போய்ந்த துபோலப்பார்க்கலாகாதுகாணும் ஐய் அந்த நளராஜா தமயந்தியை விட்டுப்பிரிந்துபோனதினால் அவனைத் தூஷணித்துப் பேசினோமானால் எப்படியும் வெளிப்படுங்காணும் இதற்குச் சந்தேகமில்லை ஆனவதுவ அதற்குப் பதி



லுத்திரவு கொடுத்தால் பார்த்துக் கொண்டு போய்த் தெரிவித்துப் போடுவோங்காணும் ஐய் ஆமாம் மெய்தான்காணும் சபாகளுக்குப் போய் சலனஞ்செய்தாய் சரிசரி ஆனால் அந்தரிதுபர்ணராஜன் சபையிற்போய் தூஷிப்போம வாருங்காணும்.

சாரணர்-விருத்தம்.

மண்டலந்தன்னிலேவாழும் மன்னராயிருந்தபேர்கள்
கொண்டபெண்டிரைப்பிரிந்த கொடுமையைக்கண்டதுண்டோ
விண்டிட்டப்பார்த்துநல்ல வீரமில்லார்க்குவேறு
பெண்டிரும்பிள்ளைவேண்டாம் பெரிதோர்தவ்வாயிறுதாமே.

(வ-ம்) அகோ கேளுங்களையா அயோத்தியாபுரியிலிருக்கிற ரிதுபர்ணமகாராஜா சபையோர்களே கேளுங்கள் அதென்னவென்னில் உலகத்திலே ஒருத்திபெண்ணாகப் பிறந்தால் சொல்நுதலாள் வதுவேசம் வெட்கம் இதுமுதலானதுகளும் வேறும் இல்லையென்று மிகுதாயுரியானப்பட்ட நளசக்கிரவர்த்தி மகாராஜன் செய்த அன்னிதத்தைக் கேளுங்கள் ஆபத்தாலங்காலத்தில் தன்பெண்சாதி பிள்ளைகளுடனே அடும்பமே சுகமாயிருக்க வேண்டியது. அப்படிக்கில்லாமல் தன்பிள்ளைகளை ஒருபக்கமும் பெண்சாதியைக் கூட அழைத்துக்கொண்டுபோய்க் காடுபுலி மிருகசாதிகளிருக்கப்பட்ட காட்டிலே தமயந்தியை நித்திரையில் தனியாய் விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார். இது லோகத்தாருக்கடுக்குமா இப்படிக்குச் செய்யலாமோ சொல்லுங்களையா புண்ணியவான்களே.

பாகவன் சொல்-விருத்தம்.

ஏதுகாண் சாரணனே யிகத்தினிலெவராகிலும்
இம்முறைகேட்டுச்சொல்லச் சிறுமையால்பழி யிகக்சகன்
காதலோமனத்துபோனதாகதாரனைக்கவிட்டு இல்லையவன்
பேதமாயிகழ்ந்துபேசப் பித்தரோசொல்லுவீரே.

(வ-ம்) அகோ வாருங்கள் சாரணப்புரோகிதர்களே உலகத்தில் ராஜாதிபதிகளுக்கு ஆபத்துவருங்காலத்தில் பெண்சாதி பிள்ளைகளை விட்டுப்போனது வருவதும ஒருங்கேயல்ல. ஆகிலும் நீங்கள் ராஜாக்களின் நிறைத்தனமையில் அந்தநளமகாராஜனை யாதொரு குற்றமுமில்லையென்னும். இப்படி தூஷணிப்பது எந்த தருமசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது போலும் அந்த ராஜா என்ன அன்னிதஞ்செய்திருக்கிறார் தன்னுடனே கூட்டிப் பெண்சாதியானவள் காட்டில் கஷ்டப்படலாகாதென்று தாய்வீட்டுக்குப்போய்ச் சேரட்டுமென்று விட்டுப்போனால் இதுசரிதயா இதைச் செய்தியெல்லாம் அந்த நளராஜனிருந்து கேட்டதேயுண்டானால் உங்களை நாக்கைப் பிடுங்கிப்போடுவார் பேசாமல் தியங்கொண்டு சாரணப்புரோகிதர்களே.

சாரணர் வீமராஜனுக்குச் சொல்-விருத்தம்.

மண்டலாதிபனேமன்னர் மகிபனேசொல்லக்கேளும்
எண்டிசைதனிலெண்ணேழு தேசங்களெல்லாஞ்சுற்றி

கண்டுவ தேமசேனேந்திரன் கருத்தறிந்துனை கர்க்கே ம்
சண்டையேசெப்புமோரைறர் தமயந்தையறிந்துவிம.

(வ-ம்) அகோ சிரஞ்சீவி விதர்ப்பதேசமாளப்பட்ட வீமராஜனே தேவரீர் திருவுளப்பிரகாரம் ஜம்பாத்தாறு தேசங்களும் காடுமலை எல்லாம் எங்குந்தேடி அவ்விடத்தில் காணத்தாமல் அயோத்தியாபுரி ரிதுபர்ணமகாராஜன் சபையிலும் சென்று அந்த மகாராஜனை தரிசனித்தபோது அவ்விடத்தில் பாகவனென்றும் ஒருவர் வந்து எங்களைத் தடுத்துப் பேசாததெல்லாம் பேசிப்போனார் அவனைப்பார்த்தால் மெத்தவும் விகாரரூபமுள்ளவராயிருக்கிறார் இதுதான் காணக்கண்டேன் போய்க் கண்டுவந்தோமையா ராசனே.

தமயந்திக்கு-வீமராஜன்-சொல்-விருத்தம்.

இங்கினே புகுந்தவனை செல்வியே சென்றதூதர்
எங்கும்போய்ப்பார்த்தயோத்தி யிருந்ததூதர்பர்ணன்பக்கல்
நங்கையைப்பிரிந்த நளனென்றதறிந்தநாளைக்கேட்டு
இங்கிதவந்தாரம்மா யினிப்பிரதிக்கன்னசெய்வோம்.

(வ-ம்) அகோ கேளும் என அருந்தவமணியாகிய தமயந்தி நானுறப்பின சாரணப்புசேகிநாள் செகமெல்லாந்தேடிக்காணுமல் அயோத்தியாபுரி பட்டணத்திற்போய் அந்தராஜனைத் தரிசனித்தார்களாம். அப்போது அவ்விடத்தில் தரித்தப்பேசினவர் ஒருவருமில்லை இருந்தபோதிலேயில் யாரோ ஒருவிகாரரூபமுள்ளவர் வந்து இவர்களை மறித்துப் பேசாததெல்லாம் பேசிப்போனாறாம் ஆகையால் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது புருஷனாகவேயிருக்கவேணும் இதற்கொரு யோசனை செய்கிறதுசொல்லுமம்மா தாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

தமைஞ்செய்துபெற்றெடுத்த தந்தையே யரசர்கேளீர்
நிலந்தனிலமயந்திக்கு இரண்டாம்விவாகமென்று
சுயம்வரங்கட்டிடுதென்பாம் கருக்கினிலிரிதுபர்ணேந்திரன்
வருகவேதிருந்தாதர் வசந்தனிலனுப்புவீரே.

(வ-ம்) அகோ சகலசராசரமனைத்தையும் காத்து நடத்துகிற தந்தையாகிய வீமராஜனே இப்பவும் என்மகள் தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் நாட்டியிருப்பதால் சகலதேசத்து ராஜாக்களும் வந்திருக்கிறார்கள் நாளை சூரியவுதயத்துக்கு முகூர்த்தமானபடியால் நாளும் அந்திக்கிரத்தில் வந்து சேருமென்று ரிதுபர்ணராஜனுக்கு நிருபமனுப்பினால் அவருடனே என துநாயகரும் வந்துசேருவாரையாதலால்.

வீமராஜன்-விருத்தம்.

சீர்பெருமயோத்தியாளுஞ் செயரிதுபர்ணேந்திரனுக்கு
வீர்பெரும்வீமராஜனெழுதியதிருமுகமிங்கு



பாரினிலெனதுபுத்திரி பாங்குளதமயந்திக்குச்
சூரியவுதயத்திற்குச் சுயம்வரமெனச்சொல்வீரே

(வ-ம்) அகோ வாருமையா சாரணனே இந்த நிருபத்தை அயோத்தியாபுரியாளப்பட்ட ரிதுபர்ணமகாராஜனிடத்திற் கொடுத்து விதர்ப்பதேசத்தில் தமயந்திக்கு இரண்டாவது விவாகமானபடியால் நாளைய தினம் சூரியவுதயத்துக்கு முகூர்த்தமென்று சொல்லி சடுதியாய் வரும்படி தெரியப்படுத்தி வாருங்களையா சாரணப்பிரோகிதரே.

சாரணன்-ரிதுபர்ணராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தலமெலாம்புகழ்மிகுந்த ஜயரிதுபர்ணராஜே
சலமறுவீமராஜன் சாரணனென்வந்தோமையா
நிலமெலாமறியவிரண்டாம் விவாகமென்மகளுக்கென்று
உலகையாய்ச்செய்திசொல்லி ஓலையைத்தரச்சொன்னாரே.

(வ-ம்) அகோ வாருமையா ரிதுபர்ணமகாராஜனே விதர்ப்பதேசத்தையாளப்பட்ட வீமராஜன் புத்திரியாகிய தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் காட்டியிருப்பதால் சகலதேசத்து ராஜாக்களும் வந்திருக்கிறார்கள் தாமும் அதிசீக்கிரத்தில் வரவேண்டியது நாளை சூரியவுதயத்துக்கு முகூர்த்தமானபடியால் வந்துசேரவேணுமையா மகாராஜனே.

பொது-விருத்தம்.

கூர்ந்தவிற்செங்கோல் கொண்ட காவலன் வீமராஜன்
வரவிட்ட நிருபந்தன்னை மன்னவன் ரிதுபர்ணேந்திரன்
தாமிகுஞ்சபையிலேயே தன்னைவாசித்துப்பார்த்துச்
சிரவணனைத்தங்கொண்டு ஜெயபேரிமுழக்கினனே.

ரிதுபர்ணராசன் சொல்-விருத்தம்.

கொண்டதோர்சக்கிரவர்த்தி கொடுத்துவையாமற்போனோர்
பெண்டவள்நமக்கில்லாமற் பின்னொருவருக்குமுண்டோ
இன்றுநான் விதர்ப்பதேச மிசைக்கணமே செல்லவேணும்
நன்றுரதத்தைப்பூட்டி நடத்துவரார்சொல்வீரே

(வ-ம்) அகோ வாரும் பிள்ளாய் சாரதிமார்களே விதர்ப்பதேசத்தில் தமயந்திக்கு இரண்டாவது முகூர்த்தமானபடியால் நாம் போகவேணும் ஒருவேளை அந்தப்பெண்ணானவள் நமக்குக் கிடைத்தாலுங் கிடைக்கும் நாளை சூரியவுதயத்துக்கு நம்மைக்கொண்டு போய்ச் சேர்க்கிறவர்கள் ஆர் சொல்லும் பிள்ளாய் சாரதிமார்களே.

சாரதிசொல்-விருத்தம்.

வாழ்வினின் மிகுந்தவெங்கள் மகாராசனே நீர்கேளும்
தாழ்விலாவுமதுவார்த்தைத் தனைப்போலரதம்நடத்த
வழுவாமற்செல்லு மிவ்விடம்விட்டவடப்போக
ஆழியானலுமேக அருணனாலுமுடியாதையா.

வசனம்.

அநேகா சாணஞ்சாணமையாகவாமி ரிதுபர்ணமகாராசனே தங்களு த்திரவின்படிக்கு விதர்ப்பதேசத்துக்கு ரதம் நடத்தவேணுமானால் ஆயிரம் யோசனை தூரமிருக்குது ஆனபடியால் நாளை சூரிய உதயத்துக்கு ரதம் போகவேணுமென்றால் எங்களாலேயும் சூரியபகவான் சாரதியான அருணனாலேயும் முடியாதையா சுவாமி.

பாகவன் சொல்-விருத்தம்.

போகபூமியாகம்போம் பூரவலாசாணைந்தேகும்
தாகமா கொடியிற்றேனைத் தானடத்துவராமென் நீர்
வேகமாய்ரதநடத்தும் விந்தைதெயன்னிடத்திருந்த
வகையோனமெய்த்தா லெத்தோளவருவீரோ.

பாகவன் சொல்-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

சாணேந்தரன சொலெனே தயாபரிருபகார
சாரத்தியஞ்செய்வேனையனே
அருணன் ரோட்டும் வலவேவகனே நீயோ
திரணையோசனைவழிநேதச்சொல்லும்பொய்யோமோ. (சர)

ரிதுபர்ணன் சொல்-தரு.

சொல்லுமென்பாகவனேசொருசாஞ்சா
அனையா நோய தொகைசொல்லும் பாகவனே
தொல்லுலகதியாவே ஆயமாவோ விடன்.
கருக்காய்வரச்சொன்னகால்தொலையாமிருக்குதே (சொல்)
இருந்தால் காலை வேகுவோமினி நாய் சனிதா
யிதமாய்ப்பாதமாய்ரதமதித்தே வளையனே
வருந்தவேண்டமொரு முகூர்த்தத்தனில் விட்டென
மானகர்த்தோமம்பாகாவென கொண்டோடுவன். (இருந்தால்)
(இராஜன்)காண் சொன்னதிசெல்வேனென்றுப-கல்லாய் வல்லாய்
கில்லாய் சொல்லாய் சாமுமப்பாடியேசெல்வோம்
தேன்மலரணிகுழம் தமயந்திக்குமணஞ்
செய்யமோகவங்கூறி சுதனைத்தில்விதர்ப்பபுரி (காண்)

ரிதுபர்ணராஜன் சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்பாகவனே நம்முடையகுதிரைலாயத்தில்போய் நல்லபரிகளையப்பார்த்துக்கொண்டு நம்மிடத்தே கொண்டு அலங்காரஞ்செய்துகட்டி சவாரிக்கே துவாகவந்து சொல்லும்பிள்ளாய்பாகவனே.

பாகவன் சொல்-விருத்தம்.

அரிகரிஸ்ரீவோசா அநாதரகூடிகரோயாளும்
திருவிளாசெயவேறலே செகமொருகுடையிலாண்டு
கரியவனுமொங்கன் கன்னிசெய்கபடத்தாலும்
சிறுமையாரதசாரதியஞ்செய்வதற்காளானேனே.



பாகவன் புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

என்னசெய்குவேனையோ என்றலைவிதிவசம்
இப்படிக்கிருந்ததோ என்னசெய்வேன்
மன்னர்மன்னவர்கட்கு மன்னவனுயிருந்து
வாழ்ந்தபலினிதுவோமாதவனே சுவாமி
தன்னைப்பணிந்தவர்க்குத் தானேபணிந்தாத
சாரதயஞ்செய்யவுமென் றலைவிதியோ சுவாமி
முன்னஞ்செய்தப்பமோ இந்நாள்செய்யுந்தவமோ
முடிந்ததிப்படியோதான் முராகரியே சுவாமி
திக்கெங்கும்புகழ்பெற்ற சக்ராயுதந்தரித்த
செயுவலுமையுங்குன்றச் செய்குவானோஎன்றேவி சுவாமி
துக்கம்பெரிதென்றெண்ணிச் சுகத்தைவிரும்பினனோ
சோதனைசெய்கிறானோ சூக்ஷிதானே சுவாமி
தெற்குவடக்காய்த்திங்கள் தினகரன்மாறினாலும்
சித்தங்கலங்கிடாளே தேவியையோ சுவாமி
நித்திரையிலுமென்தன் நினைவுமறந்திடாளே
நெறியதூரியச்சே தின்செயலோ சுவாமி

பாகவன்-விருத்தம்.

ஐயனேயரசர்கோவே அடியேனாதசிங்காரம்
செய்யவேயுனைத்தாப்போல சிங்காரஞ்செய்துவந்தேன்
மெய்யாகவிதற்கும்வீமன் விதர்ப்பதேசத்திறுக்கும்
ஐயாயிரங்காதங்காண் ஆண்டவாசொல்லுவோமே.

(வ-ம்) அகோவாருங்களையாசுவாமி ரிதுபர்ணமகாராஜனே தேவரீர் உத்தாரப்படிக்குத் தேரை அலங்காரஞ்செய்துவந்தேன் இதற்கும்விதர்ப்பதேசத்துக்கும் ஆயிரம் யோசனை தூரமிருப்பதினாலே காலதாமசஞ் செய்யாமல் தேவரீர் தேரி லெழுந்தருளவேணுமையாசுவாமி.

பொதுவிருத்தம்.

சாரதிகொண்டுவந்த தங்கபாரதத்திலேதான்
வாரிதிசுவாமண்விண் மண்டலநடுங்க
மேருவையொத்ததிண்டோள் வேந்தனுந்தேர்மேற்கொண்டு
சிருயர்விதர்ப்பதேசஞ் சேரவேபுறப்பட்டாரே.

ரிதுபர்ணராஜன் விதர்ப்பதேசம் வருகிறதரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

ராஜன்ரிதுபர்ணன் ரதமேறியேவிதர்ப்ப நகர்க்குடன்தனனே
ஆசிக்கவிவாணர் ஆரியர் கூறவே
அனமச்சர்பிரதானிகளருகினிற்சேரவே
வாசமிகும்பன்னீர் வாடைகள்வீசவே
மன்னர்திரையளந்து நன்னயம்பேசவே
தேயந்தனிலேவீமராஜன் புத்திரியாளன்-தேவி தமயந்திக்கே (ராஜன்)
மிக

மூவுலகுமறியசுயமாராட்டியேமுகூர்த்தத்துக்கேகுதற்கே
மாவேகமாகத்தேர்பூவுலஞ்செய்ய வே
வானவர்யர்வரு மலர்மாரிபெய்ய வே
கோபத்துடனேகளன் வாம்பார்த்துண்ட வே
குதிரைகளனுமானித் தேவின்னிற்றூண்ட வே (ராஜன்)

ரிதுபர்னன்சொல்-விருத்தம்.

தேரோரிரிதுபர்னேந்திரன் செல்லும்அப்போதிலேதான்
சாதருசமூவிவிழச் சாரதிதனக்குரைத்துக
தேனாயிவ்விடம்நிறுத்திச் சீக்கிரதன்னிற்சென்று
ஈர்மிகுஞ்சாதருவை யெடுத்துக்கொண்டுவருகுவாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் பாகவா நாம் ரதமேறி வருகிற வேகத்தினாலே மேலேபோட்டிருந்த சாதரு சமூவி பூமியிலே விழுந்து விட்டது. சற்றுநேரம் தேரை இவடத்தில் நிறுத்திவிட்டுப்போய் பார்த்தெடுத்துவாரும்பிள்ளாய் சாரதியே.

பாகவன்சொல்-விருத்தம்.

தேர்தனைநிறுத்துமென்று செப்பியவிதற்குள்ளாக
பாரும்யோசனைதான்மூன்று பார்த்திபாவக்துமிப்போ
காரியம்பெரிதுகாமூன் கடுவேசெல்லவேணும்
வாருமென்றுரைத்துத்தேரை வண்மையாய்நடத்தினாரே.

(வ-ம்) அகோ வாருங்கேளையா சுவாமி ரிதுபர்னமகாராஜனே தேவரீரவர்கள் தேரை நிறுத்தவேணுமென்று சொன்னதற்குள்ளாகத்தேராளது மூன்று யோசனை தூரம் வந்துவிட்டது. நாம்வந்தகாரியம்பெரிதேயொழிய இதுபோனது பெரிதல்ல காலதாமசமாகி விடும் ஆகையால் தேரை நடத்துகிறேனையா சுவாமி.

ரிதுபர்னராஜன்-தரு.

அண்டபுவனமிரண்டுங்கதிர்மதியும் அதிரச்சூத்திரமும்
விண்டலக்கனிற்பரி பாய்கின்றவேகத்தால் மேலவரொருபுறமும்
கண்டுநடுங்கிக் கிடுகிடென்றேயிவன்
காவலனளன்றனைப்போலே காணுகிறான்
என்றுபேசிக்கொள்ள விறைரிதுபர்ன ராஜன்
மண்டலாதிபவுத் தண்டவிப்பிரகாசன் (ராஜன்ரிது)

பொது-விருத்தம்.

அதிபனும்ரிதுபர்னேந்திர னநேகதூரங்கள்செல்லக்
குதிரைகளிளைப்பாயாகுங் குறிகண்டுபாசனப்போ
அதிதுரையாயவிழ்த்து அசுவமந்திரப்போதித்து
எதிரிற்கரிதுபர்னேந்திரனியம்புவான்சாதிக்கே.

(வ-ம்) அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ரிதுபர்ன ராஜனவர் தேரிலேறிக்கொண்டு வரும்போது மேலேபோட்டிருந்த சாதரு விழுந்துபோக அதை எடுத்துவரும்படி சொல்ல அப்போதுபாகவன் அதுவும



ன்றுயோசனை தூரத்துக்கப்புறம் விழுந்துபோச்சுதென்றுசமர்த்தனஞ்சொல்லி யழைத்துக் கொண்டுவர அப்போது குதிரைகள் அனேகம்யோசனை தூரம் வந்ததினால் இளப்படைந்து தத்தளிக்கிறதைப்பார்த்துப்பாகவன் குதிரைகளை யவிழ்த்துதண்ணீர்காட்டி அசுவத்துக்குஅசுவமந்திரங்களைப்போதித்துகுதிரைகளை தடவிக்கொடுத்துக்கொண்டுநிற்கிறபாகவனைப் பார்த்து ரிதுபர்னராஜன்சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

ரிதுபர்னராஜன்சொல்-விருத்தம்.

எனதகமகிழும்நல்லபிரதசாரதியேகேளாய்
வனமிதில்வாழுந்தாணி மரந்தழைகனிகாய்பூக்கள்
கனிதமெமான்றுரைப்பேன்கேளாய் காய்பழம்லக்ஷாலக்ஷம்
புனிதமாயிலைகள்கோடி போய்பார்த்து வருகுவீரோ.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் பாகவசாரதியே இந்த அசுவமந்திரமானது இப்போர்க்கொதககேவலமுள்ள அசுவத்திற்குப்போதித்து இவ்வளவுதூரம்வந்ததுநானெங்குங்கண்டதுமில்லைகேட்டதுமில்லை அநால்நானொரு யந்திரஞ்செய்கிறேன் இதோ எதிரேயிருக்கிற தாணிமரத்தில்-பூலக்ஷம்காய்லக்ஷம் கனிலக்ஷம்இலைகள் கோடியிருக்கிறது நீர்போய் எண்ணிப்பார்த்து வாரும்பிள்ளாய் சாரதியே.

பொது-விருத்தம். 116928

கனிமொழியாள்தமயந்தி மறுகல்யாணக்
கருத்தறிவோமென்றுரிதுபர்னன்றேரை
அவிலமதற்கென்மடங்காய்நடத்தும்போது
அரசனுரைத்திடுங்கணக்கையாய்ந்துபார்க்கத்
தனிநளனும்வந்துமரத்தின்கீழ்நின்றுத்
தான்றிக்காயொன்றதிகந் தன்னைக்காணச்
சனிபகவானேழரையுஞ் சரியாய்ச்சென்று
சக்கரவர்த்திமுன்னெழுந்துசாற்றுவானே.

சனிபகவான் நளராஜனுக்கு முன்வருதல்-தரு
இ-ம்-கலியாணி-திருபுடைத்தாளம்.

காக்ஷிகொடுக்கநள ராஜனைத்தேடியே கலிராஜேந்திரன் வந்தார்.
ஞக்ஷியாகமெத்த சோதனைசோதித்து
மாக்ஷிமையுடன்றாணி மரத்தடியிற்குதித்து (காக்ஷி)
சத்தரிஷிமுனிவர் சித்தர்தேவர்களும்
ஜனகாதிபர்நிலை தளரச்செய்தபரன்
அத்தன்மால்பிரமன் சித்தங்கலங்கியவ
ரவர்கள்நடுங்கும்படி யடித்தகெதாதபன்
எத்தலந்தனிலுள்ள ஜீவமுகத்திற்களையும்
எறும்புதலைக்கடை யானையுயிர்களையும்

பத்திப்பிடித்துத்தாமரைமுலைத்திடுத்தோன்
சதிப்பணிகுவோனை ரட்சிக்குமுபகாரன். (காகூதி)
ஆதியிலேதமயந்திதனைக்கொள்ள
ஆசைகொண்டாரவள் வேண்டாமென்றுதள்ள
வேதனைசெய்ய மனந்தனிலேயெண்ணி
வெகுகாலமாய்நளன் விடுசென்றேனெண்ணி
பாதத்திலேசீர படாதவிடத்தைநாடிப்பற்றி
பதிகுலையச்செய்த சனிபகவான் வெற்றி
கோபத்தையும்மனக் குறையையெல்லாம் விட்டுக்
கொடுத்திடவரம்நளன் றனக்கேயுடன்பட்டு. (காகூதி)
இந்தனைபாடும்படுத்திவைத்தேசனி
யீசுரன்செயல் செயலென்றிருந்தானெண்ணி
பத்தினித்தமயந்தி பதிவிரதாக்கினி
பத்தித்தகிக்குதே யென்செய்குவோமினி
அத்தமும்வாழ்வு மரசாதிபத்யனிம்
அவனுக்குண்டாக வருள்செய்துநித்யமும்
வைத்துநிஷதா புரியாளமுடிசூட்டி
வருகுவோமென்றெண்ணி நிருவுளத்தில்காட்டி. (காகூதி)

நளராஜன் சனிபகவானைத்துதித்தல்-கண்ணிகள்.

இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

ஆதிபகவானே யருளாளாநமஸ்காரம்
வேதமுதலோர்துதிக்கும் வேலாநமஸ்காரம்
கந்தன்முசுகுந்தனெழில் காமன்சகுராமன்
முந்தத்துயர்படவேசெய்த மூர்த்திநமஸ்காரம்
விந்தன்கோவிந்தன் அரிச்சந்திரன்சராசந்தன்
எந்தாயிடர்கொள்ளச்செய்த யிறைவாநமஸ்காரம்
கனகன்முனிசனகன்புகழ் கனத்தமாபுவியும்
ஜனகிசிறையிருக்கச்செய்த சுவாமிநமஸ்காரம்
ஈசன்அளகேசனிந்திர ராசன்விக்கினேசன்
நீசமடையவுமேசெய்த நீலாநமஸ்காரம்
மாசின்மறைதேவர்முதல் வணங்குஞ்செயல்பெற்றோன்
தாசநுகூலாசனி யீசாநமஸ்காரம்.

நளராஜன் சொல்-விருத்தம்.

சோதியெசுடரோதொண்டர் துயரறுத்தின்பநல்கும்
ஆதவக்கொழுந்தேயென்னை யாண்டருள்செய்யுமையா
ஏதுகுற்றஞ்செய்தாலு மீஸ்பாபொறுத்துக்காப்பீர்
வாசமர்மூனதுபாத மலரடிசரணந்தானே.

(வ-ம்) அகோசரணஞ்சரணமையாசுவாமி சனியீசுரபகவானேதேவரீரவர்கள்-வந்தபோதேநான் தன்னியனானேன்ஜென்மசாபல்ய நிவர்த்தி



பெற்றேன் அடியேன் என்னகுற்றஞ்செய்திருந்தபோதிலும்தேவரீரவர்கள் பொறுத்து ரட்சிக்கவேணுமையாசுவாமி.

சனிபகவான்சொல்-விருத்தம்.

எந்தனைப்பணிந்துபோற்று மிராஜராஜேந்திராகேளாய்
வந்தனைசெய்ததெல்லா மனதுசந்தோஷமாச்சு
உந்தனைச்சோதித்தோம்நா முமக்கொருகுறைவுமில்லை
வந்தநாளுனக்குவேண்டும் வரந்தனையருளுவோமே.

(வ-ம்) அகோவாருமையா நளராஜனே நானுனக்குச்செய்தவஞ்சனையினாலும் கொடுமையினாலும் நீர்மனம்பொறுத்து சத்தியந்தவறாமலும் பெரியோர்களை நிந்தியாமலும் இதுகாலவரையில் படாதபாடெல்லாம் பட்டுவந்தபடியினாலே உங்கள்பதிவிரதாக்கினி நம்மைமிகவும்தகிக்குதுஆகையால் நானொருக்ஷணமாகிலும் உங்களிடத்திலிருக்கமுடியாது உமக்குத்தேவையான வரத்தைக்கேளும் தருகிறோமப்பிள்ளாய்ராஜனே.

இராஜன்சொல்-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

சுவாமிசரணமென்னையாளாய்
சனிபகவானே தங்கத்தாளாய்
சேமகத்தோரனுகூலா-உம்மை
நினையாதபேர்க்கு மாத்திரங்குலகாலா (சுவாமி)
சிரஞ்சீவியேநளதீரா-இருமை
செய்தேன்செய்தேனிதோகோரா
வரமெல்லாந்தருகுவேன்பார-யுந்தன்
மனதறிந்தேனினிவாராய் (சிரஞ்சீவி)
பண்டுசெய்ததவந்தானோ-இந்தப்
பாரிற்குறையென்செய்தேனோ
தொண்டராமுமக்கெதிராமோ-என்னைத்
தொட்டுவிட்டீர்கலந்தானோ (சுவாமி)
உன்றனாலாகாதினியேது-உங்க
ளிடமிருக்கமுடியாது
சொன்னால்நீகேளாமல்வாது-எதிர்
சொல்லவொண்ணாது இருங்காணிப்போது (சிரஞ்சீவி)
கர்ணவேல நளராஜா-வும்மைக்
கருதுவார்களன்பர்நேசா
தாரணியிற்சனியீசா-சர்வ
ஜீவாசுகதானிவாசா (சுவாமி)
நாடுநகர்செல்வமாளும்-இதோ
நாதனேதந்தேனியாளும்
சோடுகட்டிச்சூதையாடும்-சுக
மாகவுன்றனுட்டங்களைக்கூடும் (சிரஞ்சீவி)

நளராஜன் சொல்-விருத்தம்.

பானுவின் குலத்துதித்த பகவானே சரணமய்யா
தானவனை சம்பு சதாசிவனடுங்கச்செய்த்
மானுடனா வெந்நாளும் வாழ்வுசம்பத்துண்டாகத்
தீனரக்ஷகனே தேவர் திருவடித்துணைசெய்வாயே.

(வ-ம்) சரணஞ் சரணமையா சுவாமி சனிபகவானே தேவரீர் அவர்கள் திரிமூர்த்திகளையுமடுங்கச்செய்த்தக்கதாகச் செய்துவைத்தமாகாளுபாவமே அடியேன்பேரில் கிருபைவைத்து எவ்விடசித்திரத்தையும் கொண்டாடப் பட்டபேனையும் கேட்டபேனையும் இதுமுதல் தாங்களனுகாமல் தவப்பிரசாதந் தரவேணுமையா சுவாமி.

சனீசுரன் சொல்-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் ராஜனே நீர் கேட்டுக்கொண்டபடியே வரப்ரசாதமுந்தந்தோம் ஆனால் இந்த தாணிவிருக்ஷத்தினிமித்தமே வந்தவர்களைத்தவிர மற்றொருவர்களிடத்திலும் அநுபவிப்பதில்லை நீர் இந்தக்ஷணமே அந்த புஷ்கரராஜாவினிடத்தில் போய்சூதாடினால் அவனைத்தோற்கவைத்து உம்மைக்கெலிக்கவைத்து உனக்குச் சகலசாம்ராச்சியங்களும் வரும்படிக்குச்செய்து உனக்கு பட்டாபிஷேகம் பண்ணிவைக்கிறேன் போய்வாரும்பிள்ளாய்நளராஜனே.

பாகவன்-ரிதுபர்ணனுக்குச்சொல்-விருத்தம்.

சாந்தனைவைத்தேயாளு மிறைவனே சொல்லக்கேளீர்
உந்தன்வாய்மொழிப்படிக்கு வுயர்தாணிவிருக்ஷகாயும்
சந்தேகமில்லையிலக்கஞ் சரியாகவிருக்குதிப்போ
சிந்தையுமிழ்ந்து நாமும் செல்லுவோமெழுந்திருமே.

(வ-ம்) அகோ சரணஞ்சரணமையா சுவாமி தாங்கள் சொல்லிய கணக்குப்பிரகாரம் அந்தத்தாணிவிருக்ஷத்துப் பூ இலை காய் பழம் இதுமுதலான துகளும் சரியாகவிருக்கிறது இது மகா அருமையான வித்தையாயிருக்குதையா சுவாமி.

ரிதுபர்ணராஜன் சொல்-விருத்தம்.

அருமையாம் ரதசாரத்ய மதுசெயும்பாகவா கேள்
அருமையாம் அசுவமந்திரமதைநமக்கிருச்செய்தால்
அருமையாமென துவித்தை யதனைநானுனக்குரைப்பேன்
அருமையாமெளியதல்ல வசுவமந்திரஞ்சொல்வாயே.

(வ-ம்) அகோ வாரும்பிள்ளாய்பாகவா உம்மிட அசுவமந்திரம் நமக்குக்காண்பித்தால் உனக்குத்தாணிவிருக்ஷமந்திரஞ் சொல்லுவேன் பிள்ளாய்பாகவனே.

பாகவன் சொல்-விருத்தம்.

செந்திருவளருஞ்சீல செகராஜதீரா போற்றி
ஐந்தருவாழுந்தேவர் பரமனும் பிரியாரித்த



மந்திரமுமக்குரைப்பேன் மனதிலில்வகுத்துக்கொள்வீர்
வந்துகோரங்களாச்சு வருகுவீர்செல்லுவோமே.

(வ-ம்) அகோவாருமையா ரிதுபர்ணமகாராஜாவே அந்தமும்மூர்த்திகளாலுமறியக்கூடாத மந்திரம் உமக்குத்தெரிவித்தேன் அடியேனுக்கும் தாணிவிருக்ஷத்து மந்திரமும் தெரிவித்து காலதாமசமாகாமல்நாம்வந்த காரியத்தை நாடிப்போவோம் வாருமையா ராஜனே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் ரிதுபர்ணராஜாவானவர் தாணிவிருக்ஷத்து மந்திரம் சாரதிக்கு வுபதேசஞ்செய்ய அப்போது பாகவனான நளராஜாவும் ரிதுபர்ணராஜனுக்கு அசுவமந்திரம் போதிக்க இருவரும் சம்மதப்பட்டு விதர்ப்பதேசத்தைநாடி தேசைவிட்டுக்கொண்டு வருகிறவேகத்தை தமயந்தியானவள் பார்த்து தன் தகப்பனாகிய வீமராஜனுக்குச்சொல்லுகிறவிதமா வெப்படியென்றால்.

வீமராஜனுக்குத்-தமயந்திசொல்-விருத்தம்.

தந்தையேசரணங்கேளீர் தரணிவிண்ணதிரடுங்க
வந்திடுந்தேரின்வேகம் மகராஜனே நீர்பாரும்
வந்தபாகவனன்றோவென் தன் மணவாளனல்லால்வேறு
இந்தவாறுலகுதன்னிலின்னொருவனாக்காணேனே.

(வ-ம்) அகோ சரணஞ் சரணமையா சுவாமி என்தந்தையாகியவீமமகாராஜனே இதோதேர்வருகிற வேகத்தையும் அசுவவேகத்தையும் பார்த்தால் என் புருஷனான நளச்சக்ரவர்த்தி மகாராஜனேயல்லாமல் வேறல்ல அந்தரிதுபர்ணராஜாவை எதிர்சென்றழைத்துவந்தால் அந்தசாரதியாயிருக்கப்பட்ட நளராஜாவும் வருவார் அப்போது எல்லாமறிந்துக்கொள்வேணுமையா சுவாமி.

பொது-விருத்தம்.

மகள்தமயந்திசொன்ன வார்த்தையைக்கேட்டுவீமன்
அகமகிழ்ந்தெழுந்துவந்து அரசனுக்கெதிர்கொண்டேகி
தகைமையாயழைத்துத் தானுந் தனதரண்மனையில்வைத்துச்
சுகக்ஷேமமதனைப்பேசித் துகளில்வீமனிருந்தானன்றே.

இதுவுமது.

சந்தோஷமாயிருந்து ரிதுபர்ணேந்திரன்
தமயந்திதனக்குமறுவிவாகமென்று
வந்தோமென்னையும் காணேனென்னைப்போது
மட்டுமிருந்திருக்கோ மர்மமெல்லாம்
பந்தற்சோடினைபுயில்லை முகூர்த்தத்திற்குப்
பாராஜர்வரக்காணோம் பார்ப்பமென்று
புந்திதனிலெண்ணிரிதுபர்ணராஜன்
போசனஞ்செய்தே பொழுதைப்போக்கினனே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ரிதுபர்ணராஜாவானவர் அதிகவேகமாக ரதம் நடத்திவந்த அந்தவேகத்தைத் தமயந்தியானவள் பார்த்து தன் தகப்பனாராகிய வீமராஜனுக்குத் தெரிவித்து எதிர்சென்றழைத்துவரும்படி சொல்ல அப்போது வீமராஜனானவர் ரிதுபர்ணராஜனையெதிர்சென்றழைத்துவந்து வுட்காரச்செய்து க்ஷேமகாரியங்களைப் பேசிக்கொண்டிருக்க அப்போ ரிதுபர்ணராஜன் தமயந்திக்கு மறுமுகூர்த்தமென்று சொல்லியனுப்பினீர்களே இவடத்தில் பக்கல்ஜோடிக்க வில்லைதேசதேசத்து ராஜாக்களும் வரவில்லை இந்நகரைவலமாயிருந்துபார்ப்பமென்றுயோசித்திருக்க அதற்குள் பாகவனாகிய சாரதியானவர் ரதத்தை நிறுத்தி குதிரைகளையவிழ்த்துக்கொண்டுபோய் குதிரைகட்டும் டேறாவில்கட்டிவிட்டிருக்க அதற்குமேல் தமயந்தியானவள் செய்தவிதம் எப்படியென்றால்.

தமயந்தி தாதிக்குச்சொல்-விருத்தம்.

வாருமென்தாதிமாரே வார்த்தையொன்றுரைக்கக்கேளீர்
சாரதிகுதிரைலாயத்தனிலிருப்பார்போய்நீங்கள்
கூறியென்வண்ணமெல்லாங் கூடவேகலந்துபேசிப்
பாருமவர்சொல்வார்த்தைப் பயனை நீயறிகுவாயே.

(வ-ம்) அகோ வாரும் பெண்ணே சகிமார்களே நம்மிடகுதிரைலாயத்திலே ரிதுபர்ணராஜாவுக்கு ரதசாரதியாக வேஷம்பூண்டிருக்கிறார் அவரண்டையில் வெகு சந்தோஷமாகப்போய் என்வளப்பங்களையும்வருத்தங்களையுஞ் சொல்லி அவர்குறிகுணங்களையறிந்து வாரும்பெண்ணே சகிமார்களே.

தாதிகள்-சாரதிக்குச்சொல் விருத்தம்.

சாலமெல்லாமறிந்த சாரதிமாறுபாலா
காலங்கண்டேநீரிந்தக் கபடமாயிருப்பதேனோ
மேலவர்விண்ணோரும்மை மெச்சவாரதிரார்த்தயம்
காலமுமறியார்போலக் கலக்கமாயிருக்கின்றீரோ.

தாதிசொல்-தரு-இ-ம்-ஆதி-திரிபுடைதாளம்.

என்னகாரணமையா-நீர்-வந்தொன்றுமறியார்போலிருக்கின்றீரோ.
மன்னவனும்ரிதுபர்ணராஜனிடம்
உன்னிதமாய்ரதம் ஓட்டுஞ்சாரதியேநீர்
சின்னமில்லாதெங்கள் என்னைத்தமயந்தியை
முன்னந்தனியேவிட்டார் மோசந்துக்குடன்பட்டார். (என்ன)
கொண்டபெண்ணைநளேந்திரன் ஒண்டியாகவிட்டு
மண்டலந்தனிலெங்கே மறைந்திருக்கிறாரோ
பண்டுதேவர்களெல்லாம் பாணிக்கிரகணஞ்செய்ய
விண்டமொழிதவறந்தார் கொண்டுவிட்டேமறைந்தார். (என்ன)



54

பின்னைபெண்மணிவிட்டுப் பிரிந்தபேர்களுக்கு
எள்ளத்தனையிரக்கம் உள்ளத்திலிராதோ
கள்ளத்தனஞ்செய்தாலுங் காலைச்சுற்றியபாம்பு
கடிக்காமறபோகுமோ ஐயாவே. (என்ன)
பாதிராயிலுடனே பாரவனத்தில்விட்ட
நாதனைத்தேடிய நாயகிபாவியோ
ஆதியிலேகொண்ட ஆசைவெறுத்தனன்
ஆண்பிள்ளையல்லவோ ஐயாவே. (என்ன)

பாகவன் விருத்தம்.

கன்னிமோசனைந்திரன் செய்த கதையெலாமென்னிடத்தில்
அன்னிதமென்வேசொன்னீர் யான்செய்யலாவதென்ன
உன்னிடதமயந்திக்கு உபகாரஞ்செய்யவந்த
மன்னவன்ரிதுபர்ணேந்திரன் வாய்மொழியறிவீர்மாதே.

(வ-ம்) அகோ வாரும் பெண்ணே சகிமார்களே நீங்கள் என்னிடத்தில் வந்து அந்தநளராஜாசெய்த அக்கிரமத்தையும் மோசங்களையும் சொல்லுவதிற்பயனென்ன நானோ ரிதுபர்ண ராஜாவுக்குச் சாரதியாகவந்தவன், என்னை நளனென்று பாவித்து தமயந்திக்குச் செய்த பிழைமோசத்தைச் சொல்லவந்தீர்கள் இதெல்லாமல் அந்தரிதுபர்ண ராஜாவண்டையிலே போய்ச்சொன்னால் அவர் அதற்குத்தகுந்த யுத்திரவு சொல்லுவார்நீங்கள் என்னுடனே பேசுவதை எங்கள்ராஜா கண்டால் கோபிப்பார்போய்வாரும் பெண்ணே சகிமார்களே.

தாதிகள்-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

நாரிபர்க்கரசியான நற்றமயந்தித்தாயே
கூறியமொழிப்படிக்கு குதிரைலாயத்திற்சென்று
சீருடனுங்கள்வார்த்தை செப்பினோம்நளனைக்காட்டி
ஏறுமாறுகப்பேசி எங்களையனுப்பினாரே.

(வ-ம்) அகோ சாணஞ்சரணமம்மாதாயே ராஜபரமேஸ்பரி தங்கள் திருவுளப்பிரகாரம் நளமகாராஜனைப்போல அவனைப்பாவனைசெய்து தங்கள் வளப்பம் வருத்தங்களையெல்லாஞ் சொல்லினோம் அவர் ஒப்பாமல் வெறுப்பாகப் பேசினாரம்மா தாயே.

தமயந்திசொல் விருத்தம்.

நல்லதென் சகியேயெந்தனாயகனளேந்திரனும்
வல்லவனானதாலே மர்மமாய்வார்த்தைசொல்வார்
செல்லுவீர்மடப்பள்ளிக்குத் தின்னுங்காய்கறிகள்சாதம்
ஒல்லையிற்சமயலாகு முபாயத்தையறிவீர்மாதே.

(வ-ம்) அகோ வாரும் பெண்ணே சகிமார்களே நீங்கள் சொன்னவார்த்தைக்கு அவரிடங்கொடாததினல், சமயல் சாப்பாடு முதலானதுஞ்செய்கிறவிதங்களை யறிந்து வாரும்பெண்ணே சகிமார்களே.

தாதிகள்சொல்-விருத்தம்.

என்னதான்சொல்வமம்மா யேந்திழைக்கரசியாரோ
தன்னிலந்தனிலேமாந்தர் களாகமௌனமேசொன்னும்
உன்னிதவுபாயமுந்தானுமிப்பிராணனாதன் செய்யும்
அன்னமுங்கறிபதார்த்த மமர்க்கு மகப்படாதே.

சகிகள்-சமயல்செய்கிறவிதஞ்சொல்லல்-கண்ணிகள்.

இ-ம்-சஹானு-ஆதிதாளம்.

சொல்லுவோமம்மா அதிசயம் சொல்லுவோமம்மா
அல்லியங்குழல்மடவார்க்கதிபதியே யன்புடன்கேளம்மா
நானிலந்தன்னிலும்வானுலகத்திலும்யாங்கள்கண்டறியோமம்மா
சதசாரதியஞ்செய்யுஞ்சமயல்அகோதமும்பதமாயிருக்குதம்மா
மாயமாயடுப்பெரியுது நெருப்பில்லை மகத்துவந்தன்னையம்மா
ஆயிரமாவுள்ள வாதிசேடனாலு மாகாதுரைக்கவம்மா
தண்ணீரில்லாதுலை பொங்கிப்பானையில் சாதங்கொதிக்குதம்மா
விண்ணேர்மேலோரவர்செய்யுஞ்சமயலை மெச்சுவார்களம்மா
காய்கறிவகையுஞ்சாதமும்பொரியலுங் கமகமென்றவாசம்
தாயேவீசுநாயகன்போலவே தானேதோன்றுமம்மா
தெய்வப்பிரசாதந்தனின்முதற்பாகர் தேவர்க்குநளபாகம்
மெய்பொய்யுங்கள் திருவுளமறியவும் நெருசிரேஷ்டாம்மா
வேஷமாறியேவிருந்தருபமாய் மெத்தவுஞ்சேவலாய்-இந்தக்
காசினிதனிலே வாசஞ்செய்முழு கபடநாடகனம்மா
ஈசன்செயலால்ராசனளோந்திர னிவராகவேயிருந்தால்
ஆசையாடனுங்களிடம்வந்துசேர்ந்தாலது வெங்கள் தவமம்மா
பாசமில்லார்போல நேசமில்லார்போல பழமையறியார்போல்
பாகவன்போல வந்திருப்பதுங்கள் பாக்கியந்தானம்மா.

தமயந்தி-விருத்தம்.

ஆறுகலடையாளங்க ளறிந்திட வம்மமாரே
சாரதிதன்பால்சென்று சாதமுங்கறிபதார்த்தம்
நிரமாய்க்கேட்டுவாங்கிச் சீக்கிரம்வந்தீரானல்
சேருயர்சகிமாரேயான் றின்றுபார்த்துரைசெய்வேனே.



(வ-ம்) அகோ வாரும் பெண்ணே சகிமார்களே அவர்சமைக்கிற சாதமுங் கறிபதார்த்தங்களில் மெள்ளதந்திரமாகக் கொஞ்சங் கேட்டு வாங்கிவந்தீர்களேயானல் நான்போசனஞ்செய்துச் சொல்லுகிறேன் சகிமார்களே.

சகிசொல்-விருத்தம்.

ஐபாசாரதியேயெங்க ளரசியாந்தமயந்திப்பெண்
ணவயகந்தன்னில்மூன்று வருஷபோஜன முகித்தினா
செய்யாமல்மெலிவதாலே திருவுளமகிழ்ந்துவுந்தன்
கையமுதளித்தாலுண்டு களைதெளிந்துய்குவாளே.

(வ-ம்) அகோவாருங்களையா சாரதிசிரேஷ்டரே எங்கள் ராஜாத்தியான தமயந்தியம்மாள் தன்னிடநாயகன் பிரிந்துபோன நாள் முதலாய் நல்ல நித்திரை சுகபோஜன மில்லாமல் மெலிந்திருக்கிறாள் தேவரீர் நளபாகம் போற் செய்திருக்கிற சாதத்திற் கொஞ்சங் கொடுத்தீர்களானல் நாங்கள் கொண்டுபோய்க் கொடுப்போம்:-ஆகையால் கொஞ்சங்கொடுத்தால் மெத்த சுகிர்தமுண்டாகுமையா சாரதியே.

சாரதிசொல்-விருத்தம்.

தாதிமாரே நீருங்கள் தமயந்திக்கதைசொல்வானேன்
சாதமார்கேட்பாராகிற் றருவமேதநீதியாரும்
போதுமானதுகொடுப்போம் புசித்துங்கள்பசியையாற்றிக்
காதலியேநீரிப்போ கடிநகர்க்கேகுவீரோ.

(வ-ம்) அகோ வாரும் பெண்ணே சகிமார்களே நீங்கள் என்னிடத்தில் வந்து தமயந்திக்குச சாதம் வேணுமென்று கேட்கவந்தீர்களே சாதமென்று யார்கேட்கிறார்களோ அவர்களுக்கில்லையென்னுமற்சாதம்போடவேணுமென்று தருமசாஸ்திரமுறையிடுது இதோவுங்களுக்குத் தேவையானசாதமுங் கறிபதார்த்தங்களுந் தருகிறேன் கொண்டு போம் பெண்ணே சகிமார்களே.

சகிகள்சொல்-விருத்தம்.

பொறுமையில்மிகுந்தவெங்கள் புண்ணியவதியேகேளாய்
சிறுமையாய்வந்திருக்குந்தேர்ப்பாகனிடம்போய்நாங்கள்
அருமையாய்ச்சாதங்கேட்டோமவரிதோதந்தார்நீங்க
ளொருமனதாகவுண்டு வுண்மையையறிகுவீரோ.

(வ-ம்) அகோ வாருங்களம்மா லோகபரமேஸ்பரிதங்களுத்தாரப்படிக்கு அந்தசாரதி அண்டையிலேபோய் மெள்ள தந்திரவுபாயமாக சாதமுங் கறிபதார்த்தங்களும் வேண்டிய மட்டும் வாங்கிவந்திருக்கிறோம் இதைப்புசித்து இளைப்பாருங்களம்மா தாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

அல்லவேதாதிமாரோ யாகட்டும் நீங்களெந்தன்
செல்வரைக்கூடக்கூட்டிச் செல்லவா முன்னேவிட்டால்
சொல்வதையறிந்துநீங்கள் சுருக்கினில்வந்துசோவீர
இல்லையோபுத்திரசோப மெந்தனுக்குரைசெய்வீரோ.

(வ-ம்) அகோ வாரும் பெண்ணே சகிமார்களே நீங்கள் யாக்கியந்தசா திமுங் கதிபதார்த்தங்களும் என்பத்தாவாகிய னளராஜன் செய்த சாப்பா டே யல்லாமல் வேறல்ல ஆகிலும் இன்னமொருதரம பிள்ளைகளைக்கூட் டிக்கொண்டு போனால் அவர் அந்தப் பிள்ளைகளைக்கண்ட வுடனே புத்தி ரவாஞ்சை யிருப்பதும இல்லாமலும பார்த்து வந்து சொல்லும் பெண் ணே சகிமார்களே.

சகிகள்-பாலனைக்கூட்டிவருதல்-தரு-இ-ம்.

சங்கராபரணம்-ஆதிதாளம்.

பாலனையழைத்துவந்தாரே-சாரதியிடம்
பாலனையழைத்துவந்தாரே
ஞாலமெங்கும்புகழ் நளராஜன் வனவாசஞ்செல்ல
சீலமிகுந்தவிமனல்ல செல்வித்தயாந்திசொல்ல (பால)
வாலவயதினிற் பிரிந்தே - தந்தைதாயைவிட்டு
வந்துதாதையிடமிருந்தே
காலங்கழித்திடவந்த கலிசெய்கபடத்தாலிந்த
கோலமாயிருக்கும்பிள்ளைதீ கொற்றவனிடத்திற்சேர்ந்த (பால)
மாயச்சூதாடிக் கெடுத்தே-நாடுநகரும்
மனைவியையுங்காட்டில்விட்டுத்தே
யோய்வனத்தில்மேவஷயாறிய பூவலர்க்காளாகத்தேறி
செயிஞும்மனம் வேசாறித்திரியுறுமென்றுகூறி (பால)

சாரதி-பிள்ளைகளைக்கண்டு புலம்பல்-கண்ணிகள்.

இ-ம்-பிலஹரி-திரிபுடைதாளம்.

ஆதிகேசவ அச்சுதானந்தகோவிந்த
அல்லலுக்கெல்லாமாமுகாகப்பிறந்தேனே — காரணனே-இந்த
பூதலந்தனிற்பல புருகொலைபிரிந்தேனோ — காரணனே
புண்ணியமோவிந்தப்புதுமையெல்லாம்பார்க்க — காரணனே-பூர்வ
ஜதுக்கு இந்தவுடலையெடுத்தே-னெடுத்தேனரி — காரணனே
இந்தக்கண்காகூடிக்கோ இருந்தேனிருந்தேனரி — வாசுதேவா-நான்
காதல்மனைவியுமிந்தவாதனைப்பட்டாரி — வாசுதேவா
கருமவசமோவிதிவசமோநான் காணேனே — வாசுதேவா-செய்த
வாசுதேவா



வேலைத்துரும்பதுபோல் மெலியுதேமனதையா வேணுகோபா என்னை
விட்ட குறையோவிந்த வேஷமாகினேனையா — வேணுகோபா
பாலராசயைநீக்கப் படுவதில்லையோஅரி வேணுகோபா — கொண்ட
பாவையைப்பிரிந் திடலாவதுன்செயல் — வேணுகோபா
மன்னராகப்பிறந்து வாழ்ந்ததுபோதும்போதும் மாதவனே — இந்த
வாறுகவேயுயிர் வைத்திருந்தவருண்டோ — மாதவனே
பொன்பொருளரசாகூடி புத்திரரையும்விட்டேன் மாதவனே — இந்தப்
பிள்ளைகையிற்கொடுக்கப் பொருளொன்றுமில்லையே மாதவனே (ஆதி)

பிள்ளையைப்பார்த்து ராஜன்சொல்-விருத்தம்.

அப்பாவென் சுவாமியையா யார்பெற்றபாலர்நீங்கள்
கட்பாகவென் முன்வந்தீர் நமக்கொருசொந்தமுண்டோ
ஒப்பாகுழுங்களைப்போ லுண்டெனக்கிரண்டுகுழந்தையேக்கம்
இப்போதுதீர்ந்ததுங்க ளிருப்பிடமேகுவீரோ.

(வ-ம்) அகோவாரும் என திருகண்மணியான செல்வ மைந்தர்களே. நீங்க ளார்பெற்ற பாலர்களோ உங்களைப்போல எனக் கிரண்டுகுழந்தை களிருந்தது அதுகளை விட்டுப்பிரிந்து அநேக் நாளாச்சுது இதென்னசெ ன்மம் நம்முடைய வயிறு பெரிதென்று பிள்ளை பெண்சாதியையும் விட்டு விட்டு ரிதுபர்ண ராஜனிடத்தில் ஏவல்செய்துக் கொண்டிருக்க பிரமதே வன் தலையி லெழுதினானே உங்களைக் கண்டவுடன் பிள்ளைகள் ஞாபகம் வந்து அநேக விதனமடைந்து உங்களைக் கண்டமாத்திரம் மறுபடியுஞ் ச ந்தோஷமாயினேன் இப்போது ஏதாவது உங்களுக்குக் கொடுப்போமெ ன்றால் என் கையிலொன் றுமில்லையேபோய்வாருங்களப்பா மைந்தர்களே.

சகிகள்-ராஜனைத்தரிசித்தல்கண்ணிகள்

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

என்னகாணுமக்கித்தனை துயரங்கள்
எங்கள்குழந்தையைக் கண்டே துகாலையா
கன்னியரேயெனக்குப் பிள்ளைகளிரண்டுண்டு
கண்டுவெகுநாளாச்சே பெண்ணரசே
தமயந்திநளராஜன் சமயமிருக்கத்தினால்
தான்வந்தார்வனவாச மேனீர்வந்தீரையா
சமையல்செய்யவும் சாரதியஞ்செய்யவும்
தலைவிதியிருக்கையில் தவறிடுமோபெண்ணே
மானமில்லாமலிந்தப் பழிக்கெங்களரசனும்
மக்களைவிட்டுவயிறு வளர்க்கச்சென்றாரையா

சுனந்தாவென்னுதவ ரிடத்திற்சேவகமாக
இருப்பதுமிகவுநீதான் வந்திழைமயேபெண்ணே
தந்திரமாகச்சென்றவளைவிளிவாராவிடில்
தமயந்திமிழைமையாள்காண் சாரதியேயையா
இந்தப்பிரதாபத்தை பெண்ணிடத்திலிறச்சொன்னாலும்
எனக்கென்னதெரியுங்கா ணேந்திழையேபெண்ணே.

தாதிகள் தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

அம்மையர்க்கதிசமான வம்மாளேசாணைத்தங்கள்
சொன்னசொற்படிக்குவுங்கள் கதையைகேளீரோவிட்டு
பன்னியேயோடிவந்து பார்க்குமுன்பாலர்தம்மை
தன்னிடமார்பிற்சேர்த்துத் தழுவியேயனுப்பினரோ.

(வ-ம்) அகோகேளுமம்மா ராஜமாமேல்பரி தங்கள் திருவாய்மொழிப்படியே பிள்ளைகளை யழைத்துக்கொண்டு அவர்முன்பாகப் போகிறபோது அதற்குமுன்னதாக ஓடிவந்து பிள்ளைகளைக்கண்டு வாரியெடுத்து உச்சியைமோந்து அழுது புலம்பி அப்பா வுங்களுக்குக் கொடுக்க என்கையி லொன்றுமில்லையே போய்வாருங்களென்று அனுப்ப அப்போதுநாங்கள் வளைமறித்து எங்கள் பிள்ளையைக்கண்டு அழவேண்டியகாரணமென்னவென்றுகேட்க அவர்தம் விடங்கொடாமல் எனக்கிரண்டு பிள்ளைகளுண்டு அதைவிட்டுவந்து அநேககாலங்களாச்சுதென்று சொல்லி அவர் ஒப்பாமல் வெறுப்பாகப் பேசினாரம்மா தாயே.

தமயந்தி வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தந்திரமாகவந்த சாரதிவரலாறெல்லாஞ்
சுந்தரமான தாதி சோதனைபார்க்கவெந்தன்
மைந்தனையவர்க்குக்காட்ட மனமெலிந்தழுதாரிப்போ
எந்தனையனேபார்ப்போ மிவ்விடமழைத்திடீரோ.

(வ-ம்) அகோசரணஞ் சரணமையா சுவாமிஎனது தந்தையாகிய வீமராஜனே நம்முடைய தாதிகள் குதிரைலாயத்தில் வந்திருக்கிற சாரதியிடத்திற்போய் அவர் குறிகுணமும் சமயல் சாப்பாடு விதமும் புத்திரவாஞ்சையு மிருக்கிறதாக நமக்குத் தெரிவித் திருக்கிறார்கள் மேலும் நான் அவ்வண்ணமேல பார்க்கவேண்டியபடியினால் அவரை நம்முடைய அரண்மனைக்குவரும்படி ரிதுபர்ணராஜனுக்கு அறிவித் தழைப்பிக்க வேணுமையா சுவாமி.

வீமராஜன்-விருத்தம்.

சந்ததங்கருணைதனதிடாச்சொரூபியே
சுந்தரமிகுமயோத்தி யரசராவுமதுபக்கல்



வந்தசாரதியைப்பார்க்க வாஞ்சையாயிருப்பதாலே
எந்தனைத்துமுகந்தன் விசேஷணமனுப்புவீரோ.

(வ-ம்) அகோகேளுமையா அயோத்தியாபுரியை யாளுகின்ற ரிதுபர்ணமகாராஜனே உமக்கு ரதசாரத்தியஞ் செய்துவந்திருக்கிறசாரதியைப்பார்க்க மெத்தவும் அபேக்ஷையாயிருக்கிறது நம்முடைய சமுகத்திற்கு அனுப்பிவைக்கவேணும் மகாராஜனே.

ரிதுபர்ணன் சாரதிக்குச்சொல்-விருத்தம்.

ஜெகமெலாம்புகழுமெந்தன் தேர்ப்பாகவாகேளுன்னை
மகிபதிவீமராஜன் வரவழைத்திருப்பதாலே
அகமகிழ்ந்துறையாம லவர்சமுகத்திற்சென்று
சுகமுடன்கண்டுபேசித் துரிதமாய்வருகுவாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் சாரதியே வீமராஜாவானவர் நீர் சாரத்தியஞ்செய்து வந்ததின்பேரில் உன்னைப்பார்க்க வேணுமென்று வரும்படி நமக்குத்தெரிவித்திருக்கிறார் ஆகையால் நீபோய் அவரைக்கண்டு பேசி துரிதியில் வந்துசேரும்பிள்ளாய் சாரதியே.

சாரதி வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தேகத்திற்கழலைப்புண்கள் சிரங்குசியொழுகுமென்னை
லோகத்தார்பழிக்குமபாவி நுன்னையென்னைப்பொருட்டாயெண்ணித்
தாகமாயழைத்தவாறு தான்கேட்கவுரைத்தால்நீயும்
பாகனென்றிதமாற்றம் பகர்ந்துயானேகுவேனே.

(வ-ம்) அகோசரணஞ் சரணமையா சுவாமி வீமராஜனே உலகத்தார் என்னிடம்நில்லாதெருங்கிப்பேச அசங்கிதப்படும்படியான என்னைதேவரீர் ஒருபெரிதாயெண்ணி என்னை யழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணுமையா சுவாமி.

வீமராஜன்-விருத்தம்.

பாரெலாங்கீர்த்திபெற்ற பாகவசிரேட்டரேநீர்
தேர்நடத்துவதிலதிக திறமையுள்ளவரென்றார்கள்
வாருஞ்சிம்மாசனத்தில் மனமகிழ்ந்திருந்தெனக்குத்
தேறுதலானவார்த்தை செப்புவீர்செப்புவீரோ.

(வ-ம்) அகோவாருமையா பாகவசிரேஷ்டரே இவ்வுலகத்தில்ரதசாரத்தியஞ்செய்ய சாமர்த்தியமுள்ளவரென்றால் என்னுடைய மருமகனான நளராஜனைத்தவிர மற்றொருவனையுங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை ஆனாலும் அவருக்குமேலான சாமர்த்தியமுள்ளவரென்று உம்மைச்சொல்லுகிறார்கள் ஆகையால் எனக்கு மிகவும் அதிகப் பிரியுண்டாயிற்று என்னுடைய சிம்மாசனத்தின்பேரில் உட்காரும் நாமிருவருஞ்சம்

தோஷமான வார்த்தைகளைப் பேசிக்கொண் டிருப்போமையா சாரதி சிரேஷ்டரே.

சாரதிசொல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஏகதாளம்.

சிம்மாசனங்கொடுக்கத்தகாது தேரோட்டுஞ்சாரதிநான்
உம்முடன்சரியானராஜனோ நானோ சம்மந்தியோ சுவாமி
உம்முடைபெண்தனக்கே சுயமாவோலைவந்ததினாலே
எம்முடைராஜன்பின்னே யிதபாகவருக்கிறதுமோசுவாமி
எங்கள்தன்ராஜாவும் மந்திரிதுணையில்லாமலேயொண்டியாய்ச்
சங்கையால்வீற்றிருப்பாரோ யான்போகவே தான்விடைதாருமையா
மங்களகரமென்ன அதிவேகமாகவந்ததினாலே
அங்கம்வேர்த்தயிநாலெனக்குத்தரலதுசெய்விர்வாரனையா
ஈதென்ன காரணங்கா ணேனன்னையிக்கோரக்கிபசாவி
வாதைப்பட்டழுது விழுந்துபுலம்பிவிம்மா மென்றுமறியேனையா
ஏதென் தவக்குறையோ அரிகரி எந்தன்விதிதானோ
போதும்போதுமையா இந்தகன்மமல்ல போகவிடைதருவீர்.

வீமராஜன்-விருத்தம்.

சூரியதிர்தனைத்தபாகன் கொற்றவனென்றேயென்று
தெரிந்துமேவீமராஜன் ஜெயமணிநகைத்தாங்கி
அருமையாம்போர்தன்னையவர்மடிதன்னில்வைத்து
ஓருமையாய்த்தமதுபெண்ணை ஞானமுறையைசெய்வாரே.

வீமராஜன்புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

ஐயனேநளராஜேந்திரா யானும்மைவரவழைக்கச்
செய்தவுபாயந்தானிது தெய்வமதுசாக்ஷியாக
வையகமுழுதுந்தேடிமன்னன்ரிதுபர்ணனிடம்
மெய்க்கருநியேவல்செய்தீரென்ற மிகத்தெரிந்தோம்
இந்தவித்தைகள்செய்கே யிவ்விடத்திலழைப்பித்தோம்
சந்தேகமாய்நினைத்தீரோ சம்மதிப்பாளோ நின்தேவி
எந்தன்மேற்கோபம்வையாம லென்மகளைச்சேர்ந்துவாழ்வீர்
மைந்தர்முகம்பாருமையா மனதறியாவர்மருண்டோ. (ஐய)

சாரதிசொல்-விருத்தம்.

பூதலம்புகழ்நல்ல பிள்ளையைப்பெற்றபேர்கள்
காதலால்மிகுந்தகீர்த்தி களிப்புறவிகட்சிதோன்றும்
தீதுயர்மக்களாலே செகத்தினில்வசையுண்டாகும்
ஈதெந்தனிடத்திற்சொன்ன தியாதொன்றுமறிகிலேனே



(வ-ம்) அகோசாரணைஞ் சாரணமையாசுவாமி உலகத்திலே நல்லபிள்ளையைப்பெற்றவர்களுக்குகீர்த்தியுண்டாகும், கெடுதியாயிருக்கிற பிள்ளைகளைப்பெற்ற வர்களுக்கு அபகீர்த்தி யுண்டாகும். ஆகையால் காருணிரிதுபர்ண ராஜவுக்கு ஊழியஞ்செய்யப் பட்டவன்கேவலமாகிய என்னை நளனென்று பாவித்து எண்ணிப்பேசுவதுதருமமல்ல இப்பேர்ப்பட்டபாக்கியவதியைப்பெற்ற வுமக்கு னைருகைறச்சல்அந்த நளராஜாவானவர்தான் என்ன அவருக்கதிகமான ரிதுபர்ண ராஜாவை வரவழைத்திருக்கிறீர் அவருக்கேமருவியாணைஞ் செய்தவையும் எங்கள்ராஜன்தனியேயிருப்பார் நான்போய் வருகிறேனையாசுவாமி.

தமயந்தி-சாரதிக்குச்சொல்-விருத்தம்

வல்லமைகூறுமெந்தன் மன்னவாசுவாமிநாதா
சொல்கிறமொழியைக்கேட்கத் துடிக்குதேயென்றனவி
வெல்லுவோர்பொய்வழக்கை மெய்ப்போலபேசுவார்கள்
பொல்லாதபாவியன்றோ புறங்கூறத்துணிந்தீரையா.

தமயந்திசொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்

என்னவார்த்தைசொல்லத்துணிந்தீர்-பிராணநாதனே
இதுதகுமோசொல்லீர்

கன்னியென்தனை யாரென்றெண்ணியே
கபடமாயுரைத்தீர் கதைமிகவேவிசித்திரம்

பொன்னும்பொருளும் பூமியெனையும்
பிள்ளையும்பிரிந்தீர் ரிதுவேஷமாயிருந்தீர்

மன்னன்ரிதுபர்ண வாசல்விட்டாலிங்கு
வருவீரோசாமிவந்தும் அறியீரோசுவாமி

பெண்டிரைவிட்டிந்த மண்டலஞ்சுத்திப்
புரிந்திருப்பாருமுண்டோ தாங்கள்பேசுவதும்நன்றோ

கொண்டபுருஷனும்'ரண்டகஞ்செய்திடக்
கோதையென்செய்வாளோ தேவர்க்காயென்னநானோ

சண்டாளியென்னென்னைக்கைவிட்ச்
சம்மதித்தாயோவென்துரையே தர்மமாமோவின்றுரையே

போது-விருத்தம்

வந்தசுயம்பரமிடம் கொடாமற்செல்ல
மன்னவென்றுரைத்தே வர்தாடும்போது

கந்தமலர்க்குழலி தமயந்திமாது
கணவனுருமாறியுமெய்க் கருத்தம் வாடிச்
சிந்தையனல்மெழுகெனவே சிதறிச்சோபக
தீரமவொருவகையாய்த் துன்பமெய்திச்
சுந்தரமாயிருந்ததிரு முகம்பேதித்துத்
துயரமுற்றுகோபமுடன சொல்லுவாளே

சாரதிதமயந்தியைப்பார்த்து-கோபமாய்ச்சொல்-தரு.

இ-புன்னாகவராளி-அடதாளம்

என்னைக்கண்டவுடனிதேது-பெண்ணே
என்னைக்கண்டவுடனிதேது
இதற்குமுனெருதரமுண்டோசொல்லுபோது
உன்மனக்குறைமெல்லாந்தீர-இனமே
உன்றந்தையுந்தனுக் கேபமிற
மன்னன்ரிதுபர்னர்க்கோலைபெண்ணே-நிட்டி
மறுகலியாணமென றனுப்பினத்தாலே
இன்னம்விசாரமென்னமானே-இது
சொன்னேனுன்றந்தையர்க்கேர்க்காதுதானே (என்னைக்)

நளராஜன்சொல்-விருத்தம்.

நளனெனவெனையென்றாதே நற்றமயந்திமாதே
அழகுமாப்பிளையாம்விம னழைப்பித்தார்களுக்கொப்பாய்
வளர்மதிமுகத்தினுளே மறுகலியாணஞ்செய்து
வுளமகிழ்ந்திருக்கலாமே வுனக்குண்டோகிலேசந்தானே

(வ-ம்) அகோவாச்சரியம் பெண்ணே தமயந்தி யென்னையுன் புருஷனென்று நினைத்து மிகவும் வருத்தப்படுகிறாய் ஐயோ யென்தகப்பனாராகிய விமராஜன் நளனுக்குமேலான நாயகனையழைத்து உனக்கு மறுகலியாணஞ் செய்யப்போகிறார் இனிமேலுனக்குக் கிலேசம் வேண்டியதென்ன சொல்லும்பெண்ணே தமயந்தி.

தமயந்திசொல்- விருத்தம்.

அன்னியர்போலவென்னை யக்கிரமிசபேசலாமோ
உன்னையிங்கழைக்கயிந்த வுபாயஞ்செய்தோமெனவாயி
னனிடப்புடவைபாதி யிடையினிலிருக்குதேதான்
மன்னவாபோதும்போது மகிழ்ந்தெனையாளுவாயே

தமயந்திக்கும்- நளனுக்கும்- தர்க்கம்-தரு

இ-தஜாவந்தி-ஆதிதாளம்.

சொல்வதுவுபாயமாமோ-என்சுவாமியேநீர்
சொல்வதுவுபாயமாமோ



நல்லவர்பெரியோரிந்த ஞானிலத்தன்னிலெழுந்த
வல்லவராறுஞ்சொந்த மனையவள்கண்ணீர்காச்சித்த (சொல்வ)

வெல்லாதுவெகுகடினமே-மென்மியர்சொல்லை
வெல்லாதுவெகுகடினமே
வல்லமைமிகுந்தகாலன் வார்த்தைபயியாதபாலன
சொல்லைக்கம்பலாம்பிரபஞ்சம் தோகையர்மனவஞ்சம் (வெல்)

காலந்தெரியாதவரோ-என்சாமிநீ
காலமறியாதவரோ
ஆலகாலவிடம்போலே யாராபாரித்தெனமேலே
ஞாலந்தனிலேயார்மாலே நானவனம்வந்ததினாலே (சொல்வது)

சொந்தமனைவியைப்போலே-பழமைதுயர்
சொல்லுகிறாய்நீயென்மேலே
தொந்தமிவெகுக்காலே தோகையர்பொருந்தும்போலே
அந்தநேர்க்கண்டிருக்காலே இதுநானஞ்சொல்லுவதாலே (வெல்ல)

புத்திரமாந்தரையும்விட்டேன-புண்யபுருஷ?
மெத்தவுன்னால்பாடு பட்டேன்
குத்திமொனச்சொல்லலாமோ சத்தியபெண்பாவம்போமோ
சித்தமுமலக்கலாமோ செத்தபின்னுயிர்வருமோ (சொல்வது)

கொண்டபுருஷனல்லவோ-நீதானலையாய்க்
குருக்கைசனமளசொல்லவே
மண்டலத்தினினிமேல்வரும் மறமூடர்தஞ்செய்யும்பெரும்
பெண்டுகட்கில்லையோவாரும் பிறபுருஷனைபேரும் (வெ)

நித்திரையும்வருகுதில்லையே-புத்தனைப்போலே
நீலகண்டனுரு பின்னிலே
சத்தியமொழிந்தசொல்லைத் தானுமறந்தாளோதொல்லை
மெத்தவிதினைச்சல்லை வேண்டாதவர்சொல்லுஞ்செல்லே
பெண்ணேவுனக்கென்ன கிலேசம்-மறுபுருஷன்
பிரியமாய்வைத்தாரே நேசம்
பின்னும்புருஷன்மேற்பாசம் யேதையேயையாதேநேசற்
அன்னியர்மேல்விசுவாசம் அதுவுநீயேசெய்தமோசம் (வெ)

தமயந்திசொல்- விருத்தம்.

என்னிடமனாதிந்த விறையவாசகங்கேளீர்
தன்மனதினிலேவேறு சமயமெண்ணவேண்டாம்
நின்னையாம்சகிப்போ நெருப்பினில்மூழ்கிவாரேன்
பன்னகசயனமாத பங்கயமறியத்தானே.

(வ-ம்) அகோசரணஞ்சரணமைப்பாகவாமி தேவரீர் என்னுடைய மனையாகித்திருந்தும் இப்படிக்குச் சொன்னது போயால்ல அப்படிக்குமாறகலியஞ்செய்யகனைத்தனித்தால் ஆகாயவாணி பூமிதேவி யறிப்பார்களா இரண்டாவது சுயம்வரம் காட்டி யிருக்குதாயாரும் சகலதேசத்து ராஜாக்கள் வந்திருக்கிறார்களோ சொல்லுங் கீழ பரைராஜாவினிடமா யேவற்பணிவிடை செய்துக்கொண்டிருக்கிறது தெரிந்து உண்மை இடைத்தக்கமுக்க வேண்டியகாரணமா யழைத்தே ஒழியவேறல்ல மனதிலொன்று வாக்கிலொன்று யினைத்திருந்தது தங்களுக்குச் சந்தேகமிருந்தால் முப்பத்து முக்கோடி தேவர்க்கும் ஸ்ரீமத்சரவணமூர்த்தி பாதசாக்ஷியாக இந்த அக்னியில் மூழ்கியெழுந்து வருகிறேன் பிற்பாடாகிலும் தேவரீர் கிருபை வைத்தன்னை இரக்ஷிக்கவேணுமையா சுவாமி.

தேவர்கள்வருகிற-பொதுவிருத்தம்.

தன்னதுடன்றமயந்தி மயிலாள்தானுந்
தனையசொடுனராஜன்றானில்விழ்கச்
சந்திரனையனையமுகவதனஞ்சேர்கரத்
தானைமயிலினீர்போற்றபங்குப்போது
இந்திரனுக்கிராணிபெற்றதேவனைவாணி
யிலக்குமிநாரணனானிப்பரியுந்தேவர்
வந்துவானவருடாககுாவில்
மகிழ்ந்தகனனறனைக்கண்டுவசனித்தாரே.

(வ-ம்) அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் குதிரைசாலத்திலிருந்த சாரதியைவரவழைத்து வுற்றுப்பார்த்துத் தனனுடைய வஸ்திர அடையாளத்தையும் கண்டுபிடித்து தனபுருஷனே யென்று நிச்சயித்து அநேகவிதமாக ராஜனைப்போக வுறிவிடாமல் மடியைப் பிடித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் சம்பாஷணம் மாதமில்லாமல் இடங்கொடாமல் களராஜன் இடச்சித்தனையிருக்கிறதைத்தமயந்தி பார்த்து ஓய்பிராணநாதா நான்மறுசுயம்வரஞ்செய்ய எத்தனித்ததல்ல உண்மையழைக்க இந்தபோசனை செய்ததல்லாமல் வேறல்ல அப்படிக்குச் சந்தேகமிருந்தால் இந்த அக்னிக்குழியில் மூழ்கியெழுந்து வருகிறேனென்று அக்னியில்மூழ்கி நீதியிலேயாடி வருகையில் அப்போது முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியீசுவரரும் ஆகாயவாணிபூமிதேவியும் திருமூர்த்திகளும அவரவர்களேறு இறவாகனங்களிலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்வந்து களராஜனுக்குச் சமாதானஞ் செய்யவருகிற விதங்காண்க.



தேவர்கள்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

கங்காதரனும்வர்தார்-கயிலைவாசரும்
கங்கொதரனும்வந்தார்
பங்கயத்திருமாலும் பார்பதிதேவியும்
ஐங்கரக்குரிசிலு மறுமுகனுருடன (கங்காதரனும்)

இந்திராதிதேவர்வர ரிஷிமுனிவரெழுந்துகைலாகுருக
சந்திரஆதித்தர்தொழ அஷ்டவசுக்கள் தருமதேவதைகள்சூழ
சுந்தரத்துப்புரு நாரதருங்கவிக்
தோலகயேனகைரம்பைதிலோத்தமை நடனமாட (கங்கா)

ஆகாயவாணியுடன்வயிரவனுமையனோடனசேகனும்
வகைதிருத்தாரும் பூதகணங்க ளியலினபாகவதரும்
போகபூமிமருமேகராஜருரும்
புலிபதஞ்சலியுடன் புஷ்பரிஷபருடன். (கங்கா)

தேவர்களை-ராஜனும-மனைவியும்-தோத்திரஞ்செய்-தரு
இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

அரகரசிவாசம்போ நாராயணஅம்பிகைநாதா சிவசரணம்
சிவ சம்போ சங்கர சிவசரணம்
பாமாகியா பக்தரக்ஷகா
பாலலோசன சிவசாமி திரு சூலபாணியேசிவசரணம்
நவநாயகர்துதி நாதா நீதா
நடனப்பொற்பாதா சிவசரணம்-லோக
நாயகநாதா சிவசரணம் பவசாகரபாசமடவிநாசா
பஞ்சனநீக்ஷா சிவசரணம் கடல்நஞ்சையுண்டவா சிவசரணம்

இராஜனசொல் - விருத்தம்.

சிவசிவசிவனே போற்றி செந்திருமாலே போற்றி
பயமறத்தாண்டமிக்கும் பக்தரக்ஷனே போற்றி
நமனுதித்தார்போற்றும் நாயனேயன்பர்வாழ்வே
அவமறுத்தாள்வாயெங்க ளாண்டவா போற்றிபோற்றி

(வ-ம்) அகோசரணஞ் சரணமையாசுவாமி முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷி சுவரான் இனணகிப்புருடா சித்தவியர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியீசுவரரான இந்த அண்டபிண்ட சராசரங்களிலிருக்கப்பட்டதாதர் தும்புருநாரதர் இந்த அண்டபிண்ட சராசரங்களிலிருக்கப்பத்யாதார் தும்புருநாரதர் இந்த அண்டபிண்ட சராசரங்களிலிருக்கப்பட்ட எறும்புகடையானமுதல் எண்பத்துநான்குலக்ஷம் ஜீவராசிகளுக்கெல்லாம் தேவராயிருக்கப்பட்ட திரிமூர்த்திகளே சரணஞ் சரணமையா சுவாமி.

தேவர்கள்சொல்-விருத்தம்.

தருமமேசொருபமான சத்யவாசகனேசந்திர
பாதவப்படலேவேண்டாம் பத்தினியுன்றனதேவி

ஒருநாளும்புகட்டில்லை புலசெகார்நீபோயாள்வாய்
கரியன்கார்க்கோடன்செய்த காரணமறிந்தனே

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் சத்தியந்தப்பாத நளமகாராஜாவே நீ ர்க்காபகாக விருப்பாய் உன்தேவிபாகிய தமயந்தியின்பேரில் ஒரு அநுபவளவாகிலும் கிர்சமபியம் எண்ணத்தகாது இந்தப்பதிவிரதையான பத்தினியும் நீயும் உன்பிள்ளைகளுங் கூடிவாழ்ந்துக் கொண்டிரும் இதோ கார்க்கோடகன் தன்விகுர்தருபத்தை வாங்கவந்திருக்கிறார் ஆனதால் உம்முடைய நிசரூபத்தைவெளிப்படுத்தி எப்போதும் போலே அரசாகி செய்துக்கொண்டிருந்து அந்தியகால வேளையில் கம்மிடபதவிவந்து சேரும்பிள்ளாய் நளராசனே.

சநிபிகான்சொல்-விருத்தம்.

சத்யனாசகமொக்காளுக சவாறகடேகபுரம்
இக்கலீகளுறுமுனாளை யிறுக்கனள்பிகவேசெய்தேன்
மிக்குமாகிழ்ந்துவுன்றன் செல்வருந்தேவிபோடும்
சுக்சமுஞ்சூழவாழ்ந்து களிக்குமசனுவாயே

வசனம் - அகோவாரும் பிள்ளாய் நளராஜனே அந்தத்தமயந்தியைநீ ன் கலியாணஞ்செய்யவேணுமென்று எண்ணியிருந்தேன் நீர்கல்யாணஞ் செய்தபடியால் உன்னைப்படாத பாடுகளெல்லாம் படுத்திவைக்க வேணுமென்று உம்மனைவியில் பகிரண்டுவருஷங் காத்திருந்தேன இதப்பனிரண்டு வருஷமாய் உம்மிடத்தில் அநுபவித்ததற்கு ஏதுவில்லாம லிருந்துவிட்டது ஆகிலும்நான் நினைத்தபிரதிக்ஞை நிறைவேறவேணுமானதால் உம்மிடத்திலிக்காலில் ஒரு சின்னமறுவை யானப்பிருந்துவிட்டது அதின்வழியா கஉன்னுடலிற் கலந்துபத்தினைப் பேதலித்து இவ்வளவு அலங்கோலஞ் செய்துவிட்டேன் நீசிறுவனாயிலும் தருமநெறியறியாமறாய் யிருந்தபடியால் உன்பேரிலும் மறுபடியும் சந்தோஷம் வந்துவிட்டது ஆகையினாலே நீரிந்தக்ஷணமே உம்மிட நிசரூபத்தைப்பெற்று உன்பெண்சாதி பிள்ளைகளுடன் கலந்து அந்தப்புட்காரஜனிடத்தில் போய்மறுசூதாடி உம்மிடராச்சிய மெல்லாவற்றைக் கொண்டு முன்போல்பதின் மடங்கதிகமாய் ராச்சியபரிபாலனஞ் செய்துக்கொண்டு சுகமாயிரும்பிள்ளாய் நளராஜனே.

கார்க்கோடகன்-விருத்தம்.

கடல்நஞ்சையுண்டவீசன் கலங்கிடச்செய்ததேவன்
மடமங்கைநீதிற்கொண்ட சாமளாவிந்தவானத
உடன்கொண்டாய்நளராசேந்திர வுன்னுடல்மூன்போலாகும்
திடங்கொண்டசபேன் தோர்த்தான்போன்றோலுங்கீர்த்தியாமே



வசனம்.

அகோவாரும்பிள்ளாய் நளராஜனே திரிமூர்த்திகளைப் பங்கப்படுத்திவைத்த சநியீசுரபகவான் அந்தத்தமயந்தி பேரில்வைத்த ஆசையினாலே உம்மை இவ்வளவுபடாத பாடுகளெல்லாம் படுத்திவைத்தார் என்பேரில் நீர் ஆயாசப்படவேண்டாம் உம்மிடசத்யாசத்தியமான துசாத்தியமேசநியீசுரபகவானை நடுங்கும்படியாகச் செய்துவிட்டது அந்தசநியீசுரபகவானை பயந்தனங்கேசாபங்கொடுக்கிறோமென்று எண்ணங்கொண்டிருக்கிறார் நான்முன்னமே என்விஷத்தினாலே யிருந்தருபம் வரும்படி செய்திருந்ததை இதோநான்வாங் கிக்கொண்டு உம்மிடபூர்வரு பத்தைத்தந்து விட்டேன் நீயும்உன்பெண்சாதி பிள்ளைகளுங் கூடிவாழ்ந்து மகச்சகிராதிபதியாயிருந்து அரசாட்சி செய்துக் கொண்டு கடைசியில் அரியினிடபாதாரவிந்தகமலங்களிலே வந்துசேரும்பிள்ளாய் ராஜனே

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் தமயந்தியும் நளராசனுந்தர்க்கஞ்செய்து அக்கினியில் தமயந்திமூழ்கி யெழுந்துவர அப்போது முப்பத்துமூக்கோடிதேவர்களும்வந்து சமாதானஞ்செய்துகார்க்கோடகனால்முன் பூருவரூபத்தைப்பெற்றுக்கொள்ளபிறகுசகலதேவதைகளும் அவரவரிடங்களுக்குச்சொல்ல அதின்பிறகு சகலராசாக்களும் தமயந்தியும் வீமராசனும் பிள்ளைகளும் தப்ளுமியுமவந்து இடப்புரி லபப்புரியாக நளராசனுக்குச் சரணமடைந்துநிற்க அப்போது அயோத்தியையாளப்பட்டரிதுபர்ணராஜன் இந்தச்செய்திகளை யெல்லாங் கேட்டு திடுக்கிட்டுப் பயந்துநடுநடுங்கி ஏவற்பணிவிடைகளைச் செய்யச்சொன்னோமே யென்று நளராசனண்டையில்வந்து காலில்விழுந்து அழுதுபுலம்பினானசெய்த அபராதத்தையெல்லாம் பொறுத்துநான மனமறியாமற்செய்தபிழையைப் பொறுக்கவேணுமென்று மிகவுந்துதித்துச் சரணஞ்செய்கிறவிதமெப்படியென்றால்.

பொது-விருத்தம்.

தேவராசருநளனைக்கண்டுசென்றார்
இண்டியகார்க்கோடகனறன்னுருவைமாற்ற
மாயமாய்வந்துவினவு தனரூபத்தை
வாங்கிக்கொண்டேகியபின் னளராசேந்திரன்
ராசரூபத்துடனே விளங்கக்கண்டு
நாரியும்பணிந்து மகிழ்ந்தருகில்நிற்க
ஆதரனைசெய்தரி துபர்ணவேந்து
அடிபணிந்துவணங்கியுமே பாடுவரனே

நளராஜனிருதுபர்ணராஜன்தோத்திரஞ்செய்கிற-கண்ணிகள்.

இ-ம-மோகனம்திரிபுடைதாளம்.

சரணஞ்சரணமையா நளராஜேந்திர
தயாநிதியேசரணம்
கருணாகரமின்னதா லறியாமலுமைவேலை
வாங்கினேனேமன்னவா
அறிந்துதேவரீரை யதுவல்செய்யச்சொல்லவும்
ஆகுமோஆண்டவனே
தெரிந்துசெய்காலத்துத் தோஷமநுபவிப்பேனே
தேவரீர்பொறுத்தருள்வீர்
வருந்தியெனமனமெத்த நோகுதேயென்செல்வேன்
மன்னர்க்குமன்னர்கோவே-இது
பொருந்துமோவுலகோர்க்கு மறிந்தவஞ்சனையல்ல
பொறுத்தருளுமையனே.

ரிதுபர்ணன்-விருத்தம்.

விக்ரமவிதகுணசீக வேந்தர்கட்கரசேலோக
சக்ரவர்த்திக்குணமிக்கத் தலைவனேநிடதர்கோவே
இக்குருத்தடனிவ்வேஷ மெடுத்தென்னைசோதித்தாளி
அக்கணவந்தென்னை அருள்செய்வீர்சரணந்தானே

நளராஜன்-விருத்தம்.

கர்மமவைத்தாதரித்த ராசனேரிதுபர்ணேந்திர
உம்மிடபேரிற்குற்ற மொருதினையளவுமில்லை
கர்மாநீவருந்தவேண்டாங் கதுக்கமநுபவித்தேன்
தம்மிடநகரிற்சென்று சந்தோஷமாய்வாழ்வீரே

(வ-ம்). அகோவாருமையா ரிதுபர்ணமகாராஜாவே இதுகாலவரையில் நீர்கர்மமைவைத்தாதரித்து சவாகநூனை செய்துவந்தீர் உம்மிடபேரில் ஒருநாளுங்குற்றமில்லை தேவரீரநுக்கிரகத்தினாலே நானதன்ன யனேனென் என்ஜென்மசாபல்லிய மீடேறிற்று அந்தசபிகவான் மாயையால்கடந்ததில்லாமல் வேறல்லநீர் என்பேரில் தயைசெய்து இந்தவஸ்திர பூஷணாதிகளை யணிந்துக்கொண்டு தங்கள்நகரம்போய்ச்சுகமாயிருமையாராஜனே.

பொது-விருத்தம்.

அய்யோத்திரிதுபர்ணராஜனுக்கும்
அன்பாகவிடைகொடுத்தேயனுப்பிவிட்டுத்
தையல்தமயந்திமைந்தன்வீமராஜன்
தபனுமியுடனேசந்தோஷமிறச்



சையோகமாயிருந் ததமேற்கொண்டு
தமயந்திமயிலாளுந்தானுங்கூட
வையமெல்லாம் வணங்கிடதபுரிராஜன்
மன்னவன்புட்கரன் சமுகமதில்வந்தாரே

நளராஜன்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்

தேசம்புகழுநள ராஜன்மறுசூதாடச்
செயநிடதபுரிவந்தார்
நேசமாகமைந்தர் மனைவியுடனோடி
நீதியுயர்மைத்துனன் தபனுமியுடன்கூடி (தேசம்)

வஞ்சனையாய்ச்சகி மாயையினாற்செய்த
வாழ்வும்பதியரசு மானதைச்சூதால்விட்டு
அஞ்சியென்றவன வாசந்துலைத்துமாயன்
அருளினால்புட்கர னுடனேமறுசூதாட (தேசம்)

முந்துசெய்யுந்தவத்தால் சந்திரகுலந்தழைக்க
மூர்த்திகளும்வந்து நன்மைமிகவளிக்க
சந்தோஷமாய்ச்சுற்றத் தார்களாசுடன்
தானரசாளவே சதிருடன்வாழவே (தேசம்)

பத்தினிதமயந்திச் சத்திரபதிநளேந்திரன்
பட்டபாடுகளெல்லாந் தொட்டார்கலிராஜனும்
இஷ்டமாகமன திரங்கிவேண்டியவரம்
இசைந்தருளனந்த யிந்திரவைபோகமுடன் (தேசம்)

நளராஜன்சொல்-விருத்தம்.

பூவுலகத்தையாளும் புட்கரராஜனேகேள்
தீவினைப்பயனாலெந்தன் தேசத்தையுனக்களித்தேன்
தேவிமைந்தரைப்பிரிந்து தேசசஞ்சாரஞ்செய்தேன்
ஆவலாய்மறுசூதாட யான்வந்தேனாடுவீரோ

(வ-ம்) அகோவாருமையா புண்யசீலராகியபுட்கரமகாராஜனே நீர் என்னிலும் மகாபராக்ரமமுடைய வரானதினாலே என்னுடன் கபடமாக வந்துசூதாடி என்னுடைய நாடுராச்சியங்களை யெல்லாங்கெலித்துக்கொண்டு எங்களையும் வனவாசம்போகும்படி செய்துவைத்தீர் நாங்களும் வனவாசம்போய் உம்மிட அநுக்கிரகத்தினால் வந்துசேர்ந்தோம் முன்னமே ஆடினசூதை இன்னமொருதரமாடவேணுமென்று மனதாய்வந்தேன் நாமிருவருஞ்சூதாடலாம் வாருமையாராஜனே.

புஷ்கரராஜன்சொல்-விருத்தம்.

என்னகாணளனேகேளாய் யென்பாக்யவசத்தினாலே
தன்னிடநாடுதோர்த்நீர் தானேவந்தேசூதாடி
உன்னிடகஷ்டகால மூர்விட்டுப்போயிருந்தும்
இன்னுள்சூதாடவந்தீ ரீநென்போவதைச்சொல்வீரே

(வ-ம்) அகோவாருமையா நளராஜனே முன்னம்நாமிருவரும் ஒன்று சம்மதமாகப் பந்தயம்வைத்து சூதாடினோம் உம்முடைய விதிப்பயனால் நீர் தோர்த்துவிட்டீர் இப்போது மறுபடியும் வந்து சூதாடவேணுமென்கிறீர் பந்தயமென்ன கொண்டுவந்தீர் சொல்லுமையாராஜனே.

நளராஜன்சொல்-விருத்தம்.

பந்தயமெனக்குமென்ன பாவியிருக்குதென்றீர்
எந்தநாயகியையிடா யிதைகட்டிவைத்தேனிப்போ
உந்தன்னகருநாடு பொருளிக்கெல்லாஞ்சேர்த்து
வந்து நீசொந்தனோடே மறுசூதாடுவீரோ

(வ-ம்) அகோவாருமையா புஷ்கரராசனே நாமிருவரும் இன்னமொரு தரம் சூதாடவேணுமென்று சொல்லுவதற்கு பந்தயங்கட்டவும் மிடத்தில் என்னவஸ்திருக்குதென்றுகேட்டீர் உம்முடையநாடுநகரம் ராச்சியங்களும் அதிலுள்ளரெக்கம் யானைசேனை ரதகெஜதுரகபதாதிகளுக்கும் பதில்என்னிட தேவியாகியதமயந்தியை யிடாகக்கட்டிவைத்தேன் நாமிருவரும் சூதாடுவோம் வாருமையாராஜனே.

புஷ்கரராஜனுக்கும்-நளராஜனும்-உ-வது-சூதாடல்-திரு.

இ-ம்-யதுகுலகாம்போதி-ஏகதாளம்.

சொக்கட்டானாடுவோம் வாரீர்-நளமஹிப
சொக்கட்டானாடுவோம் வாரீர்
இங்கெட்டுமுதிபவே மறுசூதாட வந்தீர்
வைத்தொட்டுப்பாச்சிகையை வைத்தெடுத்துருட்டியே (சொக்)
பாராய்புஷ்கரராஜ நீராவந்தென்றுதல்
பனிரெண்டெனக்குவிழுந்துதே-அதைச்
சேசமாய்விருத்தம் யிருக்காலிருபகடை
ஜெயம்பெறச்சூழ்ந்ததுவே
ஜூரெட்டுமூன்றுத்தொன் னுாக்குவிழுந்ததுகாண்
சோராமலென்கைக்காய் சோடுகட்டிப்போர்ந்தது (பாரா)



கட்டாமலெனதுகாய் வெட்டுப்பட்டாலென்ன
கட்டுவதுபெரிதோ-நளமஹிபா
தொட்டாலெனதுகைக்கு விருத்தங்கள்விழுவதும்
சோடுகட்டுவதரிதோ
நட்டமென்னவிதோ சூட்டுபட்டுத்தொயில்
விட்டவுந்தன்பாச்சிகை-எட்டிப்போச்சுதுபார் (சொக்க)

மறுசட்டாய்க்கிருக்கால் மறக்காய்பனிரெண்டெட்டும்
மறாமல்விருத்தமிதோ-புஷ்கரனே
ஒன்றுந்தன்கறுப்புக்காய் செப்புஞ்சோடுகட்டாமல்
இடப்பதைப்பாருமிதோ
பஞ்சையென்றெண்ணாதே பச்சைமிஞ்சனும்பழம்
அஞ்சாமற்பழுத்தது தோர்க்குமுகனுட்டம் (பாராய்)

நளராஜன்சொல்-விருத்தம்.

பந்தயம்வைத்துத்தோர்த்த பாவிபுஷ்கரனேகேளாய்
உந்தனால்நானுமெத்த உபகாரம்பெற்றுக்கொண்டேன்
எந்தனன்னகருநாடு மிப்போ தென்வசமாய்விட்டு
இந்தநானுமதுதேச மேகுவீரோகுவீரோ

(வ-ம்.) அகோவாருமையா புண்யசீலராகிய புஷ்கரராசனே யாவருக்கும் சுகதுக்கம் வருவதும்போவதும் நிலைபல்ல ஆதலால்நான் உம்முடனேசூதாடி என்னுடையநாடுராச்சியங்களெல்லாம்உம்மிடத்தில் தோர்த்துவிட்டு நாங்கள் ஸ்திரீபுருஷாளிரண்டுபேரும் இருக்கும்போதுகொஞ்சமாகிலும் நீரிவளுக்கு ராஜாவாச்சுதே என்றெண்ணிப்பாராமல் எங்களையும் ஒட்டிவிட்டு வஸ்திரமில்லாமல் வெளியே துரத்திவிட்டமானுபாவனல்லவா இப்போதுநீர் இனிமேல்என்னசெய்யப்போறீர் ஆகிலும் நீர் அப்படிக்குத் தயைதாக்ஷிண்யமில்லாதவராயிருந்தாலும் நானுமபேரில்மிகவும் அதிகபிரியமாயிருக்கிறேன் இப்போதும் இந்தவஸ்திராபரண பூஷணாதிகளை யணிந்துகொண்டு பூர்வமாகிய உம்முடைய புஷ்கரதேசம்போய்ச் சேர்ந்துசுகமாய் அரசாட்சிசெய்துவாருமையாராசனே.

புஷ்கரராசன்சொல்-விருத்தம்.

சக்ராயுதனேவேந்திர தயாபராசரணங்கேளும்
இக்கணமெனதுதேச மேகுவேன்றடையொன்றில்லை
அக்காலத்திருநல்லாற்றானுக்கிணைப்படிநடந்தேன்
எக்காலுமென்னை வைத்தே யிரட்செய்சிரட்சிப்பீரே

(வ-ம்.) அந்தராஜன் சரணமையா சுவாமி ஏகசக்ராதிபதியான மகாராஜனே என்பேரிலொருக்காலுங் குற்றமில்லை அந்தசனியசுவர பகவானால் மையால்கட்டாததல்லாமல் வேறல்லாண் மனபதியச்செய்ததில்லை என்பேரில் தயைசெய்து எப்போதும்போல இரக்ஷித்திட வேணுமையா சுவாமி.

பொது-விருத்தம்.

சூரியகுலத்தனிலுதித்தநளராஜேந்திரன்
சூக்ஷிசெய்தபுஷ்கரனையனுப்பிவிட்டுக்
காரியஸ்தர்மந்திரிசேநாதிபதிமார்கள்
கனத்தக்குடியானபேர்தமையழைத்துச்
சேருடனோரகனையலங்காரஞ்செய்து
தினமுமுகூர்த்தம்பார்த்துத்தானமீந்து
பாரிலுள்ளோர்தெண்டனிடப்பணிந்துபோற்றப்
பரிவொடுபட்டாபிஷேகமுடிகொண்டாரே

தரு-இ-ம்-பூபாளம்-ஏகதாளம்.

பாரெங்குஞ்செழிக்க நளேந்திரன்சிம்மாசனபதி
பதியாகவாழ்ந்தனனே
பேரணிமன்னர் மறையோர்கவிவாணர்
பெரும்புகழ்கூறியே சிறக்குவித்தேத்த
நாரியர்மங்கள காலமொடுக்கவே
ராஜாதிராஜர்கள் காணிக்கைகொடுக்கவே (பாரெங்)

பட்டவர்த்தனர்கள் மகுடவர்த்தனர்கள்
பணிவிடைசெய்திருக்க
மெட்டியர்வாணர்கள் ஆரியர்சுபஞ்சொல்லி
வியப்புடனேமதிக்க
கட்டியங்கூற சாரதிபௌஷியன்
கீர்த்திப்பிரதாபஞ்சொல்ல
துட்டநிக்கிரகஞ்செய்து ஆதிலொருகட்டமை
தோராமற்கொண்டேநல்ல
சிஷ்டபரிபாலனஞ் செய்துதன்மங்களுந்
தினங்குறையாமலே தனதானியங்களும்
அஷ்டலட்சுமிபக லாமல்விளங்காளும்
இஷ்டவைபோகப்ர இஷ்டையுடன்மேன்மேலும் (பா



சத்ரபதிநளராஜன் முப்பத்திரண்டு
தானதருமங்கொடுக்க
பத்தியுடனேதேவாலயம்பூசைகள்
பாங்குடனேநடக்க
சுத்தத்தாருந்தவமுனிவோர்களியாவர்க்குஞ்
சொர்ணாபிஷேகஞ்செய்ய
தொல்புவியாவுஞ் செழிக்கப்பழமுருக்கு
சொரிந்துமும்மாரிபெய்ய
க்ஷத்திரியர் பொங்கமாகக்கூடி
புந்திமகிழ்வுடன் பட்டாபிஷேகஞ்சூடி
உத்தமன்சபைகவானருமைக்கொண்டாடி
ஓமவேள்விகள்செய்ய பூமாரிபெய்ய (பா)

வாழி-விருத்தம்.

சீர்வாழிவிநாயகனுங்குகனும்வாழி
தேவருடன்மும்மூர்த்திதிருநாள்வாழி
பார்வாழிகடலிசைமதியும்வாழி
பாமாதும்பூமாதுமன்னுசொல்வாழி
கார்வாழிமறையோர்தம் மனையும்வாழி
கனவிதமயந்தினளன் கதையும்வாழி
பேர்வாழிராஜர்கவிராஜர்வாழி
இதைப்படித்தாடப்போர்களென்றும்வாழி.

தமயந்திநாடகம்.

முற்றிற்று.

11629